பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 27 மே 2017 | விதி : 50



எரிந்த
நினைவுகள்



மாடு...?



பத்மநாபாவை நேரில்
எச்சரித்த பிரபா



யா/மீசாலை வீரசிங்கம்
மத்திய கல்லூரி

# சூடும் சூதும்




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதுவிதி
PUTHU VITHI

# முரண்பாடுகளை கூர்மையாக்கிய இரு மரணங்கள்

கூட்டமைப்பும் புலிகளும்
10

• தயாளன்

புளொட் - ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பாதிக்கப்பட்ட தரப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்க புலிகள் சமரசமாகத் தீர்த்து வைத்தனர். புளொட்டினால் கைதான ஈ.பி.ஆர்.எல். எவ் வினரை விடுவித்தனர். பின்னர் ஈ.பி. ஆர்.எல்.எவ்வினரால் கைதான புளொட் உறுப்பினர்களையும் விடுவித்தனர். புளொட்டிடம் அகப்பட்ட ஈ.பி.ஆர். எல்.எவ். உறுப்பினரைப் புளொட் தோழிகள் மீசையை இழுத்துச் சித்திரவதை செய்ததால் ஆத்திரப்பட்டே இவர்களைக் கைது செய்திருந்தனர் ஈ.பி. ஆர்.எல்.எவ்வினர். மகிழூரில் நடந்த இந்தச் சமரச முயற்சியின் ஆரம்பத்தில் இரு பகுதியினரும் ஆத்திர நிலையில் இருந்தனர். ஆனாலும் ஒருவரை ஒருவர் தோழர் என்றே கூறிக்கொண்டே கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினர். மாறி மாறி இரு பகுதியினரிடமும் பேசிக்கொண்டிருந்த பசீர் ஒரு கட்டத்தில் தானும் தோழர் என்று சொல்லிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். உடனே சுதாகரித்துக் கொண்டார். இப்படியே கதைத்துப் பழகினால் தமது சகாக்கள் மத்தியிலும் இதே வார்த்தையையே பயன்படுத்த வேண்டுமே - தன்னை நக்கலாகப் பார்ப்பார்களே என்ற எண்ணத்தில் நிதானித்துக் கொண்டார்.





**தோழர் என்ற சொல்லைக் கொச்சைப்படுத்திய ஈழ இயக்கங்கள்!**

'புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இயக்கத்தவர்கள் மூச்சுக்கு முந்நூறு தடவை 'தோழர்' எனச் சொல்வர். அப்படி அழைப்பது செயற்கையாக இருப்பது போல் தோன்றியது புலிகளுக்கு. "யாழ்ப்பாணத்தில் உங்களது தோழர்கள் தூஷணத்தால் பேசுகிறார்களே?" என மட்டக்களப்பிலுள்ள புலிகளிடம் கேட்பதுண்டு. தாங்கள் நட்பு விடயத்தில் இன்னமும் பக்குவப்படவில்லையோ எனப் புலிகள் சிந்தித்ததுண்டு. ஒரு நாள் மாலை கிரான்குளத்தில் ஒரு சந்திப்புக்காகப் போயிருந்தனர் இரு புலிகள். அவ்வேளை பிரதான வீதியால் எதிரெதிரே வந்த அதிரடிப் படையினரின் வாகனங்கள் திடீரென நின்றன. தங்களுக்குள் உரையாடவே சடுதியாக அதில் பயணித்தவர்கள் வாகனத்தை நிறுத்தினர். ஆனால் ஏதோவொரு முற்றுகை நடக்கப்போகிறது எனக்கருதிய புலிகள் இருவரும் ஆற்றங்கரையை நோக்கி விரைந்தனர். ஆற்றில் தொழில் செய்பவர்கள் தோணியைக் கரையில் விட்டு சவளைக் (துடுப்பு ) கொண்டு போய் விடுவார்கள். இவர்கள் இருவரும் அந்தத் தோணிகளில் ஒன்றையும், ஊன்றிப் பயணிப்பதற்காக நீண்ட தடியையும் எடுத்துக்கொண்டு ஆற்றுக்குள் இறங்கினர். சில நிமிடங்களில் தமக்குப் பின்னால் இன்னொரு தோணியும் ஆற்றுக்குள் பயணிப்பதைக் கண்டனர். அவர்களும் இவர்களைப் போலவே சவள் இல்லாமல் வந்தனர். அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர். பண்டரியா வெளியை நோக்கிப் பயணிப்பதே இரு தரப்பினரினதும் நோக்கம். ஆற்றின் மறுகரையை அடைந்ததும் தோழர் தோழர் என்று உரையாடிக்கொண்டே வந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். அவ்வேளை வழமையாகப் போகும் பாதையை விடுத்து இன்னொரு வழியைக் காட்டி "இது கிட்டப் பாதை" என்றார் அவர்களில் ஒருவர். முன்னே சென்ற ஒரு தோழர் அவ்வழியாக நாலைந்து அடி வைத்ததும் திடீரென ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டார். உடனே டேய் ....." என்று தூஷணத்தால் புது வழியைத் காண்பித்தவரைக் கடிந்து கொண்டார் அந்தத் தோழர்.

அப்போதுதான் புலிகளுக்கு ஒரு உண்மை புரிந்தது - இவர்கள் தோழர் என்ற சொல்லை உதட்டளவிலேயே உச்சரிக்கின்றனர். உள்ளத்திலிருந்து அல்ல. உள்ளத்தில் அது ஆழமாகப் பதிந்திருந்தால் பள்ளத்தில் விழுந்ததுமே 'தோழர்' என்றல்லவா அலறியிருக்க வேண்டும்?

பிடல்கஸ்ரோ, சேகுவரா, லெனின் முதலான மகத்தான மனிதர்களின் வாயிலிருந்து இந்தச் சொல் உச்சரிக்கப்பட்டபோது அதற்கு ஒரு கௌரவமான [illegible] சொல்லின் ஆ[illegible] விட்டன ஈழப் போராட்டத்தில் இறங்கிய சில இயக்கங்கள்.

சொற்களின் அர்த்தங்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைவதுண்டு "நாற்றம்" சொல்லுக்கு நறுமணம் என்று அர்த்தம். நாறும் பூ நாதர் என்றும் ஒரு கோவிலிலுள்ள சிவன் அழைக்கப்படுகின்றார். காலப்போக்கில் நாற்றம் என்பதற்கு துர்மணம் என்று பொருள் கொள்ளும் நிலை உருவானது. அது போலவே தோழர் என்ற சொல்லையே எதிர்கால அகராதியில் அருவருப்பாகவோ சந்தேகமாகவோ பார்க்கும் நிலையை இவர்கள் உருவாக்கி விட்டனர்.

• • •

**பத்மநாபாவை நேரில் எச்சரித்த பிரபாகரன் !**

அடுத்த முரண்பாடு வவுனியாவில் இடம்பெற்றது. அங்குள்ள ஓர் அரிசி ஆலைக்கு நிதி சேகரிப்புக்காக சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர். ஆலை சொந்தக்காரர்கள் புலிகளின் ஆதரவாளர்கள். எனவே நாங்கள் புலிகளுக்கு மட்டுமே நிதி வழங்குவோம் எனக் கூறினர். இதனால் வார்த்தைகள் தடித்து முரண்பாடு ஏற்பட்டது. திரும்பிச் சென்றவர்கள் துப்பாக்கி எடுத்துக்கொண்டு வந்து உயிர்ப்பலியெடுத்தனர். இச்சம்பவம் தொடர்பாக சென்னை அடையாறிலிருந்த புலிகளின் தலைமைப் பணிமனையில் ஒரு சந்திப்பு நடைபெற்றது. மகிழடித்தீவுச் சம்பவத்தையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமெனப் பிரபாகரன் நினைத்தார். அப்போது தமிழகத்துக்குச் சென்றிருந்த பசீரையும் அழைத்துக்கொண்டு சென்றார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும், அதன் செயலாளர் நாயகமும், புரட்சிகர இராணுவக் கமிஷன் தலைவரும் எனக் குறிப்பிடப்படும் தோழர் பத்மநாபாவும் இன்னொருவரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

"தும்பு பறந்த பேச்சு" என்று சொல்வார்களே அதுதான் நடந்தது. பேச்சுவார்த்தை என அதைச் சொல்ல முடியாது. "ஓம் தம்பி ஓம் தம்பி" என்பதைத் தவிர வேறு எதையும் பத்மநாபாவின் வாய் உச்சரிக்கவில்லை. குறிப்பிட்ட நாள் அவகாசம் கொடுத்தார் பிரபாகரன். அதற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என ஆணித் தரமாகக் கூறினார். மகிழடித்தீவுச் சம்பவம் புலிகள் மீது பழி சுமத்தும் திட்டமிட்ட நடவடிக்கை எனவும் இது தொடர்பாக பஷீரிடம் மேலதிக விவரங்களைக் பெற்றுக் கொள்ளுமாறும் கூறிவிட்டுப் புறப்பட்டார். தமது தவறினை ஒப்புக்கொண்டு குறிப்பிட்ட வவுனியாச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினரை தமது இயக்கத்திலிருந்து விலத்துவதாக பகிரங்கமாக ஊடகங்கள் மூலம் தெரிவிப்பார்கள் என்றே அவர் எதிர்பார்த்தார். ஆனால் அச்சம்பவத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே அறிக்கை வந்தது.

புலிகளைப் பொறுத்தவரை ஒருவரை இயக்கத்திலிருந்து விலத்துவதே அதி உயர் தண்டனையாகக் கருதப்பட்டது. பாலியல் குற்றம் மற்றும் நிதி மோசடி, துரோகம் போன்றவற்றுக்கே மரண தண்டனை. காலப் போக்கில் துரோகத்துக்கு மட்டுமே கட்டாயம் மரண தண்டனை. குற்றத்தைப் பொறுத்து ஏனையவற்றில் நெகிழ்ச்சிப் போக்கு இருந்தது. ஆனாலும் அது பாரதூரமானதாக இருந்தால் மரண தண்டனைதான்.

ஒருவர் தானாக இயக்கத்திலிருந்து விலகுவது என்பது வேறு. அது சம்பந்தப்பட்ட போராளி எடுக்கும் முடிவு. அதற்கு போராட்டத்தின் மீதான சலிப்பு, பொறுப்பாளர் மீதான அதிருப்தி, குடும்ப நிலைமை போன்ற பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஒருவன் இப்பிறவியில் போராட்டத்தில் பங்குபற்றத் தகுதியற்றவன் - அநீதிக்கு எதிராகத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாமல் அடங்கியிருக்க வேண்டியவன் என்று உணர்த்துவது மிகவும் கூடுதலான தண்டனை. அவன் போராடும் தகுதி படைத்த ஏனையோர் முன்னிலையில் அற்ப புழுவாகப் கருதப் படுவான். இந்த விடயத்தில் தண்டனை வழங்க வேண்டியது ஈ.பி. ஆர்.எல்.எவ். அதை வழங்கும் முடிவை எடுக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். தயாராக இருக்கவில்லை. தனது எச்சரிக்கையையும் பொருட்படுத்த வில்லை. எனவே அடுத்து மேற்கொள்ள வேண்டியது என்ன என்பதை வன்னியிலிருந்த போராளிகளுக்கு அறி வித்தார் பிரபாகரன். விளைவு இதில் சம்பந்தப்பட்ட ரீகன் என்பவரின் ஆயுள் முடிந்தது. அவரது சட்டைப்பையில் இருந்த ரூபாய் நோட்டையும் ஒரு ரவை துளைத்துச் சென்றது. அதனை நினைவுச் சின்னமாக எடுத்துக் கொண்டார் டக்ளஸ் தேவானந்தா. திலீபனுடனான சந்திப்புக்களின் போது இதனை அவர் குறிப்பிடுவதுண்டு.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சூடும் சூதும்

கடந்த 19 ஆம் திகதி அதிகாலை 12.30 மணி. வேட்டோசைகள் பளைப் பகுதியின் துயிலைக் குலைத்தன. அதன் பின்னர் அந்தப் பகுதியின் அமைதி அன்று முழுவதும் தொலைந்து போனது. போர்க்கால நாய்க்குரைப்புகள் அந்தப் பகுதியெங்கும் மீளெழ, தொப்... தொப்... என சப்பாத்தோசைகளும் சிங்களக் கட்டளையிடல்களும் அந்தப் பகுதி முழுதையும் ஆக்கிரமித்தன. சனத்துக்கு ஒரே குழப்பம். புலிகள் ஆயுதங்களை மௌனித்து முதல் நாள் தான் (மே 18) 8 ஆண்டுகள் முடிந்திருந்தன. இந்த வருடங்களாக இல்லாத வேட்டுச் சத்தம் திடீரென தமது ஊரில் கேட்டால் குழம்பத்தானே செய்வார்கள் மக்கள். கொஞ்சம் வெளிச்சம் வந்த பின்னர்தான் ஓரளவுக்கு நடந்ததை ஊகிக்க முடிந்தது.

"இனந்தெரியாதவர்கள் பொலிஸாரின் (119-அவசர பொலிஸ்) வாகனத்துக்கு கச்சார்வெளிப் பகுதியில் ஒரு பற்றைக்குள் இருந்து ரி-56 ரக துப்பாக்கியால் மூன்றுமுறை சுட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மூன்றில் ஒன்று கூட பொலிஸ் காரில் படவில்லை. பக்கத்தில் இருந்த ரயில் சமிக்ஞை,பெட்டியில் மட்டும் ஒரு குண்டு துளைத்துச் சென்றிருக்கிறது. சுட்டவர்களைத் தேடி வேட்டை தொடங்கி விட்டது"

பொலிஸ் தரப்பும், படையினரும் சொல்லிவைத்தாற் போன்று, ஒரே பல்லவியையே திரும்பத் திருப்பப் பாடியவாறு கச்சார்வெளி, இந்திராபுரம், அல்லிப்பளை, புலோப்பளை, பெரிய பளை போன்ற பகுதிகளில் உள்ள எவரும் வெளியேற முடியாதவாறு சுற்றிவளைத்தனர். ஈ, காக்கை கூட வெளியேற முடியாது. அங்குலம் அங்குலமாகக் கண்காணித்தபடி, சுற்றிவளைப்பின் வளையம் சுருங்கத் தொடங்கியது. இன்னொரு பக்கத்தில் மோப்பநாயோடு பொலிஸ் அணியொன்று ஓடத் தொடங்கியது. நாயைவிடவும் பொலிஸாரே அதிக தடவைகள் பற்றைகளை முகர்ந்து முகர்ந்து பார்த்து ஏமாந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு கிலோமீற்றர் இந்த நாய் ரேஸ் நடந்தது. அதற்குப் பிறகு மோப்பநாய் களைத்துப் போய் உட்கார்ந்து விட்டது. 'இனி எதையும் கண்டுபிடித்துக் கிழிக்க முடியாது' என்று நாய்க்கே புரிந்துவிட்டது. நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு ஓரிடத்தில் படுத்துவிட்டது. சுற்றிவளைப்பும் மறுபக்கத்தில் முடிந்திருந்தது. படையினரும் நாயைப் போலவே நாக்கைத் தொங்கப் போட்டபடி திரும்பினார்கள். யாரையும் பிடிக்க முடியவில்லை. காலை தொடங்கிய தேடுதல் மாலையோடு முடிவுக்கு வந்த பின்னர்தான் மக்களுக்கு நெஞ்சுக்குள் தண்ணீர் வந்தது. இல்லாவிட்டால், "நீதான் சுட்டது" என்று சொல்லி, யாரையேனும் ஒப்புக்காகப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ... என்ற பயம் அவ்வளவு நேரமும் இருந்தது. ஆனால், ஏதோ நல்ல காலம். படைத்தரப்பால் எவர் மீதும் புலிச்சாயம் பூசமுடியாது போய்விட்டது.

பளை கச்சார் வெளியில் கடந்தவாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பரபரப்பைக் கிளப்பிய அதேநேரம், தமிழ் மக்கள் தரப்பில் நிறைய சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.

**சந்தேகம் ஒன்று :** சம்பவம் நடப்பதற்கு முதல்நாள்தான் முள்ளிவாய்க்காலில் மே 18 நினைவேந்தல் நடைபெற்றிருந்தது. இம்முறையும் நினைவேந்தலை வடக்கு மாகாண சபை உத்தியோகபூர்வமாக நடத்தி முடித்திருந்தது. இது படைத்தரப்புக்கு மட்டுமல்லாது, தென்னிலங்கையில் உள்ள பேரின சக்திகளுக்கும் கடுப்பை ஏற்படுத்தியிருந்தது. கடந்த வருடம் 'போனால் போகட்டும்' என்று நல்லாட்சி அரசு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கண்டும் காணாமலிருந்தது. ஆனால் இம்முறை பகிரங்கமாகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிரான கருத்துக்களை அமைச்சர்களும் படை அதிகாரிகளும் வெளியிட்டிருந்தார்கள். குறிப்பாக, பாதுகாப்புத்துறை இராஜாங்க அமைச்சர் விஜயவர்த்தன "போரில் உயிரிழந்தவர்களை பகிரங்கமாக நினைவு கூருவதை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்" என்றும் "இனிமேல் இப்படியான நிகழ்வுகளுக்கு இடமில்லை" என்பதை நாசூக்காக சொல்லியிருந்தார். அவர் அந்த வார்த்தைகளை உதிர்த்து உதட்டை மூடுவதற்கு இடையில், முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுக்கற்களை நாட்டி அஞ்சலி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த பாதிரியாரான எழில்ராஜ் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டார்.

விசாரணையின் பின் விடுவிக்கப்பட்ட பாதிரியார் வீடு வந்து சேர்வதற்கிடையில், அவரை முந்திக்கொண்டு, குறித்த நினைவேந்தலுக்கான நீதிமன்றத் தடையுத்தரவு வந்திருந்தது. "இப்படி நினைவேந்தல்களை நடத்துவது மீண்டும் புலிகள் வருவதற்கு வழிசமைத்துவிடும்" என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய கொக்கரித்துக் கொண்டார். எனவே புலிகளை மீள வரச்செய்வதன் மூலமே படைகளைக் களமிறக்கி, மக்கள் மத்தியில் மீண்டும் பயத்தை விதைத்து, இது போன்ற நினைவேந்தல்களைத் தடுக்கலாம் என பேரினவாதிகள் எண்ணியிருக்கலாம். ஆனால், ஆயுதங்களை மௌனித்ததாக அறிவித்த புலிகளை மீளவரச் செய்யமுடியாது. எனவே புலியைப் போன்ற மாயையை உருவாக்க, அரசோ அல்லது மஹிந்த தரப்போ நினைத்திருக்கலாம். வெறுமனே மூன்று வேட்டோசைகள் மூலம் அந்த மாயையை நிஜமாகக் காட்ட முனைந்திருக்கலாம்.

**சந்தேகம் இரண்டு :** துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற பிரதேசம், தாக்குதலுக்கு ஏற்ற இடமல்ல என்பது, சிறுபிள்ளைக்கும் தெரியும். ஏனெனில் எந்த நேரமும் விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களைக் கொண்ட ஏ-9 வீதி அது. மறைவாகப் பதுங்குதல், தப்பி ஓடுதல் என்பனவெல்லாம் அந்த இடத்தில் மிகக் கடினமான விடயங்கள். அப்படிப்பட்ட இடத்தை எதற்காக தாக்குதலாளிகள் தேர்ந்தெடுத்தார்கள்?

**சந்தேகம் மூன்று :** கடந்த வருடம் யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பல்கலைக்கழக மாணவர்களை வெருட்டுவதற்காக பொலிஸார் வைத்த "மேல்வெடி"கூட விஜயகாந்தின் படத்தில் வருவதைப் போல ஒரு ரவுண்ட் அடித்து திரும்பி வந்து இரண்டு மாணவர்களையும் கொன்றிருந்தது. ஆனால் பொலிஸாரின் வாகனத்தை நோக்கி இலக்கு வைத்து நேரே பார்த்துச் சுட்டதில் ஒரு குண்டு கூட அந்தப் பெரிய காரில் படவேயில்லை.

**சந்தேகம் நான்கு :** ரி-56 ரக துப்பாக்கியே சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸ் தரப்பு கூறுகிறது. ஆனால் மூன்று வேட்டுகளே தீர்க்கப்பட்டுள்ளன. அவைகூட இலக்கைத் தாக்கவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் அவர்கள் வேட்டுகளைத் தீர்த்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் மூன்று தடவைகளே சுடுவோம் என்று நேர்த்திக்கடன் வைத்துவிட்டோ, சபதம் செய்துவிட்டோதான் வந்திருக்க வேண்டும்.

**சந்தேகம் ஐந்து:** இரவுவேளையில், அதுவும் அவசரப் பொலிஸ் வாகனத்தில் வருகின்ற பொலிஸார் நிச்சயமாக துப்பாக்கிகளோடுதான் வருவார்கள். தம்மை நோக்கி மூன்று முறை வேட்டுகள் தீர்க்கப்பட்டும்கூட பொலிஸார் மகாத்மா காந்தியை மிஞ்சிய பொறுமையோடு இன்னும் சுடுங்கள் என்று அங்கேயே வாகனத்தை நிறுத்தினார்களே தவிர திருப்பி ஒரு தடவைகூடச் சுடவில்லை இது ஏன்?

**சந்தேகம் ஆறு :** குறிப்பிட்ட நேரம் குறித்த இடத்துக்கு பொலிஸாரின் 119 அவசர கார் ஏன் வந்தது? யாரேனும் தொலைபேசியில் அழைப்பு விடுத்தால் மாத்திரமே அவசரப் பொலிஸார் வருவதுண்டு. (பல வேளைகளில் அழைப்பை எடுப்பதும் இல்லை, வருவதும் இல்லை) அப்படிப்பட்ட பொலிஸ் வாகனம் அந்த நேரம் கச்சார் பகுதிக்கு ஏன் வந்தது என்பது பற்றிப் பொலிஸார் வாய் திறக்கவேயில்லை.

**சந்தேகம் ஏழு :** பொலிஸாரின் பெரிய காரைத் தாக்காத குண்டுகள் ஏன் ரயில் சமிக்ஞைப் பெட்டியைத் தாக்கின? காருக்கும் சமிக்ஞைப் பெட்டிக்கும் வித்தியாசம் தெரியாதவர்களா சுட வந்தார்கள்? ஏதேனும் அரச சொத்து மீது சேதம் இழைத்தால், அது பாரதூரமான குற்றம். வெறுமனே தோட்டாக்கள் வீதியில் வீழ்ந்திருந்தால் அதுபற்றி எந்த வழக்கும் போட முடியாது. ஆனால் அரச சொத்தான ரயில் சமிக்ஞைப் பெட்டி மீது சூடு வீழ்ந்ததால் அது தொடர்பில் கடுமையான நடவடிக்கையை எடுக்க முடியும். அது தெரிந்துதான் காரை விட்டுவிட்டு ரயில் சமிக்ஞைப் பெட்டி மீது தோட்டா பாய்ந்ததுபோலும்.


**சந்தேகம் எட்டு :** தென்மராட்சிப் பகுதியை அண்மித்த கச்சார் வெளியும் மணல்பாங்கான நிலப்பரப்பை உடையது. அந்தப் பிரதேசங்களில் ஏதேனும் குற்றச் செயல்கள் நிகழ்ந்தால் குற்றவாளிகளை கண்டுபிடிக்க அந்தப் பகுதி மக்களிடையே "சுவடு பார்த்தல்" என்ற வழக்கு உண்டு. குற்றவாளிகளின் கால்தடங்களை வைத்து, அதனைப் பின்தொடர்ந்து யார் குற்றம் செய்தவர் எனப் பிடித்து விடுவார்கள். அதே வழக்கத்தை அந்த ஊர் மக்களைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைக் கண்டுபிடித்திருக்க முடியாதா அல்லது தாக்குதலாளிகள் ஓடும்போதே தங்கள் கால் தடங்களை அழித்துக் கொண்டே ஓடினார்களா?

இந்தச் சந்தேகங்கள்தான் இன்னமும் தொடர்கின்றன. ஆனால் படைத்தவனுக்கு மட்டுமல்ல படைத்தரப்புக்கும் உண்மை என்னவென்று தெரியும். மக்களுக்கும்தான்...!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 ரஜினியின் அரசியல் பிரவேசம்



இதோ வருகிறேன்... அதோ வருகிறேன் என நடிகர் ரஜினிகாந்த், இவ்வளவு காலமும் மக்களுக்கு போக்குக் காட்டிக் கொண்டிருந்தார். முன்னரை விட இப்போது தனது அரசியல் பிரவேசத்துக்கான நடவடிக்கைகளை ரஜினி காட்டியிருப்பது பெரும் அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

சிறு விடயத்தையே உள்வாங்கிக் கொண்டாடும் / கொதிக்கும் சமூகவலைத்தளங்களில் ரஜினியின் அரசியல் பிரவேசத்தை முன்வைத்துப் பல வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. தமிழ்நாட்டு தமிழர்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் எழுச்சியை கட்டுப்படுத்தும் நோக்கில் பா.ஜ.க. நகர்த்தும் காயே ரஜினி எனப் பலரும் கருத்துக்களை முன்வைத்தனர். ஆகமொத்தத்தில் ரஜினியின் அரசியல் பிரவேசம் சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. ஆனால் ரஜினி அரசியலில் வெடிப்பாரா புஷ்வாணம் ஆவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## 2 ராஜீவ் நினைவும் பழியும்

சமூகவலைத்தளங்களில் காரசாரமான விவாதங்களைக் கிளப்பிய வாரமாக கடந்த வாரம் அமைந்தது. ராஜீவ் படுகொலையின் 26 ஆவது நினைவு நாளும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. புலிகள் ராஜீவை கொன்றது தவறு என்ற பழைய பல்லவியை சிலர் பாடியிருந்தனர். இவர்களுக்குப் பதிலடி கொடுப்பதாக அமைதிப் படை என்ற பெயரில் ஈழம் வந்த இந்திய இராணுவம் புரிந்த படுகொலைகளை, வன்புணர்வுகளை, அராஜகங்களை பலரும் வெளிப்படுத்தியிருந்தனர். இது சமூகவலைத்தளங்களில் காரசாரமான விவாதம் எழ வழிவகுத்தது.



ஈழத்தில் இந்தியப் படை புரிந்த அட்டூழியங்களை பட்டியலிட்ட பதிவுகள் அக்காலத்தில் வெளியான செய்திகள், கட்டுரைகள், படங்களை ஆதாரங்களாக வெளியிட்டன. தமிழகத் தமிழர்கள் சிலருடன் ஈழத்தவர்கள் சிலரும் ராஜீவ் படுகொலைக்கு எதிரான கருத்துக்களை பதிவிட்டிருந்தாலும் இந்தியப் படைகளின் அட்டூழிய, அராஜக செயல்களுக்கு கற்பிதம் கற்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 3 பாவம் சம்பந்தன்



எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்ததும் போதும் படும்பாடும் போதும் என்றாகி விட்டது ஐயா சம்பந்தனுக்கு. தொடர்ச்சியாக அடிக்கு மேல் அடிவாங்கிக் கொண்டிருக்கும் தலைவராகிவிட்டார் அவர். பாவம் அவரை ரொம்ப நல்லவர்னு சுமந்திரன் சொல்லிவிட்டாரோ என்னமோ..?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் உரையாற்றப் போன கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை வெளியேறுமாறு மக்கள் எழுப்பிய கூச்சல் குழப்பங்கள் சமூகவலைத்தளப் பதிவர்களுக்கு நல்ல தீனி போட்டன.

2016 தீர்வில் என்பது முடிந்து ஒரு வாரத்துக்குள் நல்ல முடிவு கிடைக்கும் என சம்பந்தன் கூறப்போய் சமூகவலைத்தளங்களில் சம்பந்தன் நல்லா வாங்கிக் கட்டுகிறார்.

பேரென்ன?

தேவசேனா 😒



ஜான்சீனா மாதிரி இருக்க தேவசேனானா வச்சிருக்காய்ங்க.












## இந்தவார மீம் (Meme)




பார்த்த இடமெல்லாம் மனைவியின் முகம் தெரிந்தால் அதற்கு இரண்டு காரணமுண்டு.

கணவன் மனைவிமீது மிகுந்த அன்புள்ளவனாய் இருப்பான், அல்லது,



"Zoo"வில் இருப்பான்.😂

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## மீண்டும் பொது பல சேனா

மீண்டும் சிங்கள – முஸ்லிம் இன முறுகல் நாட்டில் தலைவிரிக்கத் தொடங்கிவிட்டது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பதினைந்துக்கும் மேற்பட்ட வன்முறைகள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் எந்தவித ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்காதபோதும் சிங்களப் பேரினவாதிகளின் வன்முறைகள் தீவிரமடைந்து வருகின்றன.

வழக்கம்போலவே இந்தத் தீவிர வன்முறைகளுக்கு மையப்புள்ளியாக விளங்குகிறார் பொது பல சேனாவின் ஞானசாரதேரர். மஹிந்தவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அடங்கிக் கிடந்த ஞானசாரர் இப்போது மீண்டும் கொடுக்கு முளைத்த பூச்சியாக முஸ்லிம்களைக் கொட்டத் தொடங்கியுள்ளார்.

திடீரென முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தோற்றம் பெற்றமைக்கு காரணம் பலருக்கும் புரியவில்லை. ஆனால் சற்று உற்றுநோக்கினால் உண்மை தெளிவாகத் தெரியும். மே தினத்துக்குப் பின்னர்தான் கடந்த இரண்டு வருடங்களாக உறங்கிக் கிடந்த இனவாத மிருகம் மீண்டும் சிலிர்த்துக்கொண்டு பாயத் தொடங்கியுள்ளது. அதற்கு காலி முகத் திடலில் மஹிந்தவுக்காகத் திரண்ட லட்சக்கணக்கானோரே காரணம்.

திரும்பவும் மஹிந்த அலை எழுச்சியுறுவது பொது பல சேனாவுக்கு உத்வேகத்தை அளித்துள்ளது. எனவே மஹிந்தவை அரியணையில் ஏற்றுவதற்கான தன்னால் இயன்ற அத்தனையையும் செய்வதற்கு பொது பல சேனா என்ற விசுவாச நாய் முடிவெடுத்தது. அதன் விளைவே முஸ்லிம் மீதான அதன் குரைப்பொலியும் வெறிகொண்ட பாய்ச்சலும்.

மஹிந்த கடந்த தேர்லில் மைத்திரியிடம் தோற்றமைக்கு பொது பல சேனா மிக முக்கிய காரணம். அந்த அமைப்பு முஸ்லிம் மக்கள் மீது மேற்கொண்ட வன்முறைகளை மஹிந்தவுக்கான முஸ்லிம் வாக்குகளை மைத்திரியின் பக்கம் திருப்பின. இப்போது அதே பொது பல சேனாவை வைத்துக்கொண்டு மைத்திரி பக்கம் இருக்கும் முஸ்லிம் ஆதரவை தன் பக்கம் இழுக்க மஹிந்த முயல்கிறார். ஏனெனில் பொது பல சேனா செய்கின்ற ஒவ்வொரு வன்முறையும் அரசின் மீதான அதிருப்தியாக மாறும்.

அத்தோடு மைத்திரியும் ரணிலும் மஹிந்தவைப் போல பகிரங்கச் சண்டியர்கள் அல்லர். அவர்கள் புன்னகைத்துக்கொண்டே விஷம் வைக்கும் ராஜதந்திரத்தையே அதிகம் நம்புபவர்கள். எனவே பொது பல சேனா விடயத்தையும் நோகாமல் கையாளவே விரும்புவார்கள். இதனால் பொது பல சேனா மீது அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற விம்பத்தை முஸ்லிம் மக்களிடையே ஏற்படுத்தும். இந்த மாற்றம் மைத்திரி அரசு மீதான அதிருப்தியை அதிகப்படுத்துவதுடன் மீண்டும் மஹிந்த பக்கம் முஸ்லிம்கள் சாய்வதற்கான ஏது நிலையை உருவாக்கும்.

மஹிந்த விரும்புவது இதைத்தான். பொது பல சேனாவின் நோக்கமும் அதுவே. அதற்காகத்தான் எங்கெல்லாம் பதற்றத்தை உருவாக்க முடியுமோ அங்கெல்லாம் அதன் கால்களை அகலப் பரப்பி வருகிறது. தமிழ் மக்களை போர் கொண்டு அடக்கியதைப் போல முஸ்லிம் மக்களை பொதுபல சேனா மூலம் அடக்கலாம் என பேரினவாதிகள் நம்புகிறார்கள். இரு சிறுபான்மை இனங்களும் தலையெடுக்காமல் தமக்கு அடங்கி இருப்பதையே எப்போதும் பேரினம் விரும்புகிறது.

அதனை தன்னுடைய அரசியலுக்கு ஆதாயமாக பயன்படுத்துகிறது. இந்த ஆதாய விளையாட்டில் பாதிப்புறுவது தமிழர் – முஸ்லிம் என்ற சிறுபான்மை இனத்தவர் மட்டுமே.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# தமிழர்கள் மறக்கவில்லை


யாழ் பல்கலைக்கழகம் நினைவேந்திய, வலி சுமந்த வைகாசிப் படுகொலைகள் தொடர்பில்,விஞ்ஞானபீடத்தில் அங்கு பயிலும் சிங்கள மாணவொருவரின் மனப்பார்வையாகிய அவரது முகநூல் பதிவேற்றமும்...அதன் தமிழ் மொழிபெயர்ப்பும்..!!

"மறக்க முடியாது, மன்னிக்கவும் முடியாது, தமிழ் இன அழிப்பு நாள் மே 18" இவ்வாறே தமிழ் எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. அதில் மலர் ஒன்று இருக்கிறதே, அதுதான் ஈழ இராச்சியத்தின் தேசிய மலர், அந்த சிகப்பு, மஞ்சள் நிறமே அவர்களின் கொடியின் வர்ணம்.

இதைப் பார்க்கும் போது கோபமும் வெறுப்பும் வருகிறதா? மீண்டும் யுத்தம் புரிய தோன்றுகிறதா? ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் எங்களுக்கு அவ்வாறு தோன்றவில்லை. பெரிய ஏமாற்றமே ஏற்படுகிறது. இவர்களை நினைத்து அல்ல, எம்மவர்களை (சிங்களவர்களை) நினைத்து.

நாங்கள் கண்ணியமற்ற முறையில் நடந்துகொள்கிறோம். ஒரு சிங்களவராக நான் இதை கூறுவதில் வெட்கமடைகிறேன். எங்களுக்குள் எந்த வித ஒற்றுமையும் இல்லை. இந்த யாழ் பல்கலையினுள்ளே நாம் அடித்துக் கொள்கிறோம். ஒருவரை ஒருவர் குறைக்கூறிக் கொள்கிறோம். இப்படி எமக்குள்ளே ஆயிரம் பிரச்சனைகள்.

ஆனால் இங்குள்ளவர்கள் அவ்வாறில்லை. அவர்களுக்கு அன்றும் இன்றும்(நாளையும்) ஒரே பிரச்சினை. அது அவர்களின் இன உரிமையைப் பாதுகாக்கும் பிரச்சனை. இதுவே இங்கு நாம் தெரிந்து கொண்டோம். இவர்கள் எப்போதும் இவர்களுக்காக இறந்தவர்களை மறக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் அவர்களை நினைவு கூருகின்றனர். இங்குள்ள அரசியல்வாதிகள் பணமோகம் பிடித்தவர்களில்லை. அவர்கள் எங்கும் எப்போதும் கதைப்பது அவர்களின் உரிமையை பற்றி மட்டும் தான்.


Comments
Indrajith Kumara
20 May at 10:50a.m.

අමතකද කළ නොහැකියි..සමාවද දිය නොහැකියි. දමිළ ජාතිය වැනසූ දිනය මැයි 18. දෙමළ අකුරින් ගහලා තියෙන්නේ ඒක. එතකොට ඔය මලක් වගේ එකක් තියෙන්නේ..ඒක තමයි නියඟලා මල ඊළාම් රාජ්‍යයේ ජාතික පුෂ්පය. ඔය රතු කහ කොඩි තමයි කොටි සංවිධානය භාවිතා කළ වර්ණ.

දැන් මේක දකිද්දි ලොකු තරහක් වෛරයක් එනවද? යුද්ධ කරන්න හිතෙනවද? මේ යාපනේ ඉන්න අපිට නම් එහෙම නෑ. අපිට එන්නේ ලොකු කලකිරීමක්. මෙයාලා ගැන නෙවෙයි..මේ අපි ගැනමයි.

අපි මහ කුහක ජාතියක්. සිංහලයෙක් විදියට මෙහෙම කියන්න වීම තමයි ලොකුම ලැජ්ජාව. වදපු අම්මා තාත්තා පවා අමතක කරන මහ නින්දිත ජාතියක් අපි. අපේ කිසිම එකමුතුවක් නෑ. එකෙකුට එකෙක් නෑ.යාපනේ කැම්පස් ඇවිල්ලත් අපි අපි ගහ මරා ගන්නවා. අපිට කතා කරන්න

Write a comment...

சிங்கள மாணவரின் முகப்புத்தகப் பதிவு

எமது நாட்டில் மூன்றோ நான்கோ தமிழ் பத்திரிகைகள் மட்டுமே உள்ளது. ஆனால் அவையும் அவர்களின் உரிமைப்பிரச்சனையை பற்றிக் கதைப்பதில் பின்னிற்பதில்லை.


தென்னிலங்கையில் இதுவரை எத்தனையோ பாலியல் துஷ்பிரயோகம் நிகழ்ந்துள்ளது. அவை எல்லாம் எமக்கு இன்று நினைவில் இல்லை.ஆனால் வித்தியா படுகொலையை இவர்கள் இன்றும் மறக்கவில்லை. வித்தியா படுகொலைக்காக பெரிய போராட்டம் நடந்தது. ஒரு இனம் என்ற ரீதியில் அனைவருட முன்னின்றனர்.

ஆனால் நீங்கள் இதையெல்லாம் ஒரு பக்கம் வைத்துவிட்டு நான் தமிழர்களுக்கு சார்பானவன் என்று திட்ட ஆரம்பிப்பீர்கள். இதோ அவர்களுக்கும் பதிலளிக்கிறேன். நான் இதை சிங்கள மொழியில் பதிவிட்டுள்ளேன். தமிழர்களுக்கு புரியப்போவதில்லை. நான் தமிழர்களுக்கு எதிரான கருத்தை பதிவிட்டுள்ளேன் என்றே எண்ணுவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு இவ்வாறு பதிவிடும் ஒரே சிங்களவர் நான் மட்டுமே. நான உங்களுக்கு( சிங்களவர்களுக்கு) புரிய வைக்கவே இவ்வாறு பதிவிடுகிறேன்.

ஒரு இனத்தவர்களாக நம்மால் முடியாத பல விடயங்களை அவர்கள் ஓர் இனமாக ஒற்றுமையுடன் சாசித்துள்ளனர். தமிழர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய உள்ளது. அவர்கள் இன்று முடியாவிட்டாலும் நாளை முடியாவிட்டாலும் நூறு வருடங்களானாலும் அவர்களின் உரிமையை வென்றெடுப்பர். நாம் இதே போல் என்றும் குறை கூறிக்கொண்டிரிப்போமேயானால் நாம் முன்னேறுவது கடினம்.

K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுப்பான பதவி பொறுப்பற்ற பேச்சு

■ ஆர்.கார்த்திகேசு

“கண்ணால் கண்டதும் பொய். காதால் கேட்டதும் பொய். தீரவிசாரித்து அறிவதே மெய்” என்று எனது அப்பு அடிக்கடி சொல்லுவார். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் மற்றவர்களைத் தீண்டாது வாழ்வதே சிறப்பான வாழ்க்கை என்கிறது மதம். இதையே அனைத்து மதத்தினரும் வலியுறுத்துவதைக் கேட்டிருக்கிறோம். வதந்திகள் பரப்புவது குற்றம் என்கிறது சட்டம். அதுவும் பொது மக்கள் மனதில் பொய்யை விதைக்கின்ற வதந்திகளையும், பேச்சுக்களையும் வன்மையாக அது கண்டிக்கிறது. பிற தேசத்தில் ஒருவன் தன்னைப் பற்றி யாராவது குற்றம் சுமத்துகின்ற பட்சத்தில், அது ஆதாரமற்றதாகக் காணப்பட்டால் அதற்கெதிராக மான நஷ்ட வழக்குத் தொடர்ந்து பெரிய அளவில் சன்மானமும் பெற்றுக் கொள்ள சட்டம் இடம் கொடுக்கிறது. இது பொதுவாகத் தற்போது எல்லோராலும் அறியப்பட்ட விடயம். அதுவும் படித்த மேல்வர்க்கத்தினர்வரிசையில் உள்ளவர்களில் “இதைத் தெரியாது” என்றும் யாரும் சொல்லிவிட முடியாது. அதுவும் யாழ்.மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் பல லட்சம் மக்களைக் கொண்ட ஒரு சமூகத்தை அவர் வழிநடத்துபவர். அதுவும் அவர்களுக்கெல்லாம் வழிகாட்டுபவர். அவர்கள் பிரச்சினைகளைத் தீர விசாரித்து தீர்ப்புச் சொல்லுகின்றதொரு நீதிபதி. இத்தகைய பொறுப்பிலுள்ள ஒருவர் மக்கள் கூடி நின்ற ஒரு சமூகவெளியில் பொறுப்பற்றதானதொரு வாக்கு மூலத்தை தந்திருப்பது மக்களை விசனப்பட வைத்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை அடிகளார் ஒரு பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டிருப்பதாகத்தான் பார்க்கிறேன். சாதாரணதொரு அரசியல்வாதியோ அல்லது சபைத் தலைவரோ இப்படிப் பேசி இருந்தால் காணாமல், சட்டை செய்யாமல் அதைக் கடந்து போய்விடலாம். நல்லதொரு வழிகாட்டி இப்படி இடறிவிடக் கூடாது என்பதே எனது நோக்கம்.

கடந்த 07.05.2017 அன்று பத்திரிகைகள் செய்தி அதுவாகத்தானிருந்தது. பத்திரிகைகள் அந்தச் செய்தியை ஊதித்தள்ளியிருந்தன. ஒரு ஆய்வாளர் என்னைத் தொலைபேசியில் அழைத்து “ஒரு பொறுப்பானவர் இப்படிப் பேசியிருகக் கூடாது” என்று அதிருப்தியை வெளியிட்டார். இத்தனைக்கும் அவர் ஒரு நடுநிலையாளர் என்று குறிப்பிட விரும்புகிறேன். இதேபோலப் பல அதிருப்தியாளர்கள் இருக்கக் கூடும். தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் பகிரங்கமாக மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் கால்களில் வீழ்ந்து வணங்குவதைப் பலமுறை கண்டிருக்கிறேன். ஆனால் இதுவரை இலங்கையில் யாரும் வீழ்ந்து வணங்கி பதவி அந்தஸ்துப் பெற்றதாகச் செவிவழிக் கதைகள்கூட இல்லை. தமிழ் நாட்டினளவுக்கு இன்னும் நாம் கேவலப்பட்டுப் போகவில்லை என்று நான் இன்னும் எண்ணுகிறேன். திறமைகள் இன்னும் எம்மத்தியில் மதிக்கப்படுவதாகத்தான் சொல்ல முடிகிறது.

யாழ்.பல்கலைக் கவுன்ஸில், துணைவேந்தர் தெரிவை நடத்தி, ஜனாதிபதியின் சிபார்சுக்கென அனுப்பிய பட்டியலில் காணப்பட்ட மூவரும் அப்பதவிக்கு தகுதியுள்ளவர் என இனங்காணப்பட்டவர்களே. அதில் யாரை வேண்டுமானாலும் ஜனாதிபதி நியமிக்கலாம் என்பதே நடைமுறை. இருந்தும், இழுபறியிலிருந்த நியமனத்தில் பட்டியலில் காணப்பட்ட மூவருக்கும் சிபார்சுகளும் அழுத்தங்களும் கொடுக்கப்பட்டதாக இணையச் செய்திகள் வெளியாகியிருந்தன. கவுன்சில் அனுப்பிய பட்டியலில் காணப்படாத ஒருவர் இப்படி நியமனம் பெற்றால் ஆயர் பெற்றுக் கொண்ட கண்காணாத செவிவழிக்கதையை உண்மை என்று நம்பலாம். அப்படி நடக்கக் கூடிய வழி முறை இதற்கு முந்திய காலங்களில் காணப்பட்டதையும் மறப்பதற்கில்லை. இதுவரை இருந்துவிட்டுச் சென்றிருக்கும் அம்மையார் முழுக்க முழுக்க அரசியல் சிபார்சுக்குட்பட்டவர். அதுவும் காலநீடிப்போடு இருமுறை அப்பதவியில் இருந்தவர். அத்துடன் இறுதியாகக் கூட சில நாட்கள் கால நீடிப்புக்குட்பட்டவர். அதற்கு முன்பதாக இருந்த ஒருவரும் கவுன்சில் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருந்தவர். ஆயர் பேச்சின் காணொளி வைரலாக இணையத்தில் பரவியிருந்தது. அதில் மூன்றாவது இடத்திலுள்ளவர் தெரிவாக்கப்பட்டதாக அவர் சொல்லியிருப்பது சரியான தகவல் அல்ல என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

வண. ஆயரின் பேச்சு பற்றிய செய்திக்குறிப்புகள் “ துணை வேந்தர் பதவியைக் கைப்பற்ற அரசியல்வவாதிகளின் கால்களில் வீழ்வதா?” என்ற தலைப்பில் பின்வருமாறு காணப்பட்டது. ”முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டவரைவிட, அடுத்த நிலையில் உள்ளவர் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்து துணைவேந்தராக வந்திருக்கிறார் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். துணை வேந்தர்கள் இவ்வாறு அரசியல்வாதிகளின் கால்களில் வீழ்ந்து பதவிக்கு வந்தால் மாணவர்கள் மதிப்பார்களா? விரிவுரையாளர்கள் மதிப்பார்களா? என்றும் கேள்வி எழுப்பினார்.” என்று முடிகிறது.

ஆதாரமற்றுப் பேசுபவர்கள் அரசியல்வாதிகள். அவர்கள் தமக்கு எதிராக உள்ளவர்கள் பற்றி எதையாவது பேசிச் சேறு பூசுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்கள் பேச்சு ஒரு போதும் நடுநிலையானதாக இருக்காது. ஒரு சமூக அக்கறையுடையதாக இருக்காது. எனவே வண.ஆயரின் இந்தப் பேச்சுக் கூட ஒரு அரசியல் பின்னணி உடையதா அல்லது அரசியல் உள்நோக்கம் கொண்டதா? என மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அவர் பேச்சை எந்தகைய கோணத்தில் பார்த்தாலும் சமூகப்பொறுப்போடு பேசியிருக்கிறார் என்ற விடயத்தைக் காணமுடியவில்லை.


துணைவேந்தர் பதவித் தேர்விலே அல்லது சிபார்சிலே கோளாறு இடம்பெற்றுள்ளதாக ஆணித்தரமாகக் குற்றச்சாட்டை முன்வைக்கும் வண.ஆயர், தனது தலைப்பிட்ட கடிதமொன்றினூடாக அதை விவரித்து இந்த நாட்டின் அதிமேதகு ஜனாதிபதிக்கு ஏன் தெரிவித்திருக்கக்கூடாது. ஒரு பொதுவெளியில் பேசுவதைவிடச் சிறந்த முறை அதுவாகத்தானிருக்கும் என்பது எனது எண்ணம். ஒரு மேற்கத்தைய கலாசாரத்தினூடாக வந்த சமூகத்தின் கலாசாரமும், பண்பாடும் அதுவாகத்தானிருக்கும். அல்லது அது தொடர்பாக உரியவர்களை அழைத்து ஒரு ஊடக மாநாடு கூட நடத்தியிருக்கலாம். அதைவிட்டு விட்டு இப்படியானதொரு நிலையை எடுத்துக் கொண்டதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியவில்லை. நியாயமற்றதொரு துணைவேந்தர் தெரிவு முழுச் சமூகத்திற்கும் எதிரானதொன்று. அதைத் தட்டிக்கேட்க எல்லோருக்கும் உரிமை உண்டு. எதிர்ப்பை தெரிவிக்கவும், வெளிப்படுத்தவும் பல வழிகளுண்டு. அதுவும் அத்தகைய அணுகுமுறையைக் கற்றவர் கற்றதின் படி கடைப்பிடிப்பதுவே சாலச்சிறந்தது. குறிப்பாக ஜனாதிபதியின் தெரிவைச் சரியில்லை என்று சொல்ல வந்த வண.ஆயர் அதை முறைப்படி சொல்லியிருக்கலாம். ஒரு அரசியல்வாதியைப் போல மேடையிலல்ல. பத்திரிகைகளுக்குப் பகிரங்கக் கடிதமொன்றையும் எழுதியிருக்கலாம். இதை ஒரு சமூகப்பொறுப்பு என்ற வகையில் கையாளப் பல வழிகளுண்டு.

“நாம் இப்போது புத்திஜீவிகளை இழந்து கொண்டிருக்கிறோம். புத்திசா தூரியமானவர்கள் அரசியல் பின்னணியுடன் செயற்படுகின்றனர். தெற்கில் இருந்துதான் எமக்குப் பின்னடைவுகள் வருகின்றன என்றில்லை. நாங்களே எமக்குக் குழிதோண்டுகின்றோம். யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற துணைவேந்தர் நியமனம் அதை எடுத்துக் காட்டுகிறது.” என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஒளிவழிப் பயணம்

■ முகமாலை சேகர்

இச்சிறு கதையின் ஆசிரியர் முகமாலை சேகர் ஒரு மாற்றுத் திறனாளியாகப் பிறந்தவர். பிறவியில் பார்வையற்றவர். தனது ஆர்வத்தினாலும், விடா முயற்சியினாலும் கற்றுத்தேர்ந்து யாழ். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானவர். அவர் ஒரு பட்டதாரி. இன்று நல்லூர் பிரதேச செயலகத்தில் உள வள மேம்பாட்டாளராகக் கடமையாற்றும் தருமசேகரம் என்ற சேகர் மாற்றுத் திறனாளிகளுக்காக கருவி என்ற பெயரில் ஒரு மேம்பாட்டு நிறுவனத்தை நடத்திவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகாலை நான்கு மணி ஆகிவிட்டது என்பதைப் பிள்ளையார் கோயில் மணி உணர்த்தியது. கண்களைக் கசக்கியபடியே கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டான் நந்தன். இரவு வெகு நேரம் வரை அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அப்படி, இப்படியென ஆயிரம் கனவுகள். நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய மீள் பரிசீலனை. இவ்வாறாக தொடர்ந்து மன அலைகளில் சஞ்சரித்த எண்ணங்களை சுமந்து தூக்கத்தைத் தொலைத்திருந்தான். இன்றைய நாள் அவனுக்கு மட்டுமல்ல வீட்டாருக்கும் மகிழ்ச்சியான நாள்.

"சொய்...ய்...ய்..." என்ற சத்தம் அம்மா தோசை சுடுகிறாள் என்பதை தெளிவாக்கியது. எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டு அறைக்கு வெளியே வந்தாள்.

"வழமையாக ஏழு மணிக்குத் தான் எழும்பிறவர், இண்டைக்கு நான்கு மணிக்கே எழும்பி விட்டார்" என்று சொல்லி தங்கை மீரா நளினமாகச் சிரிக்கிறாள். 'ஓ!' இவளும் என் சந்தோஷத்துக்காகப் பங்கெடுக்க முன்னதாகவே எழுந்து விட்டாள் என்று நினைத்த போது அவன் நெகிழ்ந்து போனான். இருந்தும் செல்லமாக,

"உதில் இருந்து சும்மா விளல் அலம்பாம, போய் படிக்கிறதப் பார்!"

எனப் பொய்யான கோபத்துடன் வார்த்தையை விட்டெறிந்தான். தொடர்ந்து தன் அலுவல்களைக் கவனிக்கலானான்.

நந்தன் பற்றி ஆரம்பத்தில் வீட்டாரிடத்தே அதிகமான கவலைகள் இருந்தது என்னவோ உண்மைதான். கால ஓட்டத்தில் நடந்த மாற்றங்கள் அதைத் தலைகீழாக மாற்றி விட்டது. சிறுபராயத்திலேயே நந்தன் வீட்டிலிருக்கும்போது அயலவர்களும், உறவினர்களும் அவனது உள நிலையைப் பாதிக்கும் வகையில் பேசியும், நடந்தும் உள்ளனர். அதேவேளையில் அவனில் அவனையறியாமலே, ஒரு தாழ்வுணர்ச்சி குடிகொண்டிருந்தது. அவர்களையெல்லாம் சந்திக்கவே அவன் அச்சப்பட்டான். "தான் ஒரு வேண்டாத பிறவியாக உருப்பெற்று விட்டேனோ" என்ற எண்ணம் அவனை முழுமையாகத் தொற்றிக் கொண்டது.

"என்ன கறுமத்துக்கு இந்தப் பிள்ளைக்கு இப்படி வந்ததோ தெரியாது. ஏதும் கோயில் குறைபாடுகளா இருக்கும். இந்த கிரகங்களுக்கு ஒருக்கா அர்ச்சனை செய்யுங்கோ! "

இப்படியான பலர்தன் தாயிடமும், தந்தையிடமும் கூறக் கேட்டிருக்கிறான்.

" இந்தப் பிள்ளை காலம் பூராவும் உங்களுக்குச் சுமையாகத் தானே இருக்கும்"

இப்படிக் கூறுபவர்களிடமெல்லாம் வெளிப்படுவது அனுதாபமா, அக்கறையா? என பகுத்தறிந்து கொள்ள அன்று அவனால் முடியவில்லை. இப்படியான பேச்சுக்கள் அவனை விட அவனது வீட்டாரை அதிகமாகவே பாதித்திருந்தது.

எத்தனை நாள் தாய் அவனைக் கட்டிக்கொண்டு அழுதிருப்பாள். அப்போது அவனால் புரிந்து கொள்ள முடியாதிருந்த போதும் இப்போது 'அவள் ஏன் அழுதாள்' என்பதை புரிந்து கொண்டிருக்கிறான். மருத்துவ சிகிச்சை, கோயில் குளமென்று காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தபோது தான் அவர்களது குடும்ப நண்பர் ஒருவர் "இவனை சும்மா வீட்டிலை வைச்சிருந்து பழுதாக்கம படிக்க விடுங்கோ. அதற்கான வசதியெல்லாம் இப்ப வந்திட்டுது" என்று கூறத் தந்தை உடனே சம்மதித்து விட்டார். ஆனால் தாய்க்கு ஏதோ இனம்புரியாத தயக்கம், ஒருவித தவிப்பு. ஆனால், நந்தனின் விடாப்பிடியான போக்கு அவனை கல்வியுலகில் பிரவேசிக்க வழி செய்தது.

படிப்படியாக அவனுக்கிருந்த கூச்ச சுபாவம் அகலத் தொடங்கியது. நண்பர்கள், ஆசிரியர்கள், அறிவுலக சமூகம் என்று அவனது தொடர்புகள் அதிகரித்துக் கொண்டே போனது. பாடசாலை பின் பல்கலைக்கழகம் என்று அவனது கல்வி வாழ்க்கை தொடர்ந்தது. இப்போது அவனொரு கலைப்பட்டதாரி. அது மட்டுமன்றி இன்று ஆசிரியர் பணியில் இணைந்து கொள்ளப் போகிறான். இது அவனுக்கு மட்டுமல்ல வீட்டிலுள்ளோருக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

கல்வி கற்கும் காலங்களில் கூடச் சில சமயங்களில் உள ரீதியான துன்பங்களுக்கு அவன் ஆட்பட்டிருக்கிறான். அந்தச் சமயங்களிலெல்லாம் நல்ல நண்பர்களின் அன்புக் கரங்களும், சில வாண்மை உள்ள ஆசிரியர்களின் அறிவுரைகளும் அவனைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றன. அத்தகைய நல்ல உள்ளம் படைத்தோர்களில் பலர் இப்போது அவன் அருகில் இல்லை. சிலர் வாழ்க்கைக் கோலத்திலிருந்தே விலக்கப்பட்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் நினைத்த போது ஓர் இனம்புரியாத உணர்வால் நெஞ்சு கனத்தது. அது தவிர அவனை ஏளனமாக பார்த்தவர்களினதும், சுமையெனக் கருதியவர்களினதும் எண்ண ஓட்டங்கள் மாற்றமடைந்திருக்கின்றன.

" அவனுக்கென்ன படிச்சிட்டான். வேலையும் கிடைக்கப் போகுது! இனி ராசா மாதிரி இருக்க வேண்டியது தானே"

பக்கத்து வீட்டு பீதாம்பரண்ணை கூறக் கேட்ட போது அவனுக்குச் சிரிப்புத் தான் வந்தது. அவனது தாய், தந்தையரிடம் பற்றியிருந்த நந்தனைப் பற்றிய அர்த்தமற்ற கவலைகளெல்லாம் ஓடி மறைந்தன.

"என்ர பின்னடிக்கு நான் தம்பியோட தான் இருப்பன்" என்று ஒரு நாள் சாவதானமாக கதைத்துக்கொண்டிருக்கும் போது தாய் சொன்னாள். அவளது ஆசையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று அவன் முடிவு கட்டியிருந்தான்.

"அண்ணே உன்ர ரவுசரும், சேட்டும் எடுத்து வச்சுக்கிடக்கு, முதல் மாச சம்பளத்திலை எனக்கொரு சாறி வாங்கித்தர வேணும் சொல்லிப் போட்டன்". கூறிய தங்கையை நோக்கி அர்த்தமுள்ள புன்னகையொன்றை உதித்தான் நந்தன்.

" சும்மா இரு பிள்ளை? கொண்ணனை இடைஞ்சல் படுத்ததை அவனை எப்பன் அமைதியாய் வெளிக்கிடவிடு!"

என்று கூறியவாறு தாய் உணவுப் பொட்டலத்தை அவன் கொண்டு செல்ல இருந்த பைக்குள் திணித்தாள்.

"அவளுக்கு சும்மா என்னோட ராத்தாட்டி விடியாது. அவளை அவளின்ரை போக்கிலை விடுறது தான் நல்லது" பிணை எடுக்கும் பாணியில் கூறினான் நந்தன்.

" சரி, சரி முதல்நாள் போகேக்கையே அதை விட்டுட்டு போட்டன், இதை விட்டுட்டு போட்டன் என்று பிறகு புலம்பாமல் எல்லாத்தையும் ஒழுங்கா எடுத்து வை!" என்று தாய் கண்டிப்புடன் கூறினாள்.

காலைப் பொழுதுக்கே உரிய பரபரப்பை வீதி உள்வாங்கியிருந்தது. வாகனங்களின் தொடர்ச்சியான இரைச்சலையும், மக்களின் பரபரப்பான நகர்வுகளையும் அவதானித்தவாறே சூரியன் புவிப்பரப்பில் தன் கதிர்க்கரங்களை படர விட்டிருந்தான்.

நந்தனுக்கு தான் முதன் முதலாக வேலைக்குப் போகிறவன் என்ற ஆனந்தம் ஒரு புறமும் பதட்டம் மறுபுறமுமாக அவனை ஆட் கொண்டிருந்தது. வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது.

" அம்மா ! மாறன் வந்திட்டான் நான் போட்டு வாறன். வாசலில் வந்தது தன் நண்பன் மாறன் தான் என்பதை அவன் ஊகித்திருந்தான். மாறனும் அவனும் பள்ளிப்பராயத்திலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். பல்கலைக்கழகத்திலும் அப்படித்தான். நந்தனின் முன்னேற்றப் பாதையில் வேண்டிய உதவிகளையெல்லாம் மாறன் சிரமத்தைப் பாராது செய்வான். இப்போதும் ஒரே பாடசாலையிலேயே இருவருக்கும் நியமனம் கிடைத்திருக்கிறது. தன் பையை தோளில் மாட்டியபடி நந்தன் மீண்டும்

" சரியம்மா நான் போட்டு வாறன்" என்றவன் தாயிடமிருந்து பதில் வராததால் " என்னம்மா ! பேசாமல் இருக்கிறியள்" என்றான்.

" ஓம் தம்பி போட்டு வா ! " என்று தாய் கூறிய போது தான் அவள் அழுதிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.


" ஏன் அம்மா இப்ப அழுறியள்?" நந்தன் பரிதாபப்பட," அது ஆனந்தக் கண்ணீரண்ணா. இதுகள் உனக்கு விளங்காது" தங்கை மீரா கூற தாய் உட்பட அனைவரும் சிரித்தனர்.

"ஆ ... அண்ணா !! நீ உன்ரை ' வெள்ளைப் பிரம்பை 'விட்டுட்டுப் போறாய் உதுக்குத் தான் அப்போதே அம்மா அடிக்கடி சொன்னவா! உனக்கொரு கண்டறியாத மறதி" செல்லமாகக் கடிந்தவாறே அவனிடம் வெள்ளைப் பிரம்பைக் கொடுத்தாள் மீரா.

"சரி தம்பியவை சந்தோஷமாய் போட்டு வாங்கோ ' நன்றியோடு மாறனையும் பார்த்துக்கூறிய தாயின் வார்த்தைகளில் ஒருவித தெளிவும், நம்பிக்கையும் கலந்திருந்தது. நந்தன் நாளைய நம்பிக்கைகளை சுமந்தபடி மாறனின் கையைக் கோத்தவாறு வாசலை நோக்கி விரைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K




# ரஜினி: வருவாரா? மாட்டாரா?

- வி.மணிகண்டன்

**2004**ஆம் ஆண்டில் சென்னை வேளச்சேரியில் ஒரு வருடம் இருந்தேன். அப்பொழுது விஜயகாந்த் அரசியலுக்கு வருவது போல பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் பள்ளிக்கரணையில் படப்பிடிப்பு ஒன்று நடந்து கொண்டிருந்தது. எங்கள் ஊரில் படப்பிடிப்பில் வேடிக்கை பார்ப்பது பெரிய விஷயமே இல்லை. அந்தக் காலத்தில் மானாவாரியாக படப்பிடிப்பு நடைபெறும் என்பதால் பெரிதாகக் கெடுபிடி காட்டமாட்டார்கள். ஆனால் சென்னையில் அப்படியில்லை. அழிச்சாட்டியம் செய்தார்கள். எப்படியோ விஜயகாத்துக்கு அருகாமையில் சென்றுவிட்டேன். 'நீங்க அரசியலுக்கு வரப் போறதா பேச்சு இருக்கு..., உங்ககிட்ட பேசணும்' என்றேன். கட்டைக்குரலில் 'அப்படியா.. நாளைக்கும் இங்கதான் சூட்டிங் இருக்கும்...பேப்பர்ல எழுதிக் கொடுங்க' என்றார். விடிய விடிய ஏழெட்டு பக்கங்களுக்கு எழுதிக் கொண்டு போய் கொடுத்தேன். அதில் நேரடியாக சில விஷயங்களை எழுதியிருந்தேன். 'தொண்ணூறுகளில் ரஜினிக்கு இருந்த மக்கள் செல்வாக்கோடு ஒப்பிடும் போது உங்களுக்கு அதில் பாதி கூட இல்லை என்பதுதான் உண்மை' என்கிற மாதிரி நேரடியாக சில விமர்சனங்கள். அவர் பக்குவமான மனிதர். ஜீப்பிலேயே அமர்ந்து படித்துவிட்டு எனது அலைபேசி எண்ணை தாளின் பின்பக்கமாக குறித்துக் கொண்டார்.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் எனது தோற்றத்தை நினைத்துப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. பொடியன். பொருட்படுத்தியிருக்கவே வேண்டியதில்லை. இரண்டொரு நாள் கழித்து 'நாங்க கேப்டன் ஆபிஸ்ல இருந்து பேசறோம்... நன்றி சொல்லச் சொன்னார்' என்றார்கள். நடிகர் சங்கத்தில் அவர் செய்த செயற்பாடுகள், அரசியலில் நுழைந்த சமயத்தில் அவர் பேசிய பேச்சுக்களையெல்லாம் கவனிக்கும் போது தெளிவாகப் பேசியதை கவனிக்கலாம்.

விஜயகாந்த் பற்றி எழுதுவது நோக்கமில்லை. ரஜினியை ஒப்பிடும் போது விஜயகாந்த் எவ்வளவோ தேவலாம். ஏதோவொரு படத்தில் கூட விஜயகாந்த் 'அரசியலுக்கு வர்றதுன்னா வந்துடுவேன்...வருவேன் வரமாட்டேன்னு படம் காட்டிட்டு இருக்க மாட்டேன்' என்று வசனம் பேசுவார். அதே போல வந்துவிட்டார். விசாரித்தவரையிலும் அவருக்கு நரம்பியல் சம்பந்தப்பட்ட உடல் உபாதை இருக்கிறது. அது அவரது பேச்சைக் குழப்பி சிந்தனையை அடிக்கடி திசை மாற்றுகிறது. இதை வாகாகப் பயன்படுத்திக் கொண்டு குடிகாரன் என்று பேச்சு எழும்பியது. அவர் அப்பொழுதே 'இதுதான் எனக்கு பிரச்சினை' என்று சொல்லியிருந்தால் ஒருவேளை மக்கள் புரிந்துகொண்டிருக்கக் கூடும். ஆனால் மறைத்தார். பெயரைக் கெடுத்து விஜயகாந்தின் அரசியல் அத்தியாயம் முடிக்கப்பட்டுவிட்டது.

ஜெயலலிதாவின் மரணம், கருணாநிதியின் உடல்நிலை உள்ளிட்டவற்றால் தமிழகத்தில் உண்டாகியிருக்கும் அரசியல் வெற்றிடத்தை ரஜினியை வைத்து நிரப்பிவிடலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை ரஜினி அரசியலுக்கு வருவதென்றால் தனியாக வருவதற்கெல்லாம் லாயக்கில்லாத ஆள். அவ்வளவு தைரியமிருந்தால் எப்பொழுதோ வந்திருப்பார். இவ்வளவு காலமாக ஜெயலலிதாவும் கருணாநிதியும் ராமதாஸும் அவரை வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருந்தார்கள். இப்பொழுது அவருக்கு அரசியல் ஆசை உண்டாகியிருக்குமானால் அவரது பின்னால் வலுவாக யாரோ நிற்கிறார்கள் என்று அர்த்தம். யாரோ என்ன யாரோ- பா.ஜ.க. இதைப் புரிந்து கொண்ட காங்கிரஸ் நக்மாவை தூதாக அனுப்பியது. அது பெரிதாக எடுபடவில்லை போலிருக்கிறது. ரசிகர் சந்திப்பு, ஆண்டவன், அரசியல் என்று மீண்டும் டபாய்க்க ஆரம்பித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும் ஆண்டவனே நினைத்தாலும் தமிழக அரசு கவிழாது. அதன் பிறகு எத்தனை நாள்களுக்குத் தாக்குப்பிடிக்கும் என்பது தமிழகத்தில் இருக்கும் யாருக்கும் தெரியாது. இடைப்பட்ட காலத்தில் தம்மை வலுவாக்கிக் கொள்ளவும் தமது பலத்தைச் சோதித்துக் கொள்ளவும் சாம, பேத, தான, தண்டத்தையெல்லாம் பா.ஜ.க. கமுக்கமாக உருட்டிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கால் பதிக்க பா.ஜ.கவுக்கு ஒரு கவர்ச்சியான முகம் தேவை. அதற்காக நகர்த்தப்படுகிற காயாக ரஜினி இருக்க வேண்டும். ரஜினியை வைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடிக்க வேண்டியதில்லை. கணிசமான வாக்குகளை வாங்கினால் போதும். சில எம்.எல்.ஏ. ஆசனங்களை வென்றால் போதும். தம் கட்டிக் கொள்வார்கள்.

'ஒருத்தனுக்கு நிற்கவே வக்கில்லையாம்' என்று ரஜினி பேசிய அதே வசனம் அவருக்கும் பொருந்தும். ரசிகர்களுடன் கூட நின்று படம் எடுத்துக் கொள்கிற உடல் தெம்பு கூட அவரிடமில்லை. தேர்தல், பிரசாரம் என்பதெல்லாம் சாத்தியமேயில்லை. 'நீங்க முகத்தை மட்டும் காட்டுங்க.. மத்ததெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்' என்று சொல்லித்தான் அவரை இழுத்து வர முடியும்.

ரஜினிக்கு தமிழகத்தின் பிரச்சினைகள் பற்றி என்ன தெரியும்? தமிழனின் முக்கியமான பிரச்சினைகளில் அவரது நிலைப்பாடுகள் என்ன? என்றெல்லாம் கேட்கிறார்கள். அவருக்கே தெரியுமா என்று தெரியவில்லை. ஆனால் அதைக் காரணமாக வைத்துக் கொண்டு 'நீ அரசியலுக்கு வரக் கூடாது' என்று சொல்ல வேண்டியதில்லை. இன்றைக்கு வாக்கு வாங்குகிற அரசியல்வாதிகளில் யார் கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் நடத்துகிறார்கள்? முக்கால்வாசி ஆட்கள் சொத்து சம்பாதிக்க அரசியல் நடத்துகிறார்கள். மீதமிருக்கிறவர்கள் இருக்கிற சொத்தைக் காப்பாற்றிக் கொள்ள அரசியல் நடத்துகிறார்கள். அதனால் 'உனக்கு கொள்கை இருக்கா' என்று ரஜினியை மட்டும் பார்த்துக் கேட்பது அபத்தம். நம் மக்களுக்கு கொள்கையிருந்தால் ஏன் உள்ளே வருகிறவனைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது?

தமிழகத்தின் சாபக்கேடே அதுதானே? பணமும் கவர்ச்சியும்தான் இங்கே வாக்குகளை ஈர்க்கின்றன. ரஜினி அரசியலுக்கு வந்தால் வந்துவிட்டுப் போகட்டும்.

ஒருவேளை படத்துக்கு படம் அரைப்பது போல இப்பொழுதும் மிளகாய் அரைக்கிறாரோ என்றும் தோன்றாமல் இல்லை. எரிச்சல்தான் மிஞ்சுகிறது.. எரிச்சல் பட்டு என்ன ஆகப் போகிறது? ரஜினிக்கும் அது தெரியும். மேடையிலேயே பேசுகிறார். 'சினிமா வியாபாரத்துக்காக அரசியல் பேசறேன்னு சொல்லுறாங்க' என்று. தெரிந்தே செய்கிற ஆளை என்ன செய்ய முடியும்? 'பாட்ஷா' படம் வந்து இருபத்தைந்து வருடங்கள் ஆகப் போகிறது. அவர் மேடையில் பேசியதை நம்பி சாரி சாரியாக வாகனங்களில் கிளம்பிச் சென்ற ரசிகர்கள் அவருக்கு வியாபார எண்ணெய்யை ஊற்றி பிரகாசத்தைக் காட்டினார்கள். சரியாக நூல் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு படத்திலும் அல்லது பட வெளியீட்டுக்கு முன்பாகவும் திரியை மட்டுமே தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழகத்தின் அரசியலும் சினிமாவும் மிகச் சிறந்த வேடிக்கைக் களம். முட்டாள்களும் பைத்தியகாரர்களும் அயோக்கியர்களும் நம்மை எல்லாவிதத்திலும் ஏமாற்றுவார்கள். 'எங்கள் மக்கள் தெளிவானவர்கள்' என்று அவர்களே சொல்லி உசுப்பேற்றியும் விடுவார்கள். தெளிவானவர்கள் என்று நம்மை நாமே நம்பிக் கொண்டு நாமும் அந்த வேடிக்கையை வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருப்போம். வேடிக்கை காட்டியவன் நம் முதுகு மீது காலை வைத்து மேலே ஏறிச் சென்ற பிறகு அடுத்தவன் காட்டும் வேடிக்கையைப் பார்க்கத் தொடங்கிவிடுவோம்.

கீர்த்தி சுரேஷ் வாழ்க. நயன்தாரா டபுள் வாழ்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
புதிய முயற்சி. இடமாற்றம். தொழில் விருத்தி

**ரிஷபம்**
கடன். தெய்வ சிந்தனை. புத்திரரால் கவலை

**மிதுனம்**
தனிமை. தார சுகக் குறைவு. தயக்கம். பயணம்.

**கடகம்**
சுகக் குறைவு. பணச் செலவு. தொழில் விருத்தி

**சிம்மம்**
மானிட நேயம். மனக்குறை. தொழில்கேடு தனித்த நிலை.

**கன்னி**
வேலையாள்கள் சகாயம். மனைவிருத்தி கல்வி விருத்தி

**துலாம்**
ஆலய தரிசனம். தர்ம சிந்தனை. தொழில் சிறப்பு.

**விருச்சிகம்**
தெய்வ தரிசனம். பகல் கனவு. தாரசுகம். தனிமை

**தனுசு**
சூழ்ச்சி. ஞானநிலை. மக்கட்பேறு. மானிட சேவை.

**மகரம்**
முகஸ்துதி. துக்கம். பயிர்பலிதம். பயமிகுதி, பொறுமை

**கும்பம்**
தார சுகக் குறைவு. சமநிலை. ஆலய தரிசனம். கல்வி விருத்தி

**மீனம்**
பொருள் செலவு. பூர்வ புண்ணியம். பொறுமை. தரிசனம்.





ஒக்ரோபர் 1917 புரட்சியின் நூற்றாண்டு நிறைவையொட்டி தேசிய கலை இலக்கியப் பேரவை தொடர்ச்சியாக உலகப் புகழ் பெற்ற ரஷ்யப் புரட்சிகர இலக்கியப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் பற்றிய கருத்தரங்குகளைச் செய்து வருகிறது. கடந்த 21.05.2017 அன்று யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் "வீரம் விளைந்தது" நாவலைப்பற்றிய அமர்வு நடைபெற்றது.

## புதுவிதியின் அஞ்சலிகள்





கலைவேந்தன், கலாபூஷணம் ம.தைரியநாதன் கடந்த 16.05.2017 அன்று காலமானார். இவர் ஈழத்தின் மூத்த நாடக கலைஞராவார். திருமறைக்கலாமன்றத்தின் முக்கியமான ஆளுமை, இவரின் வாழ்வுக்கும் கலைப்பங்களிப்புக்கும் இடையில் வேறுபாடுகள் பெரிதுமில்லாத அற்புதமான கலைஞனை நாம் இழந்திருக்கிறோம். மூத்த ஆளுமைக்கு புதுவிதியின் அஞ்சலிகள்.







கவிஞர் கண்ணன் எழுதிய இரண்டாவது நூலான 'கற்பனை இல்லாத ஒப்பனைகள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 14.05.2017 அன்று கரணவாய், கரவெட்டியில் உள்ள மூத்தவிநாயகர் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.







[illegible] 20.05.2017 அன்று வவுனியா சைவப்பிரகாச மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் பாடம்

புலியூருக்கு வெளியே ஒரு பெரிய புதர்காடு இருந்தது. பலவகை காட்டுச் செடிகளும், கொடிகளும் நிறைந்திருந்தன. அங்கே காட்டு எலிகள், முயல்கள், குள்ள நரிகள், பாம்புகள், பறவைகளும், கடுகைக் காட்டிலும் சிறியதும் உள்ளங்கையளவு பெரியதுமான பூச்சிகளும் வாழ்ந்தன.

காட்டுக்கு அருகிலேயே விவசாய நிலங்களும் இருந்தன. நாலைந்து மோட்டர் கிணறுகளும் இருந்தன. பகலில் ஆள்கள் நடமாட்டம் இருக்கும். இரவில் மோட்டர் அறைக்கு வெளியில் விளக்கு எரியும். காட்டின் எல்லையிலிருந்த புதரில் ஒரு சுருட்டை விரியன் முட்டைகள் இட்டு அடைகாத்தது. முட்டைகள் ஒவ்வொன்றாய்ப் பொரிந்து பாம்புக் குட்டிகள் வெளி வந்தன. அவ்வளவும் அழகாக இருந்தன. அம்மா சுருட்டை விரியனுக்குப் பெருமையாக இருந்தது. அதன் ஏழு முட்டைகளும் பொரிந்து குட்டிகள் வந்துவிட்டன.

போன தடவை பத்து முட்டைகளில் ஐந்து முட்டைகளைச் சாரைப்பாம்பு தின்றுவிட்டது. ஐந்து குட்டிகள் வெளிவந்த சிறிது நேரத்தில் எங்கிருந்தோ வந்த மயில் ஒன்று கொத்திக்கொண்டு போய்விட்டது. அதனால் இந்த முறை பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அம்மா சுருட்டை விரியன் நினைத்தது. முட்டையிலிருந்து வெளிவந்த குட்டி சுருட்டை விரியன்கள் துருதுருவென அலைந்தன. அவற்றுக்குப் பசி எடுக்க ஆரம்பித்துவிட்டது. அம்மா பாம்பு லேசாக விசிலடித்த மாதிரிக் குரல் கொடுத்தது. உடனே எல்லாக் குட்டிப் பாம்புகளும் அம்மாவின் பக்கத்தில் வந்தன.

அம்மா பாம்பு பேசியது. "இந்தப் பெரிய காடுதான் நம்முடைய வீடு. இந்தக் காட்டுக்குள் உங்களுக்குத் தேவையான எல்லாம் கிடைக்கும். பூச்சிகள், முட்டைகள் ஏராளமாகக் கிடைக்கும். நமக்கு எதிரிகளும் உண்டு. அவர்களிடமிருந்து எப்படித் தப்பிக்கிறதுன்னு சொல்லித் தாறேன். நமக்கு விஷம் கிடையாது. ஆனால், பூச்சிகளைக் கடிக்கலாம். ஒரே ஒரு எச்சரிக்கை. இந்தக் காட்டின் எல்லையைத் தாண்டக் கூடாது. சரியா?" என்று சொன்னது. தலையை ஆட்டி ஆட்டி பாம்புக் குட்டிகள் கேட்டன.

அதில் இருந்த ஒரு சுட்டிப் பாம்பு அம்மாவிடம், "ஏன் காட்டை விட்டுப்போனா என்ன ஆகும்?" என்று கேட்டது. "நாம் எல்லோரும் இயற்கை அன்னையின் குழந்தைகள். இயற்கை தன்னுடைய குழந்தைகளுக்குச் சில விதிமுறைகளைச் சொல்லி வைத்திருக்கிறாள்" என்று அம்மா பாம்பு சொன்னது. உடனே மற்றப் பாம்புக் குட்டிகளும் சேர்ந்து கொண்டன.

"அம்மா...அம்மா... அந்த விதிமுறைகளைச் சொல்லும்மா" என்று கொஞ்சின. அம்மாப் பாம்பு எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, "ஒண்ணு, பசிக்கும்போது மட்டும் தான் இரையைக் கொல்ல வேண்டும். இரண்டாவது, காட்டில் யாரும் யாருக்கும் தாழ்ந்தவர் கிடையாது. எல்லோருக்கும் சமமான உரிமை உண்டு. மூணாவது, புலியோ எலியோ பூரானோ ஈசலோ சிலந்தியோ பறவையோ எல்லோருக்கும் ஓர் இடம் உண்டு. இதுதான் இயற்கை அன்னையின் விதிகள். புரிஞ்சுதா!" என்று அம்மாப் பாம்பு சொன்னது.

எல்லோரும் தலையாட்டினார்கள். ஆனால், கேள்வி கேட்ட சுட்டி மட்டும் தலையாட்டவில்லை. அதற்கு அம்மா சொன்னதில் நம்பிக்கையில்லை. திருட்டு முழி முழித்துக்கொண்டு அலைந்து கொண்டிருந்தது. இரவு வந்தது. அம்மா பாம்பு, குட்டிகளைக் கூட்டிக் கொண்டு எப்படிப் பூச்சிகளைப் பிடிப்பது என்று கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தது. காட்டின் எல்லையை ஒட்டி வெளிச்சம் தெரிந்தது. சுட்டி மட்டும் வெளிச்சத்தைத் திரும்பிப் பார்த்தது. அந்த வெளிச்சத்தில் பூச்சிகள் நிறையப் பறந்து கொண்டிருந்தன. இங்கே இருட்டுக்குள் அலையிறதைவிட அங்கே போனால் வாயைத் திறந்து வைத்தால் கொத்துக்கொத்தாய் பூச்சிகள் வந்து விழுமே என்று நினைத்தது. அப்படியே கூட்டத்திலிருந்து விலகி வெளிச்சத்தை நோக்கி வேகமாக ஊர்ந்துசென்றது.



வெளிச்சம் ஒரு மோட்டர் அறையின் தலை மீதிருந்த விளக்கிலிருந்து வந்து கொண்டிருந்தது. மெல்ல வெளிச்சத்தில் ஊர்ந்து சென்ற பாம்புக் குட்டிக்கு முன்னால் ஏராளமான பூச்சிகள் விழுந்து கிடந்தன. அவசர அவசரமாய் அந்தப் பூச்சிகளை விழுங்கியது. வயிறு நிறைந்தது. ஆனாலும் விடவில்லை. இன்னும் தின்றுகொண்டேயிருந்தது. "நாளைக்கு அம்மாவையும் சகோதரர்களையும் கூட்டிக்கொண்டு வரலாம்'" என்று நினைத்தது.

நிறைய சாப்பிட்டதால் அதனால் அசையக்கூட முடியவில்லை. அப்போது மோட்டர் அறையிலிருந்து வெளியே ஒரு ஆள் வந்தான். அவன் காலடிச் சத்தத்தை உணர்ந்தது குட்டி. ஆனால், வேகமாக ஓட முடியவில்லை. அதற்குள் அந்த ஆள் 'பாம்பு... பாம்பு...' என்று கத்திக்கொண்டே ஒரு பெரிய கம்பை எடுத்து அந்தக் குட்டிப் பாம்பை அடிக்க வந்தான். அவன் போட்ட சத்தம் கேட்டு இன்னொருத்தன் ஓடிவந்து, "டேய் அது நல்ல பாம்பு" என்றான். குட்டிக்கு எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று பதற்றம். உடனே தலையைத் தூக்கிச் சீறியது. அவ்வளவு தான். இரண்டு பேரும் கொஞ்ச தூரம் தள்ளிப்போய் நின்றார்கள்.

அவர்களில் ஒருத்தன்," படம் எடுக்குது பாரேன்". "நல்ல பாம்பு மாதிரித் தெரியல. சாதாரண பாம்பு மாதிரிதான் தெரியுது" என்றான் இன்னொருவன். "எந்தப் பாம்பா இருந்தாலும் சரி அடிச்சுக் கொல்லணும்" என்று மற்றவன் சொன்னான். இரண்டு பேரும் அடிப்பதற்குத் தயாரானார்கள். பாம்புக் குட்டி மெல்ல மெல்ல ஊர்ந்து இருட்டைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தது. பார்க்கும்போது காடு ரொம்ப தூரத்திலிருந்தது. போய்ச் சேர முடியுமா? பாம்புக் குட்டிக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. இயற்கை அன்னையின் விதிகள் ஞாபகத்துக்கு வந்தன. இருந்தாலும் என் கதை அவ்வளவுதான் என்று நினைத்தது குட்டி.

கம்பை வைத்திருந்தவன் குட்டிக்கு மேலே கம்பை உயர்த்தினான். நடப்பதை எல்லாம் காட்டின் தேவதை பார்த்துக் கொண்டிருந்தாள். தேவதைக்குப் பாம்புக் குட்டியின் மீது இரக்கம் வந்தது. உடனே தேவதை வாயால் காற்றை ஊதினாள். விர்ரென்று காற்று அங்கே வீசியது. மின்சாரக் கம்பிகள் காற்றில் அலைமோதின. தீப்பொறிகள் கிளம்பின. திடீரென அந்த இடமே இருள் மயமாகிவிட்டது. இருளைப் பார்த்ததும் அந்த மனிதர்கள் பயந்து போனார்கள். அதற்குள் குட்டி வேகம் வேகமாக உடலை இழுத்துக் கொண்டு காட்டினுள்ளே நுழைந்தது.

அம்மா பாம்பு மற்ற குட்டிகளோடு சுட்டியைத் தேடிக்கொண்டு எதிரே வந்தது. வாலுவைப் பார்த்ததும் கோபத்துடன், "இவ்வளவு நேரமா எங்க போன?" என்று கேட்டது. அதற்கு அந்த சுட்டி என்ன சொன்னது தெரியுமா?

" அம்மா, இனி நான் வெளிச்சத்துக்குப் போக மாட்டேன்". காட்டின் தேவதை கலகலவெனச் சிரித்தாள்.

## ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.


'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## தகவல்கள் அறிவோம்



நீலத் திமிங்கிலம் ஒரு போயிங் விமானத்தின் நீளத்துக்கு இருக்கும். எடையோ 180 தொன் இருக்கும். நன்றாக வளர்ந்த திமிங்கிலங்கள் தினமும் சராசரியாக 3600 கிலோ எடையுள்ள நீர்வாழ் உயிரினங்களை சாப்பிடுகின்றன. சாதாரணமாக மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நீந்தும். தேவைக்கேற்ப இதிலும் வேகமாகவும் நீந்தும்.

• • •




கொம்பெலும்பு என்ற திமிங்கிலத்துக்கு பற்கள் கிடையாது. கொம்பு எலும்பு இதன் அடையாளம்.

• • •



ஸ்பெர்ம் திமிங்கலத்தின் தலை சதுர வடிவில் இருக்கும். இவற்றின் நீண்ட மூக்குப் பகுதியில் ஸ்பெர்மா ஸெட்டி எனும் வெள்ளை மெழுகு உள்ளது. அந்த மெழுகுக்காக இந்தத் திமிங்கிலங்கள் வேட்டையாடப்படுகின்றன. இவை 15 முதல் 20 வரை திமிங்கிலங்களைக் கொண்ட கூட்டமாக வாழும் பண்புடையவை.

• • •



திமில் முதுகுத் திமிங்கிலங்களுக்கு நீண்டத் துடுப்புகள் இருக்கும். அதிக ஒலி ஏற்படுத்தக்கூடிய திமிங்கிலங்களில் இதுவும் ஒன்று. ஒரே சமயத்தில் 35 நிமிடங்கள்வரை கூட இந்த ஒலியை ஓயாமல் எழுப்பும். துள்ளுவது, குட்டிக் கரணம் போடுவது போன்ற வித்தைகளையும் செய்யும்.

• • •




மூர்க்கத் திமிங்கிலத்துக்கு ஆர்கா என்ற இன்னொரு பெயரும் உண்டு. இது சீல்களையும் பிற திமிங்கிலங்களையும் கொல்லக்கூடிய சக்தி கொண்டது. மனிதர்களிடம் சாந்தமாக நடந்துகொள்ளும் இவற்றைப் பிடித்துக் கடல்சார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பயன்படுத்துகிறார்கள்.

## 5வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உன்னை நீயே அறிவாய்

**தொ**ழில் செய்ய விரும்புபவர்கள் முதலில் என்ன செய்ய வேண்டும், தங்களுக்கான சரியான தொழிலை எப்படித் தெரிவுசெய்ய வேண்டும்? அதைப் பதிவு செய்து எப்படி? சட்ட ரீதியான சிக்கல்கள் எதுவும் இல்லாமல் தொழிலை எப்படி சுமுகமாக நடத்திச் செல்வது? முக்கியமாக தொழிலை வெற்றிகரமாக நடத்தத் தேவையான முகாமைத்துவ விடயங்கள் என்னென்ன என்றெல்லாம் கடந்த இதழ்களில், ஒவ்வொன்றாக விரிவாகப் பார்த்து வந்திருக்கிறோம்.

இனி, “உங்களுடைய தொழிலை கடல் கடந்து கொண்டு செல்வது எப்படி” என்பதைப் பற்றிப் பார்ப்போம். இதுவரை உள்நாட்டில் தொழில் செய்வதற்கான விடயங்களைச் சொல்லி வந்தேன். இனி வெளிநாடுகளில் எப்படித் தொழில் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சொல்கிறேன்.

ஏற்றுமதி / இறக்குமதி மூலம் ஒருவர் தன்னுடைய தொழிலை பல கண்டங்களிலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்த முடியும். இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான பொருள்கள் 200இற்கும் மேலான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதி / இறக்குமதி செயல் முறைகளைக் கற்றுக்கொண்டால், உள்ளூர் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் ஏற்றுமதி செய்ய முடியும்.

**உலகம் மிகப் பெரிது**

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பொருள் தேவைப்படும். ஆனால், அந்தப் பொருள் உற்பத்தி ஆவதற்கான வளமோ, தொழில்நுட்பமோ இல்லாமல் இருக்கலாம். அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பிற நாடுகளிலிருந்து அவர்கள் இறக்குமதி செய்வதைத் தவிர, வேறு வழியில்லை. அதேபோல, குறைந்த அளவே உற்பத்தியாகும் ஒரு பொருளை அதிகமானோர் பயன்படுத்தும் போதும், அந்தப் பொருளை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும். இந்த வித்தியாசத்தை சமன் செய்வதுதான் ஏற்றுமதி / இறக்குமதி. இதன் மூலம் பற்றாக்குறையாக இருக்கும் நாட்டின் தேவை பூர்த்தி செய்யப்படும். உற்பத்தி செய்யும் நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

**சீனாவைப் பார்த்துக் கற்றுக்கொள்வோம்**

உலகிலேயே சீனாதான் ஏற்றுமதியில் முன்னணி நாடாக விளங்குகிறது. அதன் பொருளாதாரத்தில் பெரும்பாலான சதவிகிதம் ஏற்றுமதிச் சந்தையிலிருந்துதான் கிடைக்கிறது. அங்கு குடிசைத் தொழில்கள் அதிகம். படிக்கும்போதே தொழில்கள் செய்யக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

ஏற்றுமதிக்கெனப் பல்வேறு அமைப்புகளை உருவாக்கி, ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்து வருகிறது நம் நாடு. பல்வேறு நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களையும் செய்துள்ளது. மேலும், ஏற்றுமதி செய்பவர்களின் பணத்துக்கு உத்தரவாதம் அளிக்கவும் அமைப்பு உள்ளது. அதுமட்டுமல்லாமல், வரிச் சலுகைகள், ஊக்கத் தொகைகள், கடன்கள் மற்றும் மானியங்களும் தரப்படுகின்றன. இவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, தொழில் செய்பவர்கள் எளிதில் சர்வதேச சந்தையில் தொழில்களைச் செய்ய முடியும்.

**ஏற்றுமதி தொழில் செய்வது எப்படி?**

ஏற்றுமதி / இறக்குமதி தொழிலை எப்படி? வெற்றிகரமாகச் செய்வது என்பதைப் பற்றி விரிவாகப் பார்க்குமுன், முதலில் இந்தத் தொழிலின் அடிப்படை விடயங்களைப் பார்த்து விடலாம்.

ஒரு நாட்டின் தேவை என்ன? அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருள்/ தொழில்நுட்பம் நம்மிடம் இருக்கிறதா? அதை அங்குள்ளவர்களிடம் எப்படி விற்பனை செய்வது?- இந்த மூன்று கேள்விகள்தான் ஏற்றுமதி/இறக்குமதி தொழிலின் முக்கியமான அடிப்படையைப் புரிந்துகொள்ள உதவும். இதற்கான விடைகளைக் கண்டுபிடித்துவிட்டால் போதும், ஏற்றுமதி / இறக்குமதி தொழிலுக்கு நீங்கள் தயாராகிவிடலாம்.

காய்கறிகள், பழங்கள், மூலிகைகள், பூக்கள், கைவினைப் பொருள்கள் என அனைத்தையும் ஏற்றுமதி செய்யலாம். பெரும்பாலும், உணவுசார் பொருள்கள்தான் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல், தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளையும் ஏற்றுமதி செய்யலாம்.

தமிழர்கள் உலகம் முழுக்கப் பரவி இருப்பதால், பாரம்பரிய பொருள்கள் இன்னும் வெளிநாடுகளில் பலத்த வரவேற்பைப் பெற்று வருகின்றன. ஊறுகாய் முதல் அப்பளம், வடகம், ஊதுபத்தி வரை அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே சமயம், நீங்கள் நினைத்த எல்லா பொருள்களையும் ஏற்றுமதி செய்துவிட முடியாது. ஏற்றுமதி வர்த்தகத்துக்கு அரசு அனுமதிக்கும் பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்யலாம். தடை செய்துள்ள பொருள்களை ஏற்றுமதி செய்தால், பெரும் பிரச்சினைகளுள் சிக்க வேண்டி வரும்.



இந்தத் தொழிலில் நீங்கள் இறங்கும்முன், நீங்கள் என்ன வகையான ஏற்றுமதியாளர் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, 1. பிறரிடமிருந்து பொருள்களை வாங்கி ஏற்றுமதி செய்பவரா? 2. பொருள்களை நீங்களே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்பவரா? 3. பிறரிடமிருந்து வாங்கிய பொருள்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்பவரா? 4. சேவை ஏற்றுமதியாளரா? இதில் நீங்கள் எந்த வகை ஏற்றுமதியாளர் என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

மேலும், ஏற்றுமதியைப் பொறுத்தவரை மிக முக்கியமானது தரம். உள்ளூரில் செய்யும் தொழிலைப் போல ஏற்றுமதி சந்தையைச் சாதாரணமாக நினைக்கக்கூடாது. தரம்தான் உங்கள் தொழிலை மேலும் மேலும் உயர்த்தும். உங்களுடைய பொருளுக்கான தரத்தில் நீங்கள் கவனம் செலுத்தாவிட்டால், பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிடும் பெயரும் கெட்டுவிடும்.

**சர்வதேச சந்தையில் ஜெயிக்க ஐந்து முக்கிய படிநிலைகள்**

1. ஏற்றுமதித் தொழிலை எப்படித் தொடங்குவது?

ஏற்றுமதித் தொழில் தொடங்குவதன் செயல்முறைகள், அரசு மற்றும் சட்ட ரீதியான விதிமுறைகள், அவற்றுக்கு எப்படி நம்மைத் தயார் செய்துகொள்வது எனத் தெரிந்துகொள்ள வேண்டும்.

2. ஏற்றுமதித் செய்வதற்குமுன் திட்டமிடுதல்

ஏற்றுமதி தொழிலில் உள்ள நுணுக்கங்கள், தோல்வியடையாமல் ஜெயிப்பதற்கான திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறமைகள், பொருளையும் நாட்டையும் தேர்வு செய்யும் உத்திகள் போன்றவற்றைத் தெரிந்து வைத்திருப்பது முக்கியம்.

3. முதலீடும், விலை நிர்ணயமும்

எந்தப் பொருளுக்கு எவ்வளவு முதலீடு, தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் வழிகள், அரசு தரப்பில் கடன் வசதிகள், மானியங்கள் சலுகைகள், பொருளுக்கான விலையை நிர்ணயம் செய்யும் வழிகள், எவ்வளவு லாபம் வைத்து விற்கலாம் என்பன போன்றவற்றைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

4. செயல்முறைகளும் ஆவணப்படுத்தலும்

தேவையான ஆவணங்கள் என்னென்ன, அதற்கான நடைமுறைகள் என்னென்ன, ஆவணங்களைத் தயார் செய்வது எப்படி என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

5. கணக்கிடலும்

தொழில் செயற்பாடுகளை நிர்வகிப்பது, ஓடர்களைக் கையாள்வது, கணக்கு வழக்குகளை நிர்வகிப்பது ஆகியவற்றையும் அறிந்து வைத்திருப்பது அவசியம்.

ஏற்றுமதித் தொழிலை வெற்றிகரமாகச் செய்ய, இந்த ஐந்து படிநிலைகளும் அவசியம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் அடுத்தடுத்து வரும் இதழ்களில் விரிவாகப் பார்ப்போம்.

நீங்கள் ஏற்றுமதி செய்யும்முன், ஏற்றுமதி/இறக்குமதி செய்வதற்கான உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும். நிறுவனமாகப் பதிவு செய்துகொண்ட பிறகுதான் ஏற்றுமதி/இறக்குமதி செய்வதற்கான உரிமத்தைப் பெற முடியும். ஏற்கெனவே உள்ளூரில் தொழில் செய்பவராக இருந்தால், உங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே உரிமம் பெற்றுக் கொள்ளலாம். அல்லது நேரடியாக ஏற்றுமதி தொழிலில் இறங்குகிறீர்கள் என்றால், ஒரு நிறுவனத்தைப் பதிவுசெய்து அதன் பெயரில் உரிமம் வாங்கிக் கொள்ளலாம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசைக்கு உடன்படாத நடிகைகள் படங்களில் இருந்து நீக்கப்படுகிறார்கள் எனக் கூறியிருக்கிறார் லட்சுமிராய். நடிக்க வரும் பெண்களை சிலர் படுக்கைக்கு அழைக்கின்றனர். இந்தப் பிரச்சினை திரையுலகில் தற்போது அதிகமாகி வருகிறது எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒன்றரை வருட இடைவெளிக்குப் பின்னர் 'யார்' படத்தில் லட்சுமி ராய் நடித்து வருகிறார். இதற்காக 11 கிலோ எடையைக் குறைத்திருக்கிறாராம்.




அனுஷ்கா - பிரபாஸ் இணைந்து நடித்த 'பில்லா', 'மிர்ச்சி', ப
1, 2 படங்கள் தெலுங்கில் பெருவெற்றி பெற்றன. ராசியான ஜோ
தெலுங்கில் இவர்கள் கொண்டாடப்படுகின்றனர். இவர்கள் இ
காதலிப்பதாக கிசுகிசு பரவியபோதும் இருவரும் உறுதி செய்யா
அதை மறுக்கவும் இல்லை.

இந்நிலையில் அனுஷ்கா கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில்
அவரிடம் "பிரபாஸ், ராணா இருவரில் உங்களை கவர்ந்த ஆண
யார்?" எனக் கேட்க உடனடியாக "நிச்சயமாகப் பிரபாஸ்தான்"
பதிலளித்திருக்கிறார் அனுஷ்கா. "ராணா இல்லையா?" என மீண
கேள்வி எழவே. "அவர் எனக்கு அண்ணன் மாதிரி. அவரும் என்
என்றே அழைப்பார்" எனக் கூறியிருக்கிறார் அனுஷ்கா.



பொலிவூட்டின் பிரபலங்களில் அலியா பட் முக்கியமானவர். இவர் அண்மையில் 'சீதா' புத்தக வெளியீட்டில் பங்கேற்றார். அங்கு பேசிய அவர் தான் சீதா வேடத்தில் நடிக்க விரும்புகிறார் எனக் கூறினார்.

மேலும் "இந்தப் புத்தகத்தை யாராவது படமாக இயக்கினால், அதில் நான் சீதாவாக நடிக்க விரும்புகிறேன். இராமாயணத்தை மக்கள் நிச்சயம் ரசிப்பார்கள். சீதா நல்ல அரசியாகவும் பாதுகாவலராகவும் இருந்தார்." - என்றார்.




சுந்தர்
ஸ்ருதி ஹ
வைத்து
'சங்கமித்
ஆர்யா,
ஆகியோ
வருகின்ற

300 கே
ரூபா செ
இந்தப் ப
ற்றாண்டி
வரலாற்று
உருவாகி
சங்கமித்ர
அரசர்கள்
தன்னைய
காப்பாற்
இப்படத்

பிரான்
கேன்ஸ் தி
இதன் மு
வெளியிட
இணைய
வரவேற்பு
குறிப்பிட



விஜய் 61 ஆவது படத்தில் 3 வேடங்களில் நடிப்பது அறிந்ததே. சென்னை, ராஜஸ்தானில் படப்பிடிப்பு காட்சிகள் இடம்பெற்று வருகின்றன.

பஞ்சாயத்து தலைவராக நடிக்கும் விஜய்க்கு நித்யாமேனன் ஜோடியாக நடிக்கிறார். இதேபோல டாக்டர் விஜய்க்கு காஜல் அகர்வாலும், மஜிக் நிபுணர் விஜய்க்கு சமந்தாவும் ஜோடியாக நடிக்கின்றனராம். இதனால் விஜயும் சமந்தாவும் மஜிக் நுட்பங்களை கற்று வருகின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'பாகுபலி -2' வெளியாகி 3 வாரங்கள் கடந்த நிலையில் 1500 கோடி இந்திய ரூபாவை வசூலித்துள்ளது. இதில் இந்தியாவில் 1225 கோடியும் வெளிநாடுகளில் 275 கோடியும் அடங்கும்.

இதுவரை எந்தவொரு இந்தியப் படமும் செய்திராத வசூல் சாதனையை 'பாகுபலி -2' செய்துள்ளது. இன்னமும் 'பாகுபலி -2' இற்கான வரவேற்பு ஓயவில்லை என்பதால் அடுத்தடுத்த வாரங்களில் 2000 கோடி இந்திய ரூபாவை தாண்டி விடும் வாய்ப்புள்ளது.



தமிழ், ஹிந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வரும் எமி ஜாக்சன் கன்னடப் படத்தில் அறிமுகமாகவுள்ளார். ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியும் எமிக்குத் தெரியாத போதும் வசனங்களைப் ஆங்கிலத்தில் எழுப் பாடமாக்கிப் பேசிவிடுகிறார்.

நட்சத்திர ஹோட்டலிலேயே தங்கி வந்த எமி, 2.0 படம் வெளிவந்த பின்னர் தனக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும் என நம்புவதால் சென்னையில் வீடு வாங்கியுள்ளார். இதேபோல் மும்பை, ஹைதராபாத், பெங்களூரிலும் வீடு வாங்க யோசித்து வருகிறாராம்.

ி', பாகுபலி
ஜோடி என
இருவரும்
ப்யாத போதும்

ல்
ணழகன்
ன்" எனப்
மீண்டும்
ான்னை தங்கச்சி

நடிகர் ரஜினிகாந்த் அரசியல் பிரவேசத்துக்குத் தயாராகி விட்டார். இதற்கமைவாக ரசிகர்களை தொடர்ச்சியாக சந்தித்து வருவதுடன். அவர்களிடம் தமிழகத்தின் தேவைகள் குறித்த விவரங்களை சேகரித்து தருமாறும் கூறியிருக்கிறார்.

முன்னரும் ரஜினி அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தபோதும் கருணாநிதி, ஜெயலலிதா இரு பெரும் பிம்பங்கள் அவரை பின்வாங்க வைத்தது.

இப்போது இரு பெரும் பிம்பங்களும் அரசியலில் இல்லாத நிலையில் ரஜினி தனது காய்களை நகர்த்தி வருகிறார். அதுமட்டுமல்லாது தான் பச்சைத் தமிழன் என்றும் பேசி வருகிறார். எது எப்படியோ தமிழக மக்களுக்கு நல்லது நடந்தால் சரி. ஆனால் ரஜினி அரசியலுக்கு வந்தால்?





தர்.சி இயக்கத்தில்
ஹாசனை மையமாக
து உருவாகும்
மித்ரா' படத்தில்
ா, ஜெயம் ரவி
யாரும் நடித்து
ன்றனர்.

0 கோடி இந்திய
செலவில் உருவாகும்
ப் படம் 8 ஆம் நூ
ண்டில் நடக்கும்
ற்றுக் கதையாக
ாகிறது. பேரழகியான
மித்ரா அயல் நாட்டு
களிடம் இருந்து
னயும் நாட்டையும்
ாற்றுவதுதான்
த்தின் கதையாம்.

ான்ஸில் நடந்த
ஸ் திரைப்பட விழாவில்
முதல்பார்வை
யிடப்பட்டது. இதற்கு
ளயத்தில் பெரும்
ற்பு கிடைத்துள்ளமை
பிடத்தக்கது.

அதர்வா, நயன்தாரா நடிப்பில் உருவாகிறது 'இமைக்கா நொடிகள்'. இதில் வயதுக் குழந்தைக்கு அம்மாவாக நடிக்கிறாராம் நயன்தாரா. த்ரில்லர் கதையாக உருவாகும் இந்தப் படத்தின் முதல் பார்வையும் டீஸரும் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் வெளியாகின.

பிரபாஸுக்கு உலகளவில் பெயர் பெற்றுத் தந்த படம் 'பாகுபலி'. அவர் தற்போது 'சாஹூ' படத்தில் நடித்து வருகிறார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தில் பொலிவூட் நாயகி நடித்தால் வர்த்தக ரீதியில் அதிக லாபம் கிடைக்கும் என்பதால் சிலரை தயாரிப்பாளர் நாடியுள்ளார்.

"பாகுபலியால் கிடைத்த புகழால் இலகுவாக நாயகி கிடைத்து விடுவார்" என்ற தயாரிப்பாளரின் எண்ணத்துக்கு அங்கு அடி விழுந்துள்ளது. காரணம் அவர்கள் கேட்கும் அதிக சம்பளம்தான்.

ஹிந்தியில் இன்னமும் வெற்றிப் படங்களே கொடுக்காத ஷரத்தா கபூர் இப்படத்தில் நடிக்க 8 கோடி இந்திய ரூபா கேட்டுள்ளாராம். அவரே இப்படி என்றால் மற்ற நடிகைகள் கேட்பது இன்னமும் அதிகமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சிக்மலிங்கம் ரெஜினோல்ட்

# மாடு...?



மலைச்செல்வனைச் சந்திக்காமல் போக முடியாது. அவனைச் சந்திக்கவும் முடியாது. இப்பயொரு சிக்கலில் மாட்டியிருக்கிறேன். பிடிக்கவும் முடியாது, விடவும் முடியாது என்பார்களே அதைப்போல.

வீட்டிலிருந்து வெளியே போவதாக இருந்தால், எப்படியாவது மலைச் செல்வனைச் சந்தித்துத்தான் ஆக வேணும். ஒழுங்கையின் திருப்பத்தில் இருக்கிறான். ஒரு சிறிய கடை. வியாபாரம் நடக்கிறதோ இல்லையோ அதிலே குந்திக் கொண்டிருப்பான். அதை விட்டால் அவனுக்கும் வேறு வழியில்லை.

வேறு தொழிலுக்குப் போவதாக இருந்தால் வேலை தெரிந்திருக்க வேணும். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்க வேணும். அல்லது படித்திருக்க வேணும். இதெல்லாமே மலைச்செல்வனுக்குப் பாதகமாக இருக்கின்றன. இதனால் ஒரு சிறிய பெட்டிக்கடையை வைத்திருக்கிறான். அந்தக் கடையில் நாளொன்றுக்கு முன்னூறு ரூபாவுக்கு மேல் வியாபாரம் நடந்தால் அது அன்றைய அதிர்ஷ்டம். மற்றும்படி முன்னூறுக்குள்தான் தேறும். ஆனால், இதையும் விட்டால் வேறு வழியென்ன?

மாடொன்றை வாங்கினால் வீட்டில் வளர்க்கலாம். ஏற்கனவே ஒரு மாடும் கன்றும் நிற்கின்றன. அதோட இன்னொன்றைச் சேர்த்துக் கொண்டால் இந்தக் கடையை மூடிவிட்டு மாட்டுடன் நின்று கொள்ளலாம். பெட்டிக்கடை மலைச்செல்வனாக இருப்பதை விட மாட்டுக்காரவேலன் மலைச்செல்வனாக இருப்பது நல்லது. அது உபயோகமாக இருக்கும் என்று சொன்னான் ஒருநாள். இதற்கு யாரிடமாவது உதவி கேட்டுப்பார்க்கலாமா? என்று கேட்டான் ஒரு நாள்.

அது நல்ல யோசனைதான் என்று நானும் சொன்னேன். சொன்னதுடன், இதைப்பற்றி தெரிந்தவர்களிடம் சொல்லிக் கேட்டுப்பார்க்கிறேன் என்று சொல்லியும் விட்டேன். இதுதான் பிரச்சினையாகியது. இது நடந்து இரண்டாவது கிழமை, மலைச்செல்வன் என்னை வழிமறித்தான்.

"மாஸ்ரர், ஏதாவது நல்ல காரியம் நடக்கக்கூடிய மாதிரி இருக்கா?" என்று கேட்டான்.

அதற்கிடையில் நானும் எனக்குத் தெரிந்த நான்கைந்து பேரிடம் விவரத்தைச் சொல்லி உதவி கேட்டிருந்தேன். ஆனால் ஓர் இடத்திலிருந்தும் பச்சைக்கொடி பறக்கவில்லை. இந்த நிலையில் என்ன செய்ய முடியும்?

"முயற்சித்துக் கொண்டிருக்கிறன். எப்பிடியும் ஏதாவது ஒரு வாய்ப்புக் கிடைக்கும் எண்டு நம்பிறன்" என்று சொல்லிவிட்டுச் சென்றேன். இது நடந்து ஐந்தாவது நாள், மறுபடியும் மலைச்செல்வன் என்னை வழிமறித்தான். "என்ன மாஸ்ரர், ஏதாவது சரிவருமா?" என்று கேட்டான்.

என்ன பதிலை அவனுக்குச் சொல்ல முடியும்? கிடைக்காது என்று சொன்னால், நம்பிக்கை உடைந்து தளர்ந்து விடுவான். கிடைக்கும் என்றால் எப்போது என்று கேட்பான். என்ன செய்வது? முயற்சிக்கிறேன் என்றால் தன்னை ஏமாற்றுகிறேன் என்று எண்ணக்கூடும்.

எதற்கும் "ஒரு கொஞ்ச நாள் பொறுத்துப்பார்ப்பம். நான்கைந்து பேரிட்டச் சொல்லியிருக்கிறன். ஆராவது ஒருத்தராவது கைகொடுக்காமலா விடப்போகினம்?" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டேன். இதற்குப் பிறகு இன்னும் இரண்டு நண்பர்களிடம் அவனின் நிலைமையைச் சொல்லி உதவி கேட்டேன். எல்லோரும் விவரங்களைக் கேட்டனர். சொன்ன விவரங்களை ஏதோ புலனாய்வுத்துறையில் வேலை செய்கின்றவர்களைப்போல, சிலர் துருவித்துருவிக் கேட்டனர். அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். எல்லாவற்றையும் அறியக்கூடியதாக இருக்கும். எப்படியோ காரியம் நடந்தால் போதும் என்று எண்ணிக் கொண்டேன்.

ஆனால், மாடு வாங்கப்படவே இல்லை. மாதங்கள் கடந்தன. இந்தா உதவுகிறேன் என்று சொன்ன ஆள்கள் அதைப்பற்றிய பேச்சையே விட்டு விட்டார்கள். நான் தொடர்பு கொண்டால், தொடர்பு எல்லைக்குத் தூரமாக இருந்தனர். ஆனால், மலைச்செல்வன் விடவில்லை. எப்படியாவது தனக்கு யாராவது ஒருதர் உதவக்கூடும் என்று முயன்று கொண்டேயிருந்தான். இதற்குள் அவன் சில பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொடுப்பதற்கு யாரோ அழைத்து ஒரு வாரம் கடையை மூடிவிட்டுச் சென்றிருந்தான்.

அவனும் ஒரு காலம் பெரிய ஆளாக இருந்தவன்தான். நாலுபேர் பார்த்து வியந்த ஆள். ஏன் தலைவர் பிரபாகரனே அவனைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கியிருக்கிறார். தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த புகழ்பெற்ற பாடகர்களும் இசைக்கலைஞர்களும் மலைச்செல்வனைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். தளபதிகள் அவனைக் கொண்டாடியிருக்கிறார்கள். எல்லாம் மலையேறி விட்டது.

"பேர்தான் செல்வன் என்றிருக்குதே தவிர, பிச்சைப் பாத்திரத்தோடுதான் நிற்கிறன்" என்றான் ஒருநாள். கண்கள் கலங்கியிருந்தன.

அவன் பதின்மூன்று வயதில் இயக்கத்துக்கு வந்த ஆள். அதாவது பதின்மூன்று வயதிலேயே போராளி. இன்னொரு வகையில் சொன்னால் பதின்மூன்று வயதில் அரசியலில் முழு நேரமாக இறங்கிய ஆள். வேறு மாதிரிச் சொன்னால் குழந்தைப்போராளி. எப்படியோ அவனுடைய படிப்புப் பதின்மூன்று வயதில் நின்று விட்டது. அந்த வயதிலேயே மட்டக்களப்பிலிருந்து காட்டு வழியே நடந்து வன்னிக்கு வரும் போது அவனுக்குப் பதினான்கு வயதானது.

பதினான்கு வயதிலும் அவன் குழந்தைப்போராளிதானே. ஆனால், இயக்கத்துக்கு என்று வந்து விட்டால், போரிடவேணும். இயக்க வேலைகளைச் செய்யவேணும். அது எந்த இயக்கமாக இருந்தாலும்தான். மலைச்செல்வன் இளம்புலி.

மலைச்செல்வன் பயிற்சி எடுத்தது படுவான்கரையில் தரவைக்குப் பின்னே இருந்த தொப்பிக்கலக் காட்டில். போரிட வந்தது யாழ்ப்பாணத்திற்கு. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பிரதேச வேறுபாடெல்லாம் கிடையாது. அதிலும் குழந்தைப்போராளி இந்த இட வேறுபாடுகளையெல்லாம் பார்ப்பதில்லை. அது ஒரு பொருட்டுமல்ல. வன்னிக்கு வந்து, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த மலைச்செல்வன் எதிர்கொண்ட களம் வலி.மேற்கில் நடந்த ஒப்பரேஷன் போர்வேட் (முன்னேறிப்பாய்தல்) என்ற இலங்கை இராணுவத்தின் படைநடவடிக்கையே. முதல் களத்திலேயே படுகாயமாகிச் சிதைந்தது மலைச்செல்வனின் வலது காலும் வலது கையும்.

இளம்புலியின் இரத்தம் வலிகாமத்தில் ஊறியது. அந்தச் செம்மண் மேலும் சிவந்து செம்பாடாகியது. காயமடைந்த மலைச்செல்வனைப் பின்தளத்துக்கு எடுத்து விட்டார்கள். காயம் ஆறினாலும் கால் இயல்பான நிலைக்குத் திரும்பவில்லை. கையும் அப்படித்தான். வளைந்த தடியைப்போல அது நிமிரமுடியாமல் நின்றது. நரம்புகள் பாதிக்கப்பட்டு விட்டன என்றார்கள். ஓட முடியாது. இருந்தால் எழும்ப முடியாது. பாய முடியாது. கையினால் பாரத்தைத் தூக்க இயலாது. பதினைந்து வயதில் நடப்பதைத் தவிர, வேறு எதையும் செய்ய முடியாது என்ற நிலை. நடப்பது கூட இழுத்து இழுத்து அல்லது நொண்டி நொண்டியே.

போர்க்களத்துக்குப் போனவர்களின் விதி வேறு எப்படியாக இருக்கும்?

மலைச்செல்வனின் நிலைமையைப் பார்த்த இயக்கம் அவனுக்கு வேறு வேலை கொடுத்தது. அவனைக் கொண்டு போய் இசை படிக்க விட்டார்கள். துவக்கேந்திப் போராட வந்தவனுக்கு இசைக்கருவியேந்தும் விதி வந்தது. இதைத்தான் விதியின் விளையாட்டு என்பதா? வேறு வழியில்லை. பாடக்கொப்பியோடு இசைக்குறிப்புகளும் வாத்தியக் கருவியுமாக தொடங்கியது படிப்பு. பள்ளிக்கூடத்தை விட்டு வந்தவனுக்கு இங்கே வேறு விதமாக வந்தது படிப்பு. இதுவும் விதியின் விளையாட்டுத்தான்.

பதினைந்து வயதென்பது எதைப் பிடித்தாலும் இரும்பாகவும் எதைக் கடித்தாலும் கரும்பாகவும் எதைக்கொடுத்தாலும் அதைப் பற்றிக் கொள்ளும் வயதல்லவா. இசைக்குறிப்புகளை எடுத்துப் படித்தான். அதையும் விட கேள்வி ஞானத்தில் இசைக்கருவிகளை வாசிப்பதிலேயே அவனுக்கு ஆர்வம். வயதில் குறைந்த பையன். வேடிக்கையாகப் பேசும் இயல்பு. யாரோடும் நெருங்கி விடும் குணம். எல்லோருக்கும் செல்லப்பிள்ளையைப் போலாகி விட்டான். ஆனால், இந்தப் படிப்பு ஆறு மாதங்கள் ஓடவில்லை. அதற்குள் யாழ்ப்பாண இடப்பெயர்வினால் வன்னிக்குச் சென்றவனை வேறு பிரிவுக்கு மாற்றி விட்டார்கள். அங்கே ஒரு மூன்று மாதங்கள் அப்பிடி இப்பிடி எனப் பொழுது கழிந்தது.

இருந்தால் போல அவனுக்கொரு ஐடியா வந்தது. தலைவருக்குக் கடிதம் எழுதினால் என்ன? அப்பிடி தலைவருக்குக் கடிதம் எழுதும் கதைகளைப் பல போராளிகள் சொல்லிக் கேட்டிருக்கிறான். சரி, எழுதுவோம் என்று முடிவெடுத்தான். ஆனால், அதை எப்பிடி எழுதுவது என்று புரியவில்லை. நான்கைந்து கடிதங்களை எழுதிப்பார்த்தான். ஒன்று உருப்படியாக வந்த மாதிரியிருந்தது. அதைப் படித்துப் பார்த்துத் திருத்தங்கள் செய்து, பிறகு அதையே பிரதியெடுத்து அனுப்பியிருந்தான். அதில் இருந்தது ஆக மொத்தம் நான்கு வரிகள் மட்டும்தான். முக்கியமான சேதி, தான் மீண்டும் இசையைப் படிக்கப்போறன் என்பதே.

ஒருநாள் அவனை அழைத்துப் போக ஆட்கள் வந்திருந்தார்கள். இருந்த இடத்திலிருந்து புதிய இடத்துக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பாளர்களுக்கிடையிலான ஒப்பந்தங்கள் முடிய, அவன் வண்டியிலேறிப் போனான். அங்கே இப்போது இசையை விட ஒலிப்பதிவைப் படிக்கலாம் போலத் தோன்றியது மலைச்செல்வனுக்கு. அதையே படிக்கத் தொடங்கினான். இடையிடையே இசையைப் படித்தான். இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டதுதானே.

மூன்று ஆண்டுகளில் மலைச்செல்வன் தனியாகவே ஒலிப்பதிவுகளைச்செய்யும் ஆளாகி விட்டான். ஒரு கையினால் வித்தைகளைச் செய்து முடிக்கும் சாகஸக் காரன். தொடர்ந்து பல வேலைகள். பல சாதனைகள். பலருடைய பாராட்டுகள். ஆலோசனைகள். அறிமுகங்கள். வாழ்த்துக்கள்.

ஒருநாள் மலைச்செல்வனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. "குழந்தைப் போராளி இப்போது குடும்பத்தலைவன் ஆகிவிட்டான்" என்று கலாய்த்தான் மூத்த போராளியான தவா.

எல்லோரும் மலைச்செல்வனுடைய கைகளைக் குலுக்கினார்கள். அவனுடைய கொடி சில காலம் அந்த மாதிரிப் பறந்தது. பல பாடல்களை ஒலிப்பதிவு செய்தான். பல பாடல்களின் இசைக்குப் பங்களித்தான். தலைவர் பிரபாகரனின் உரைகள் சிலவற்றையும் ஒலிப்பதிவு செய்தான். இப்படியெல்லாம் படிகளில் ஏறிக் கொண்டிருந்தவனை வன்னியின் இறுதிப்போர் தலைகுப்புற வீழ்த்தியது. இயக்கம் தோற்கடிக்கப்பட்டபோது மலைச்செல்வனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தனித்து விடப்பட்டவனாக உணர்ந்தான். உண்மையும் அதுதான்.

படையினரின் விசாரணைகள், புனர்வாழ்வு நடவடிக்கைகள் எல்லாம் முடிந்து வெளியே வந்தவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சாவு தன்னை எதற்காக விலத்திச் சென்றது என்று மட்டுமே கேட்க முடிந்தது. அப்படிச் சாவு கிடைத்திருக்குமென்றால் எவ்வளவு நிம்மதியாக, ஆனந்தமாக இருக்கும் என்று எண்ணினான்.

ஆனால், பிள்ளைகள் அவனை அப்படிச் சிந்திக்க விடவில்லை. இரண்டு பிள்ளைகளுக்காகவும் எதையாவது செய்துதான் ஆக வேணும். வெளியே வந்தவனுக்கு ஐ.ஓ.எம் சிறு உதவி செய்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமியை விட்டு வெளியேறுங்கள்

"அடுத்த நூற்றாண்டுக்குள் மனிதர்கள் தமக்குப் பொருத்தமான கிரகம் ஒன்றைக் கண்டறிந்து அங்கு குடியேற வேண்டியிருக்கும்." இப்படி அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டிருக்கிறார் பிரபல அறிவியலாளர் ஸ்ரீபன் ஹக்கிங்.

பி.பி.ஸி. தொலைக்காட்சி எக்ஸ்பெடிசன் நியூ ஏர்த் (Expedition New Earth) என்ற ஆவணப் படத் தொடரை ஒளிபரப்புகிறது. ஸ்ரீபன் ஹக்கிங் தயாரித்து வரும் இந்தத் தொடரில், "மனிதர்கள் பூமியை விட்டு வெளியேற வேண்டிய நேரம் நெருங்கி விட்டது." என அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார்.

30 வருடங்களுக்கு முன்னர் "நாளைய உலகம்" Future Earth என்ற தொடரை பி.பி.ஸி. ஒளிபரப்பியது. அதன் தொடர்ச்சியாகவே இந்தத் தொடரும் ஒளிபரப்பப்படுகிறது என பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

"ஆயிரம் ஆண்டுகளில் மனிதர்களால் பூமி அழியும்" என ஹக்கிங் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் புதிய ஆவணப்படத்துக்காக உலகைச் சுற்றி வந்தவர் "பூமியின் அழிவுக்கு 100 ஆண்டுகளே போதும். அதற்குள் மனிதர்கள் வேறு கோளைப் பார்க்க வேண்டும். பூமியை எந்நேரமும் ஆபத்து நெருங்கலாம்." என வருத்தத்துடன் தெரிவித்திருக்கிறார்.

உலக அழிவுக்கு பல காரணங்களை அவர் பட்டியலிட்டபோதும், புவி வெப்பமாதல், அணு ஆயுதப் போர் அக்ஸ ரொய்ட் எனப்படும் சிறு கோள்களின் மோதல் என 3 விடயங்களை அவர் பிரதானமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இவற்றில் புவி வெப்பமாதலால் ஏற்படும் அழிவை இப்போதே உணரத் தொடங்கியுள்ளோம். உலகின் பல பகுதிகளில் வறட்சி நிலவுகிறது - தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. காடுகள் ஒரு புறத்தில் வறட்சியாலும் மறுபுறத்தில் மனிதர்களாலும் அழிக்கப்படுகின்றது. இதனால் வெப்பத்தின் அளவு மேலும் அதிகரித்து வருகின்றது.

அணு ஆயுதப் போர் வெடிக்கும் சூழ் நிலையே இன்று நிலவுகிறது. அணு ஆயுத வல்லமை உள்ள அமெரிக்கா - வடகொரியா நாடுகளின் முறுகல் நிலை இதற்கு சான்றாக உள்ளது. இவை இந்த இரு காரணிகளும் நெருங்கும் பட்சத்தில் சிறு கோள்களின் மோதலுக்கு இடமில்லாது போய்விடுகிறது.

ஹக்கிங் கூறுவது 100 வீதம் நடப்பதற்கான சாத்தியமே உள்ளது. எனினும் மனிதர்களுக்கு இருக்கும் சவாலும் கேள்வியும் என்ன தெரியும்ா? பூமியைப் போன்று உயிர்கள் வசிக்கக்கூடிய கோளுக்கு எங்கே போவது என்பதுதான்.

# இப்படியும் ஒரு நீதிபதி...!



கிழக்கு லண்டனில் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றிய சோபி பிராங்லின் என்ற பெண் ஒருவர் தனது நிறுவனத்தின் வங்கி செலவு அட்டையை உபயோகித்து 38 ஆயிரம் பவுண்ஸ் - இலங்கை மதிப்பில் சுமார் 74 இலட்சம் ரூபாவுக்கு உடைகள், சன்கிளாஸ், ஒப்பனைப் பொருள்களைத் தனக்கும் தனது சிநேகிதிகளுக்கும் வாங்கியிருக்கிறார்.

அத்துடன் வாடகை வண்டிக்கு 13 இலட்சம் ரூபா, கைபேசிக்கு 27 இலட்சம் ரூபா மற்றும் 2014 - 2016இற்கான அவரது தொலைபேசிப் பட்டியலுக்கும் செலவு செய்திருந்தார். அவரின் இந்த மோசடிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

நீதிமன்றில் அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி தனது தீர்ப்பை பின்வருமாறு வழங்கினார். இதுவே அவரது முதல் குற்றம் என்பதாலும், இதுவரை தண்டனை எதுவும் அனுபவித்துச் சிறைக்கு செல்லவில்லை என்பதாலும் அவரை சிறை வைக்க விரும்பாத நீதிபதி அவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைத்த 18 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

அதுவரை பொதுச்சேவை செய்து காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கினார். இதற்குள் அவர் நன்னடத்தையைக் காட்டினால் சிறை செல்லாது தப்பிக்கொள்ளலாம்.

இப்படியொரு முறையை இலங்கையிலும் ஏன் கடைப்பிடிக்கக் கூடாது என்று இங்கு அடிக்கடி "மாமியார்" வீட்டுக்குப் போய்வரும் வழக்கமுடைய நம்மவர் ஒருவர் கேட்கிறார்.




# இது உறவுக்கான சண்டையுங்கோ...

இரண்டு ஆண் ஒட்டகச்சிவிங்கிகள் தமது பலத்தை நிரூபிக்க நடத்திய "கழுத்துச் சண்டை"யைப் பல உல்லாசப் பயணிகள் கண்டு களித்தனர்.

ஆண் ஒட்டகச்சிவிங்கிகள் உறவுக்கு முன்னர், பெண் ஒட்டகச்சிவிங்கிக்கு தமது பலத்தை நிரூபிப்பதற்காக, கழுத்தை ஆயுதமாகக் கொண்டு சண்டை போட்டுக் கொள்வது வழமை. ஒன்றை ஒன்று மூர்க்கத்தனமாகத் தாக்கும். பலம் குறைந்தவர் நிலத்தில் வீழ்த்தப்படும்வரை இந்த சண்டை நீடிக்குமாம். சில வேளைகளில் மூர்ச்சை அடைந்து மரணத்தைத் தொடுவதும் உண்டு. பெரும்பாலும் சண்டையில் தோல்வியைத் தழுவிக் கொள்பவரை விரட்டி அடிப்பதுதான் வழக்கம்.

காதைச் சுருட்டுதல், தலையைத் தொங்கப் போடுதல் அல்லது பின்வாங்கி ஓடுதலும் தோல்வியாகக் கொள்ளப்படுகின்றன. இரு ஆண் ஒட்டகச்சிவிங்கிகளில் சண்டையின்போது வெற்றி வாகை சூடுவதே பெண்ணோடு கூடும் வல்லமையுள்ளவராகத் தீர்மானிக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொரு தடவையும் தமது இளமையை வெளிக்காட்டவும் பலத்தை நிரூபிப்பதற்கும் ஒட்டகச்சிவிங்கிகள் இந்தக் கழுத்துச் சண்டை போட்டுக் கொள்கின்றனவாம். ஒரு ஒட்டகச் சிவிங்கி 1,300 கிலோ வரை எடை கொண்டது. அவற்றின் கழுத்து மட்டும் 225 கிலோ இருக்குமாம்.

நல்லகாலம் பலத்தை நிரூபித்தால்தான் ஆணும் பெண்ணும் கூடலாம் என்ற விதி மனிதர்களுக்கு இருந்தால்....? ஹா....ஹா...ஹா



# பகலாகும் இரவு

உங்களுக்குப் பகலா இரவா பிடிக்கும் என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? பகலைத்தான் சொல்வீர்கள் இல்லையா? ஏன் பகலில்தான் நிம்மதியாக இருக்கிறோம். சுதந்திரமாக உலவுகிறோம். உழைக்கிறோம் விளையாடுகிறோம் ஊர்ஊராக சுற்றுகிறோம் இல்லையா...?

ஆனால் உண்மையில் இரவுதான் உன்னதமானது. ஐம்புலன்களுக்கும் இரவில்தான் வேலை கொடுக்கிறோம். நாள் முழுவதும் இரவாக இருக்கலாம் என்பதை விடப் பகலாக இருக்கலாம் என்பதையே நம்மில் அனேகர் விரும்பியிருப்போம். இரவைப் பகலாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

"மின்விளக்குகளை நிறையப் போட்டால் அலுவல் முடியும்" என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் பகல் என்ற உணர்வு வருமா..? அதை உருவாக்கத்தான் இப்போது ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சிக்கின்றனர். வானவெளியில் சூரிய ஒளி பிரதிபலிக்கும் விதத்தில் மிகப்பெரிய கண்ணாடிகளை நிறுவி பகல் உணர்வை ஏற்படுத்தலாம் என்பது அவர்களின் கருத்து.

இரவைப் பகலாக்குவதால் பொருளாதார ரீதியில் ஏராளமான நன்மைகள் கிடைக்கும் என்பதைத் தவிர எமது உடலின் வளர்ச்சி கூட பகலில்தான் அதிகம். இதேபோல பயிர்கள்கூட அதிகம் வளர்வதுடன், அதிக விளைச்சலும் அளிக்கிறது இதனால் உணவு உற்பத்தியையும் அதிகரிக்கலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

எல்லாம் சரி இரவு பகலாவதால் நன்மைகள் உண்டுதான். இயற்கையின் விதியை மாற்றினால் பக்கவிளைவு இல்லாமலா இருக்கும்?



புதினப்பூங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சைவத் தமிழ் பாடசாலையாக மலர்ந்து கல்வியியலாளர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும்

# மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

## சவால்கள்

உடற்கல்வி மற்றும் பிற விளையாட்டுக்கள் போன்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைப் பயிற்றுவிக்க விளையாட்டு மைதானம் இன்மை

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் முழு ஒத்துழைப்பின்மை

தற்பொழுது மாணவர்களிடையே' ஆடம்பர மோகம் அதிக செல்வாக்குச் செலுத்தி வருகின்றமை அவர்கள் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் குறைவான பாடங்களில் சித்தியடையும் மாணவர்களுக்கு அவர்களுக்கேற்ற தகுந்த வழிகாட்டல்களுக்கு மாணவர்களின் ஒத்துழைப்பின்மை.



தொகுப்பு:
அ.றொக்ஷன்

## வரலாறு

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தின் மீசாலை புத்தூர்ச் சந்திக்கு அருகில் வீரசிங்கம் மத்திய கல்லூரி அமைந்துள்ளது. வீரசிங்கம் என்னும் பெரியார் தனது ஆதனத்தில் ஒரு சைவத்தமிழ்ப் பாடசாலையை ஆரம்பித்துத் தானே தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியதோடு மூன்று ஆசிரியர்களையும் இங்கு கல்வி கற்பிப்பதற்கு நியமித்தார்.

29.08.1926இல் "வீரசிங்கம் சைவவித்தியாசாலை" எனப் பெயரிடப்பட்டு இப்பாடசாலை இயங்கிவந்தது. தற்காலிகக் கொட்டகையில் 5ஆம் வகுப்புவரை ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் படிப்படியாக வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு 1932இல் S.S.L.C வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

1935இல் "சீனியர் செக்கண்டரி" பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. 1950ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் இவ்வித்தியாலயம் பெரு வளர்ச்சியைக் கண்டது. 1968 இல் வீரசிங்கம் சைவவித்தியாசாலையாக இருந்த இப்பாடசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டமை அதன் வளர்ச்சிப் போக்கில் முக்கியதொரு மாற்றத்தை உண்டாக்கியது.

1971ஆம் ஆண்டில் முதன் முதலாக க.பொ.த மற்றும் உயர்தரத்தில் கலைப்பிரிவை ஆரம்பித்து 1973இல் உயர்தரப்பரீட்சையில் தோற்றிய இரு மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1974ஆம் ஆண்டு இப்பாடசாலையில் வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்த இம்மகாவித்தியாலயம் 1999இல் ஜனாதிபதியால் "நவோதயா" பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது.

2004ஆம் ஆண்டு வெளிச்சவீட்டுப் பாடசாலையாகத் (LIGHT HOUSE) தெரிவு செய்யப்பட்டது. இம்மகாவித்தியாலய மாணவர்களின் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு இது வழி கோலியது.

கல்வியிலும் கல்வியோடு இணைந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்து 2011 இல் கணித - விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1c பாடசாலையாக மாறியதோடு வீரசிங்கம் மத்திய கல்லூரியாகவும் தரயமுயர்த்தப்பட்டது.

இப்பாடசாலையில் மு.சின்னத்தம்பி, மு.பதஞ்சலி, பண்டிதர் ச.சிவலிங்கம், காசிநாதர், அ.நாகராசா, திருமதி புஸ்பா கணேசலிங்கம், தா.அராமலிங்கம், அ.பொ.செல்லையா, கு.சிவானந்தன், (இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவன்) வே.விநாயகமூர்த்தி ஆகியோர் அதிபர்களாக சிறப்புறக் கடமையாற்றியுள்ளனர். 2013.07.04 தொடக்கம் த.அம்பலவாணர் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். அவரின் கீழ் 824 மாணவர்களுக்கு 52 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

## சாதனைகள்

இப்பாடசாலையில் க.பொ.த. சாதாரணதரப் பெறுபேற்று வீதங்கள் அதிகரித்து வருகின்றன. 2016 டிசெம்பர் இல் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேற்றில் இரண்டு மாணவர்கள் 9ஏ பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று க.பொ.த. உயர்தரப் பெறுபேற்று வீதங்கள் அதிகரித்து வருவதுடன் பல்கலைக்கழக அனுமதிகளும் அதிகரித்துள்ளன. 2015ஆம் ஆண்டு 25 மாணவர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2013ஆம் ஆண்டு முதன் முதல் விஞ்ஞான - கணிதப்பிரிவு மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு முதன் முதலில் அதிவிஷேட சித்தியுடன் கொழும்பு மருத்துவ பீடத்துக்கு மாணவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்திறன் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகளில் என்பவற்றில் மாகாணமட்டம் மற்றும் தேசிய மட்டம் போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.


வலய மற்றும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியும் பெற்றுள்ளனர்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கல்: நிறைய மாங்காய்



- தமயந்தி

யாழ்.குடாநாடு முழுவதும் பிளாஸ்டிக் மேடுகளாகிக் கொண்டிருக்கின்றது. சுற்றுச்சூழல் பற்றிய எந்தவித விழிப்புணர்வோ பொறுப்போ அற்று சர்வ சாதாரணமாக வீசியெறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் நகரத்தையே ஆக்கிரமித்துக் கிடக்கிறது. நமக்கென்ன என்று இது சாதாரணமாகக் கடந்துசெல்லும் காரியமல்ல.

குறிப்பாக, நாவாந்துறை வடகரையான குடாக்கரையிலிருந்து தெற்கு நோக்கி வில்லூன்றி முனை தொடக்கம், அதிலிருந்து கிழக்காகக் கொட்டடியிலிருந்து குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை வரை கரையோரங்களில் நிறைந்தும், குவிந்தும் குப்பைகள் காணப்படுகின்றன.

நகரத்திலிருந்து தெற்காகக் கடலை நோக்கி வரும் ஐந்து கழிவுநீர் வாய்க்கால் கள் வழியாக இந்தப் பிளாஸ்டிக் கழிவுகள் மேற்படி கரைகளை வந்தடைகின்றன.

பிரதானமாக அதிகமான பிளாஸ்டிக் கழிவுகள் குருநகர் வாடியடியிலிருந்து கிழக்குக் கரை நீளம் கொய்யாத்தோட்டம் சந்தி வந்தேறும் கரை வரை மிக அதிகளவான நச்சுக் கழிவுகள் குவிந்து காணப்படுகின்றன.

எக்காலத்திலும் இவை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டதற்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை.

குருநகரை எடுத்துக் கொண்டால் இந்தக் கழிவுகள் அடைத்துக் குவிந்து கிடக்கும் கரையோரத்துக்கும் குடியிருப்புகளுக்கும் இடையிலுள்ள தூரம் 5இலிருந்து 10மீற்றர் இடைவெளிதான். இந்த நச்சுக் கழிவுகளிலிருந்து வெளியேறும் மாசடைந்த காற்றையே மக்கள் நேரடியாகச் சுவாசிக்கிறார்கள்.

வெயில் வெப்பம் உவர்நீரைச் சூடாக்கும்போது அதிலிருந்து வேகும் பிளாஸ்டிக் கழிவுகளின் நச்சுத் தன்மை அழுகிய கடற்பாசிகளுட்ன் கலந்து காற்றை மாசடையச் செய்வதோடு, இதை சுவாசிக்கும் குழந்தைகளையும், கர்ப்பிணிப் பெண்களையும் அதிகமாகப் பாதிப்படையச் செய்கிறது. இதனால் பிறக்கப்போகும் குழந்தைகள் ஊனமாகப் பிறப்பதற்கான சாத்தியங்களும், காரணிகளும் மிக அதிகம்.

இப்போது வேண்டுமானாலும் நீங்கள் யாரும் சென்று குருநகர்ப் பகுதியில் இந்தக் கவனிக்கப்படாத விஷக் கழிவுகளைக் காணலாம்.

தமிழ்மக்கள்மீது அரசுக்கு அக்கறையில்லாமல் இருப்பதில் எந்தவித அதிசயமும் இல்லை. தமிழ் அரசியல்வாதிகளுக்கு இவற்றைக் கவனத்தில் எடுக்க துளியளவும் நேரம் இல்லை. அவர்கள் வேறு பிரதான காரியங்களில் படுபிஸி.

ஆனால், அரசுக்கு இன்னொரு விசயம் தெரிந்திருக்க வேண்டும்.

ஆமைகளைப் பாதுகாக்கும் சுத்த பௌத்த அரசுக்கு இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

கடலில் கலக்கும் இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளால் அதிகளவில் கடலாமைகள் பாதிப்புக்கு உள்ளாகி வகை தொகையின்றி இறந்து விடுகின்றன. இதை நான் சொல்லவில்லை கடல்வள உயிரியல் ஆய்வு நிறுவனங்கள் சொல்லியிருக்கின்றன.

ஆக, மக்களைக் காப்பாற்ற வகையில்லையாயினும், கடலாமைகளையாவது காப்பாற்றும் பொருட்டு இந்த நச்சுக் கழிவுகளை அகற்றி அழித்து அரசு தனது கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளை வீசி எறிந்து நிலத்தையும், கடலையும், காற்றையும் மாசு படுத்தாமல், அவற்றைச் சேகரிக்கும் திட்டத்தை அமுல்படுத்தி, மறுஉற்பத்திக்குப் பயன்படுத்துவது பற்றி ஏன் இன்னமும் அரசு யோசிக்கவில்லை என்பது விளங்கவேயில்லை. இதில் அதிக வருமானமும் உண்டல்லவா?! ஒரு கல்லில் பல மாங்காய்.

# நமக்கும் இருக்கும் பொறுப்பு

- சர்மினா

கொலன்னாவை, மீதொட்டமுல்லையில் குப்பை மேடு சரிந்து பெரும் அனர்த் தம் நேர்ந்தபோது நம்மில் பலர் ஆழ்ந்த அனுதாபங்களை வெளி யிட்டோம். அறச் சீற்றத்துடன் அரசாங்கத்தைத் திட்டித் தீர்த்தோம். ஊடகங் களுக்கு சில வாரங்கள் நல்ல தீனியாக இருந்தது, மீதொர்ட்டமுல்லை வாசிகளின் துயரம்.

கழிவுகள், குப்பைகளை சரியான முறையில் நிர்வாகம் செய்து, மீள்சுழற்சிக்குப் பயன்படுத்துவதற்கான விஞ்ஞான ரீதியான வழிமுறைகளைக் கையாள்வது அனைத்தும் ஒரு நாட்டினது அரசினது கடமை தான். ஆனால் கழிவுகளை, குப்பைகளை நிர்வாகம் செய்வது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு தனி மனிதரினதும் கடமையும்கூட.


இலங்கையில் பொலித்தீன் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து, அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டிருக்கிறது. ஒருமுறை சுப்பர் மார்க்கெட் , ஷொப்பிங் சென்றால் சுமார் 8 - 12 வரையான பொலித்தீன் பைகளை வீட்டுக்கு எடுத்து வருகிறோம். பொலித்தீன், ஏனைய கழிவுகள் குப்பைகளைப் போல மக்கிப் போவதில்லை. அவற்றினால் சூழலுக்கும், நமக்கும் பல்வேறு பாதிப்புகள் உருவாகுகின்றது. பொலித்தீனை எரிக்கும்போது உருவாகும் நச்சு வாயு மலட்டுத்தன்மை, புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்களுக்குக் காரணமாகின்றது. குப்பை மேடுகள் மண்ணோடு உக்கிப் போவதற்கு வழிவிடாதபடி தடுத்துக் கொண்டிருப்பதும் இந்தப் பொலித்தீன்கள்தான்.

பல அபிவிருத்தியடைந்த நாடுகளைப்போல பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் அரசாங்கம்தான் தீர்வைத் தர வேண்டும் என்றில்லை. தனி மனிதர்களாக நமக்கும் பொறுப்புகள் இருக்கின்றன.

நாடு முழுவதிலும் உள்ள குப்பைகளை நிர்வாகம் செய்வதற்கு எம்மிடம் தீர்வு இல்லாதிருக்கலாம். ஆனால் நம்மால் மேலும் குப்பைகள் சேராதபடியாக பார்த்துக் கொள்வோம். அதற்கு நமது பிள்ளைகளையும் பழக்கப்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாட்சாயனிகளும் தலைவிரிகோலமும்

பஸ்பயணத்தில் நாலுபேர்களுக்கு முன் தலைவிரி கோலமாய் நின்ற ஒரு மங்கையின் தலை முடி, நாலுபேரையுங் கடந்து ஐந்தாவது ஆளையும் இம்சைப் படுத்திக் கொண்டிருந்தது. அவளும் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அது தன்னை அழகுபடுத்துவதாக அவள் எண்ணியிருக்கக் கூடும். தலையைச் சிலிப்பிச் சிலிப்பி மேலும் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள். “பிறர் முகத்தில் விளையாடி இம்சை பல செய்து வளர்ந்த இளங் கூந்தலே....” என்று பாடக் கவிஞர் கண்ணதாசன் இல்லாத குறையை உணர்ந்து கொண்டேன்.

இதேபோல தெருவில் படு வேகத்தில் பறந்துகொண்டிருந்த ஸ்கூட்டியில் அமர்ந்திருந்தவளின் கூந்தலும் சேலைத்தலைப்பினைப்போல சில கஜ தூரம் காற்றில் பறந்து கொண்டிருந்தது. தலைமயிர் அடிக்கடி உதிரக் கூடியது. அது உதிர்ந்து பின்னால் வருபவரை துன்புறுத்தலாம். அவளும் அதைப் பற்றிச் சட்டை செய்யாமல் ஒய்யாரமாய்ப் பறந்துகொண்டிருந்தாள். அது கூடப் பரவாயில்லை.

கடந்த மாதம் நடைபெற்ற கலியாண வீட்டில் உணவு பரிமாறிய இளசுகள் சில தலைவிரிகோலமாகவே காட்சியளித்தன. எனக்கருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் சாப்பாட்டை வைத்துவிட்டு வெளியே ஓடித் துப்பிவிட்டு வந்து புதிய தட்டு ஒன்று எடுத்து வந்து சாப்பிடத் தொடங்கினார். ஏனென்று கேட்டதற்குத் தொண்டைவரை சென்று சிக்கித் திரும்ப வந்த தலைமயிர் ஒன்றைப் பற்றிச் சொன்னார். “சாப்பாட்டில் தலை முடி வந்தால் உறவு நீடிக்கும்” என்று சொன்னேன். “உறவு நீடிக்கும் முன் தொண்டையில் சிக்கிய தலைமுடி எனது உயிரை எடுத்திருக்கும் தப்பிவிட்டேன்” என்றார் பயத்துடன்.

தெருக்கரையோரம் கோழி ஒன்று காலை உயர்தியபடி தலை கீழகாகக் கிடந்து துடித்துக் கொண்டிருந்தது. அண்மையில் சென்று பார்த்தால் அதன் காலை நீண்ட தலைமுடி ஒன்று சுற்றிக் கிடந்தது. யாரோ கவலையீனமாகக் காற்றில் பறக்கவிட்ட முடி அது.

தலைவிரி கோலமாய் கோவிலுக்குள் வருவதை இந்து மதம் ஏற்றுக் கொள்ள வில்லை. அத்துடன் மங்களகரமான எந்த விசேடத்திலும் தலைவிரி கோலமாய்ப் பெண்கள் முன் நிற்பதையும் இந்துமதம் நிந்திக்கிறது. இதை ஒரு சகுனத் தடையாகவும் பார்க்கின்றனர். இதை ஒரு மூடநம்பிக்கை சார்ந்த விடயமென்று கடந்துசெல்வதுதான் மூடத்தனம் என்பது பல விடயங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

மின் தூக்கி ஒன்றில் ஓடி வந்து ஏறிய தலைவிரி கோல மங்கையின் முடி, அதன் கதவிடுக்கில் மாட்டிக் கொள்ள, அங்கிருந்த புத்திசாலி ஒருவரால் அவர் காப்பாற்றப்பட்டார். தொடரூந்து ஒன்றில் பயணித்த ஒருவரின் கைக்கடிகாரத்தில் ஒரு மங்கையின் விரித்த கூந்தல் சிக்குண்டு இழுபறிப்பட்டதால் பிணக்குகள் தோன்றியது. “அவதானமாக இருக்கவில்லை என்று ஆணைப் பிழை சொன்னாள் பெண்”. “தலைவிரித்துச் சென்றது பிழை” எனப் பெண்ணைச் சாடினான் ஆண். அயலவர்கள் தலையிட்டுச் சமரசம் செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலையைத் தோற்றுவித்தது அந்தச் சூழல்.

விரித்த முடி பல விபரீதங்கள் ஏற்படுவதற்கு முற்குறியாகக் காட்டப்பட்டிருக்கிறது. தமது கணவர்களை அச்சுறுத்தவும், சொல்லாமலே நிலைமையைப் புரிந்து கொள்ளச் செய்யவும் இத்தகைய தலைவிரிகோலங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. சங்ககால இலக்கியத்தில் இதற்குப் பல சான்றுகள் உண்டு. மகாபாரதத்தில் பாஞ்சாலி தலைமுடியை விரித்தே அழிப்பதாகச் சபதம் செய்தார், மதுரையை எரித்த கண்ணகியும் கூந்தலை விரித்தே சபதம் செய்து பின்னர் மதுரையை அழித்ததாகவும் வரலாறு கூறுகிறது.

தற்போதும் தலைவிரி கோலத்தில் பெண்கள் நின்றால் ஏதாவது விபரீதம் நடைபெறப் போவதென்று அஞ்சும் ஆண்கள் பலர் இருக்கின்றனர். முன்னொருபோது மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலிலிதாவும் சட்டசபையில் தாக்கப்பட்டபோது தலைமுடிச் சபதம் ஒன்றினைக் கொண்டிருந்ததாக இணையக் காணொளிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இன்று தலைவிரிகோலம் நாகரிகமாகப் பார்க்கப்படுகிறது. விசேடமாகக் கோவில் திருவிழாக்களிலும், திருமணச் சடங்குகளிலும், பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் இத்தகைய தலைவிரி கோலம் ஏற்படுத்தும் இடைஞ்சல் மிகவும் கொடுமையானது. உதிர்ந்து காற்றில் பறக்கும். உணவிலும் இருக்கும். இது பற்றி யாரும் வாய் திறக்கமாட்டார்கள். ஏனெனில் அவர் அருகில் வருகின்ற தாரகையும் தலைவிரித்தாடி வருகின்ற அழகு மயிலெனக் காண்பீர்கள்.

மயில் தோகை விரிப்பதற்கும் அதன் இனச்சேர்க்கைக்கும் தொடர்பு இருப்பதாக படித்த ஞாபகம் உண்டு. தனது பெடையைக் கவரவும், அதன் உணர்வுகளை உச்ச நிலைக்குக் கொண்டு செல்லவும் இத்தோகை விரிப்புப் பயன்படுகிறதாம். அதே போல மனிதருக்கும் தலை முடி பாலுணர்வைத் தூண்டுவதாகவும் சொல்லப்படுகிறது. நீண்ட தலைமுடியைக் காணும் ஒரு ஆணுக்குக் காதல் உணர்வு தூண்டப்படுமாம். ஆனால் பின்னிய சடைக்கு அந்தத் தத்துவம் இல்லை என்றும் விரித்த சடைக்கே காமத்தைத் தூண்டும் சக்தி அதிகம் என்றும் சொல்லப்படுகிறது. இதைப் பெண்கள் அறிந்ததாலோ, என்னவோ பெரும்பாலானவர்கள் விரித்த் தலை முடியுடனேயே நடமாடிக் கொள்ளு கின்றனர். பொலித்தீனைப்போலத் தலைமுடியும் பல விபரீதங்களை ஏற்படுத்தக் கூடியது. சூழலையும் மாசு படுத்தும் என்று உணர்வீர்களாக. ஏனெனில் “இரண்டும் மக்கிப்போகப் பலகாலம் எடுக்கும்” என்று ஆய்வாளர்கள் சொல்லுகின்றனர். ●

## பொறுப்பான பதவி பொறுப்பற்ற பேச்சு

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயரின் கூற்றானது உண்மைதான். இதை ஒரு ஆன்மிகத் தளத்திலிருந்து நான் பார்க்கிறேன். பொறுப்பற்றவர்கள் எண்ணிக்கைகள் சமூகத்தில் அதிகரிக்குமானால் பின்னடைவுகளுக்கு நாமே பொறுப்பாளர்களாவோம். பொறுப்பிலுள்ளவர்கள் என்று நாம் இதுவரை எண்ணிக் கொண்டவர்களில் பலர் அறிந்தோ, அறியாமலோ சில கேவலமான அரசியலுக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். தெரிந்த பின்னர் கூட வெளிவர முடியாதவாறு அவர்கள் இருப்பது எமது சமூகத்திற்கு நேர்ந்த கொடுமை என்றுதான் எண்ணத் தோன்றகிறது.

சமூகப்பொது நிறுவனங்களிலும் சமயம் சார்ந்த நிறவனங்களிலும் அரசியல் புகுந்து விளையாடிக் கொண்டிருப்பது கண்கூடு. இத்தகைய நிறுவனங்களில் மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றும் தெரியாது. தெளிந்த நீரோடைபோலத் தோன்றும். ஆழ இறங்கிப் பார்த்த பின்னரே அங்கும் அவர்கள் ஒரு அரசியலின்பால் பட்டுக் கிடக்கின்றனர் எனத் தெரியவரும்.

எங்கும் அரசியல், எதிலும் அரசியல் என்ற சூழலுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே ஒவ்வொருவரும் தாம் பற்றிய சுய விமர்சனத்திற்குட்படவேண்டிய காலகட்டத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். பதவி வகிப்பவர்களே இதை முதலில் செய்ய வேண்டியவர்கள்.

பொறுப்பைச் சரிவர உணராது செயற்படுவோமானால், அவர்கள் தாம் வகிக்கும் பொறுப்பு வாய்ந்த பதவிக்கும் பொறுப்புக்கும் இழுக்கைத் தேடிக்கொடுப்பவர்களாவார்கள் என்பது எனது கருத்து. வண. ஆயர் சொன்னதைப்போல பொறுப்பான பதவியில் பொறுப்பற்றவர்கள் இருக்கவும் கூடாது. பொறுப்பான பதவியிலிருப்பவர்கள் பொறுப்பற்ற முறையில் பேசவும் கூடாது. சமூகத்திற்கு முன்னால் ஒரு விடயத்தைக் கொண்டு செல்லும்போது அது பரிபூரண ஆதாரத்தோடு இருக்க வேண்டும். அவர் கொண்டுள்ள பதவியை வைத்து மக்களை நம்ப வைக்கக் கூடாது. இத்தகைய நிலை தொடருமானால், தெற்கிலிருந்துதான் பின்னடைவுகள் வரத்தேவையில்லை. கோட்ரிக் காம்பைப்போல நாமே நம்மை அழித்துக்கொள்வோம். ●

## மாடு...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதை வைத்துக் கொண்டு இந்தப் பெட்டிக்கடையைப் போட்டான். தெரிந்தது ஒலிப்பதிவு மட்டுமே. யாராவது வந்தால் பாடல்களை மாற்றிப் பதிவு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறான். உண்மையில் இப்படி இதை நம்பிக் குந்திக் கொண்டிருக்க முடியாது. “யு ரியுப்பிலும், போனிலும் வேண்டியதையெல்லாம் பார்க்கலாம்” என்று வந்த பிறகு “தன்னை யாருக்கும் தேவையில்லை” என்று பட்டது. இத னால்தான் மாடு வாங்கி வளர்க்கலாம் என்ற முடிவுக்கு மலைச்செல்வன் வரவேண்டியிருந்தது.

ஆறு மாதங்களாக மாடொன்றை வாங்குவதற்காக நானும் மலைச்செல்வனு மாக முயன்று கொண்டிருக்கிறோம். ஒரு மூத்த அரசியல்வாதியின் நிலை இப்படி ஆகிவிட்டதே என்ற சிலவேளை நான் நினைப்பதுண்டு. “ஒரு புகழ்பெற்ற போரர்ளிக்கு இந்தக் கதியா?” என்று ஒரு நாள் மலைச்செல்வனின் மனைவி கேட்டாள். அந்தக் கேள்வி கடுமையான அங்கதமாகவும், கடும் துயரமும், கோப மும் உள்ளதாகப்பட்டது எனக்கு. என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை எனக்கு.

“நாடுதான் கிடைக்கவில்லை. மாடாவது கிடைக்குமென்றால், அதுவும் கிடைக்குதில்லை” என்றான் மலைச்செல்வன் இன்று. ●

## இழந்து போதல்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)


இந்த மறக்கப்பட்ட வடக்கு நாட்டார் இலக்கியங்கள் பற்றி. ஆழமாகவும், நிதானமாகவும் ஆராய்ந்து பயன்படுத்தப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

“இன்றைய ஈழத்திலிருந்து வரும் படைப்புக்களில் பெரும்பாலானவை போர் என்ற பின்னணி தாங்கிய வரலாற்றுச் சுவடுகளே. இதில் மறுக்கவோ எதிர்க்கவோ எதுவுமே இல்லை. எழுத்தாளன் எதைச் சுற்றி இருக்கிறானோ அதுதான் அவன் எண்ணங்களைத் தீர்மானிக்கும். அதுவே பேனா வழியே வழியும். வடக்கு எழுத்தாளர்களில் சுற்றம் போரும், அதன் வடுவும், அதன் பின்னான வாழக்கையையும் தாங்கியது. அதுதான் அவர்களின் படைப்புக்கள். அதுதான் இலக்கியங்கள்.

இந்த மரபு இன்று நேற்று இல்லை, காலம் காலமாக இருக்கின்ற உண்மைக் கருத்தியல். இதனாலேயே இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி எனக் கூறப்படுகின்றன.”

முடிவிலியாகத் தொடர்கின்ற நாட்டார் இலக்கியம் ஈழத்தின் வடக்கில் கொஞ்சமேனும் மூச்சுப்பிடித்து உயிர்வாழ ஏதாவது செய்ய இனியாவது முயல்வோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்டனை

பார்வைநயம்–24

■ கணபதி சர்வானந்தா

"இன்னும் சொல்லப்போனால் பாடசாலை வகுப்பறைகளைக் கூட்டிப் பராமரிப்பதற்காக வாங்கும் துடைப்பங்களுக்காக அவர் தன் சொந்தப் பணத்தை செலவிட்டிருப்பது பலருக்குத் தெரியும். அவருடன் ஆசிரியராகப் பணியாற்றிய பலரும் மாலை வேளைகளில் தோட்டம் துரவென்றும், கல்வி நிறுவனங் களென்றும் வருவாயைத் தேடித் தேடிச் சென்ற காலத்தே, அவர் மட்டும் கல்விப் பலமற்ற மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்தார். அவர் மனைவி மட்டுமே அவர் வழியைப் போற்றியவர். பிறர் அவரைப் பிழைக்கத் தெரியாத மனிதர் என்று புறணி கூறினர்."

இன்று அவரை நான் பார்த்போது அவர் முகத்தில் முன்பிருந்த அறச் சீற்றம் முழுமையாக அற்றுப் போய்விட்டதை அவதானித்துக் கொண்டேன். நின்று பேசாமல் என்னைக் கடந்து சென்ற வேகமும் சற்று அதிகம்தான். என்னுடன் பேசுவார் என்று எதிர்பார்த்து நான் ஏமாந்து போனது என்னவோ உண்மைதான். "ஏன் இப்படி? இவர்..." என்று என்னை நானே பல முறை கேட்டுக் கேட்டுத் தோற்றுப் போய்விட்டதன் விளைவு, அவர் வீட்டுப் படலையடியில் நான் அவருக்காகக் காத்திருக்கிறேன்.

முன்பு எதற்கெடுத்தாலும் முன்னுக்கு நிற்கின்ற மனிதன் அவர். ஊர் சனசமூக நிலையக் கூட்டமாக இருந்தாலும் சரி, நூல் நிலைய மாதாந்தக் கூட்டமானாலும் சரி, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் சரி அவர் வருகிறார் என்றால் மற்றவர்கள் பின் வாங்குவது வழக்கம். சில ஊர்ப் பிணக்குகள் கூட அவர் முற்றத்திலேயே சமரசம் செய்யப்பட்டுவிடும். பல குடும்பங்களைச் சிதைந்து போகாது காப்பாற்றிய மனிதர் அவர்.

எல்லாம் நேராக... எல்லாம் சீராக ... எல்லாம் முறையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிற மனிதர். அவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் நேரம் தவறிச் சென்றதாகக் கல்வித் திணைக்களத்தில் குறிப்புகள் கிடையாது. கடமை தவறியதாகவும் இல்லை. அரச உடைமைகளை அவதூறாகப் பாவித்ததாகவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் பாடசாலை வகுப்பறைகளைக் கூட்டிப் பராமரிப்பதற்காக வாங்கும் துடைப்பங்களுக்காக அவர் தன் சொந்தப் பணத்தை செலவிட்டிருப்பது பலருக்குத் தெரியும். அவருடன் ஆசிரியராகப் பணியாற்றிய பலரும் மாலை வேளைகளில் தோட்டம் துரவென்றும், கல்வி நிறுவனங் களென்றும் வருவாயைத் தேடித் தேடிச் சென்ற காலத்தே, அவர் மட்டும் கல்விப் பலமற்ற மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்தார். அவர் மனைவி மட்டுமே அவர் வழியைப் போற்றியவர். பிறர் அவரைப் பிழைக்கத் தெரியாத மனிதர் என்று புறணி கூறினர்.

அன்று காலை வழமைபோல் எழுந்து சூரிய நமஸ்காரம் செய்து பின்பு பூப்பிடுங்கிக் கும்பிட்டுவிட்டுக் காலை ஆகாரத்தையும் முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் பெரிய கடைக்குப் புறப்பட்டார். நாட்டு மருந்துக் கடை ஒன்றில் மருந்துச் சரக்கொன்று வாங்கியபின் சத்திரச் சந்தைக்குள் புகுந்து புகையிலை, வெற்றிலை, நாட்டுப் பனாட்டு, பனங்கட்டிக் குட்டான் என்று தேவையானவற்றை வாங்கினார். பாய்க்கடைப் பக்கம் வந்து தனது நண்பனான பாய்க்கடை பரமதேவனைச் சந்தித்துச் சுகம் விசாரித்து விட்டுப் புறப்பட்டார். பஸ்தரிப்பு நிலையம் வந்து பார்த்தார். சீ.ரீ.பீ பஸ் ஒன்று தரித்து நின்றது. ஏறினவர் பஸ்ஸில் இருந்தவாறு சற்று அயர்ந்து போனார்.

பஸ் படுவேகமாக சென்று கொண்டிருந்தது. பலர் ஏறினார்கள் பலர் இறங்கினார்கள். கொண்டக்டர் முன்னும் பின்னுமாக ஓடி ஓடி ரிக்கற்றுகளை கொடுத்துக் கொண்டிருந்தான். இவரை அவன் கவனிக்கவில்லை. அவர் கண்ணயர்ந்த நிலையிலேயே பயணித்துக் கொண்டிருந்தார். பஸ் தரிப்பில்லாத ஒரிடத்தில் திடீரென பஸ் நின்றது. கொண்டக்டர் பரபரப்பானார். பஸ் ஸினுள் திடீரென ஏறிய ஒருவன் பஸ் கொண்டக்ரரிடம் ரிக்கற் மெஷினை வாங்கிக் கொண்டான்.

"எல்லாரும் ரிக்கற்றை கையிலை எடுங்கோ" வந்தவர்களில் ஒருவன் பிரயாணிகளைப் பார்த்துச் சத்தமிட்டான். "என்ன பிரச்சினை" தனக்குப்பக்கத்திலிருந் தவரிடம் அவர் கேட்டார். 'ரிக்கற் செக்கர்மார்' வந்திருக்கினம். ரிக்கற் எடுத்ததோ எண்டு சோதிக்கினம்" என்று அவன் சொன்னான். அப்போதுதான் அவருக்குத் தான் இதுவரை ரிக்கற் எடுக்காமல் பிரயாணம் செய்தது தெரிய வந்தது. அவருக்கு அண்மையில் ரிக்கற் செக்கர் வந்தான். அவர் மௌனமாக இருந்தார். பல கேள்விகள். பல மறுமொழிகள். பல விமரிசனங்கள். "ஐயா தண்டமும் ரிக்கற் காசின்ரை இரண்டு மடங்கும் எண்டு எல்லாமாகச் சேர்த்து 290 ரூபா கட்டுங்கோ" பணத்தைப் பெற்றுக்கொண்டு ரசீதைக் கொடுத்தான் கொண்டக்டர். அவர் இறங்கவேண்டிய இடம் வந்தது. குனிந்த தலை நிமிராது நடைபிணமாக இறங்கினார் அவர்.

வாழ்க்கையில் அவருக்கு விழுந்த நடந்த முதலாவது அடி இதுவாகத்தானிருக்கலாம். உயர் நீதிமன்றக் கூண்டில் ஏறி தண்டிக்கப்பட்ட உணர்வோடு வீட்டு வாசலையடைந்தவர் மௌனமாக இருந்தார். யாருடனும் பேசவில்லை. லேசாகக் காய்ச்சல் காயந்தது. மருந்தெடுக்கவில்லை. குடி நீரோடு சமாளித்துக் கொண்டார். "தண்டிக்கப்பட்டவன் தரணியை ஆளக்கூடாது" என்றது அவர் மனம். அன்றிரவே கூடத்திலிருந்த மேசையில் உட்கார்ந்து வெள்ளைப் பேப்பரில் பல கடிதங்களை எழுதினார். மறுநாள் காலையில் புறப்பட்டுப் போனவர் மதியம் வரை வீடு திரும்பவில்லை. அவர் வீட்டு முன்றிலில் நின்ற மக்கள் கூட்டம் அவர் கிராமத்திலுள்ள எல்லா பொது நிறுவனங்களிலும் வகித்த பொறுப்புக்களிலிருந்து ராஜினாமா செய்திருந்த கடிதங்களைத் அவரிடம் திருப்பிக் கொடுக்கக் காத்திருந்தனர்.

**உண்மையானவன் உள உறுத்தலில் கூட**
**பயப்படுவான் என்கிறது ஆன்மிகம்**

# காதல் வரி

இலைகள் உதிர்த்து உதிர்த்து
மாரி நெடுந்துயிலிற்குத் தயாராகும்
குளிர்கால மரங்களின் மேல்
மூச்செறிகிறது
இன்னும் தலை நிமிராத நிலவு.

ஹேக் நகரின் இச் 'சமாந்தர வீதி'யில்
273ஆம் இலக்க வீட்டின்
முன்னறை சிறிது புதிது
சுவரில் 'வான் கோவின்' பூமரம்.

இரவு விளக்கின் மெல்லிய ஒளி
கசிந்து கதிரையின் முதுகின்மீது
விசிறப்பட்டுக் கிடக்கும்
மார்புக் கச்சையின்மீது படர்கிறது.

காது மடல்களின் பின்புறம்
இதழ்கள் தொட மனம் இழைந்து
உடல் அவிழ்ந்து பொறி கிளம்பித்
தீ பிறந்தது.
காட்டுத் தீயெனப் பற்றி எரிந்தோம்.
தணல் பறந்து தகித்த வெப்பத்தில்
வெளியே உறைபனியும் உருகிற்று.

மொழியைக்
கண்களும் உடலும் எடுத்துக்கொண்ட
பிற்பாடு சொற்கள் உறைந்தன.
பின் உருகி அனுங்கலாயின
இடையிட்ட மௌனத்தின் அர்த்தப்
பிரவாகமோ முடிவிலி வரை.

நீராயப் பெருகி நதியாய் நகர்ந்து
கடலாகப் பரந்து செறிந்தோம்.

செயலிழந்து, உடைந்துபோன
காலைக் கடிகாரத்தின் நுண்ணிய
பகுதிகள்,
இலையுதிர் காலத்தில்
உதிர்ந்து சிதறிய சருகுகள்
இவற்றோடு வீசியெறியப்பட்டுக்
கிடந்தன புலன்கள்.

காமனின் கண்ணி வெடி
உயிர் பிளந்து உதிக்கிறது
காதல் புதிதாக

ஒருபோது நான் நானில்லை
பெண்ணானேன்.
நீ என்னுள் நுழையப்
புலன் மயங்கிற்று
புவியீர்ப்பை எதிர்த்து
ஒரு முடிவற்ற நீர்வீழ்ச்சிதான்
நானென உணர்ந்தேன்
மறுபோது ஆணானேன்
இரவின் சங்கீதம் நடம் புரிகிற
இரு உடல் வெளி
எரிகிற நிலவு இன்னும் உதிரும் சருகு.

பெருங்காற்றில் உழன்ற
மூங்கில் காடு போலக்
குழம்பிற்று கூந்தல்
விரகம் எரித்த இரவு

விடியலாக வெளிற
காதல் தீ தணிந்து உடல் அவிய
கண்ணிருண்டு துவண்டேன்
எனினும் துயில் இன்றல்ல
நாளை

அதுவரை
சுழலும் உலகம் தன் அச்சில் மாறிச்
சுழல்க சுழல்க
ஒளிரும் கண்ணும் உடலும் இன்னும்
மலர்க மலர்க.

- சேரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இழந்து போதல்...

- பிருந்தன் கணேசலிங்கம்

மனித நாகரிக வளர்ச்சியுடன் கூடவே வளர்ந்து வந்த முக்கிய கூறு மனிதப் பண்புகள். மனித நாகரிகத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு மனிதப் பண்புகள் உருவாகி வளர்ச்சியடைந்து, முதிர்ந்து போய், செப்பனான முறையில் வரையறுக்கப்பட்டு இன்று வெளிவந்து விட்டன. சொல்லளவில் மிக முதிர்ச்சியான மனிதப்பண்புகள் இன்று எல்லா சமூகங்களிலும் ஊடுருவியிருகின்றன. எம் சமூகத்தில் இன்றிருக்கின்ற எல்லா மதத்தினருக்கும் நன்கு வரையறுக்கப்பட்ட மனிதப் பண்புகளை கூறுகின்ற மத நூல்கள் எழுத்துவடிவில் இருக்கின்றன.

அதை விட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அதற்கே உரிய மிக தொன்மையான வாய்வழி இலக்கியங்கள் மிகப் பலமான மனித பண்புகளை கடத்திக்கொண்டு இருகின்றது. இவையெல்லாம் வெறும் எழுத்துரு சொல்வழித் தளத்தில் இயங்குகின்றனவே ஒழிய சமூகத்துக்குள் ஊடுருவி புழங்குகின்ற தன்மை அற்றனவனாகக் காணப்படுகின்றன. இந்தப் புழக்கம் இன்மையின் வினைதான் இன்றைய சமூகச் சீர்கேடுகள். எமது சமூகங்களுக்கு மனிதப்பண்புகளை உருவாக்கவேண்டிய தேவை இல்லை. ஆனால் அமுல்படுத்தவேண்டிய, பின்பற்றவேண்டிய தேவை இருகின்றது. இதை யாரும் மறுத்துவிட முடியாது.

வடக்கில் காலம் காலமாக இருந்த மக்களிடையே வாய்மொழியாகப் பேசப்பட்டு பின்பற்றப்பட்டு கடத்தப்பட்ட மனிதநேயப் பண்புகளை கூறும் கதைகள்தான் இந்த பாகத்தின் மையப்பொருள். வடக்கு மனிதர்களிடையே காலம் காலமாக இருக்கின்ற இருபிரச்சனைகளை சுற்றியே எல்லா மனிதநேய கதைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒன்று ஆட்சி, இன்னொன்று குடும்பம். இவை இரண்டிலும் நாளாந்த வாழ்வியலில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கலை கருவாகக் கொண்டு நல்லது இது கெட்டது இது என்று வரையறை செய்கின்ற கதைகளாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. இரண்டு அரசு மற்றும் குடும்ப கட்டமைப்புக்களை களமாகக் கொண்டு பிரச்சினையை முன்வைத்துப் பின்னர் அதனால் உழல்கின்ற மக்களின் வாழ்வியலை காட்டி கடைசியாக பிரச்சினையிலிருந்து மீள்கின்ற வழியை போதித்து கதையை முடித்துக் கொள்கின்றனர். பெரும்பாலான கதைகள் இந்த கட்டமைப்பிலேயே இருக்கின்றன.

கதைகளில் சில நுட்பமான குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் சமூகத்தில் இருக்கின்ற தீய சக்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இதன் பின்னணி இப்படியாக அமைகின்றது. அதிகாரங்களில் இருப்பவர்களிடையே இருக்கின்ற தீய எண்ணம் கொண்டவர்களை எதிர்த்து வெளிப்படையாகக் கதைக்கக்கூடிய அல்லது போராடக்கூடிய திறன் அற்றவர்களாக இருந்த மக்கள், அவர்களை ஐந்து அறிவு படைத்த மிருகங்களாகவே கருதினார்கள். அவர்கள் செய்கின்ற அட்டகாசங்களைப் பிறருக்கும் அறிவிக்கின்ற, அறிவுறுத்துகின்ற வகையில் அதிகாரத்தில் இருக்கின்ற தீயவர்களை மிருகங்களுக்கு ஒப்பாகப் கருதி மிருகங்களாகவே வடித்துள்ளனர். அவர்களுடனான சாதாரண மக்களின் உரையாடல்களும் போராட்டங்களும் வெற்றியும் தோல்வியும் அதனூடு வெளிப்படுகின்ற நல்ல, தீய மனிதப்பண்புகளின் பிரிவினையையும், இந்தக் கதைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆட்சியில் இருக்கின்றவர்களிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

● ● ●

**கதை 1**

"... ஒரு நாள் நெல்லைக் காயவைத்துகொண்டிருக்கும் பெண்ணிடம் சென்று 'உன்னை கடிக்கட்டா இல்லை நெல்லை கொறிக்கட்டா?' என்றது காட்டுப் பன்றி, அவள் பயத்திலேயே 'நெல்லை கொறித்துக்கொள் என்றாள்...."

● ● ●

**கதை 2**

"......கல்யாணத்தன்று குரங்கு அவனிடம் இதைக்கூற அவன் மறுத்துவிட்டான். பின்னால் ஏதோ ஒரு வகையில் குரங்கு அவனிடம் பேசி சம்மதிக்க வைத்தது........"

● ● ●

**கதை 3**

"......... அவளை மயக்கிக் கொண்டு சென்ற புலி ஒரு அழகான ஆண் புலிக்குழந்தையை அவளுக்கு கொடுத்தது......"

● ● ●

**கதை 4**

".......தவளையிடம் அரசியைப் பார்த்து வரும் படி அவன் தூது அனுப்பினான். அதை அரச கழுகு கவனித்து ராஜாவிடம் சொல்லி விட்டது......"

● ● ●

சில கதைகளில் மனித அறியாமையும், அதனால் ஏற்படுகின்ற தவறுகளும் அதற்கு உதவுகின்ற மாந்தர்களும் என உதவி செய்தலையும் செய்த உதவியை மறக்காமல் இருத்தலையும் ஆழமாக கூறுகின்றன. இவற்றுள் பொதுவாகக் குடும்பப் பின்னணியே பயன்படுத்தப்படுகின்றது.

● ● ●

**கதை 5**

" ஒரு விவசாயி தினமும் பெரிய பெரிய கிழங்குகளைப் பிடுங்கி வீட்டிற்கு கொண்டு வருவான். ஆசையுடன் மனைவியிடம் கொடுத்துக் காய்ச்சச் சொல்வான். அவளும் பக்குவமாக பெரிய கிழங்குகளை அடியிலும் சிறிய கிழங்குகளை மேலும் வைத்து காச்சுவாள். காய்ச்சிய கிழங்குகளை அவன் தட்டில் குப்புறக் கொட்டுவாள். எப்போதும் அவனுக்குச் சிறிய கிழங்குகளே கிடைக்கும். அதனால் மிக வருத்தம் அடைந்தவனாய் நண்பனிடம் ஒருநாள் சென்று விவரத்தை கூறினான். நண்பன் நெய்யை மனைவிக்கு தெரியாமல் தாச்சியின் அடியில் பூசி விட்டு விவரத்தை பார் எண்டான். இவனும் அப்படியே செய்தான் அண்டைக்கு எல்லா கிழங்குகளும் அவன் தட்டில் விழுந்தன. மனைவி தான் செய்த அறியாமையின் தவறை உணர்ந்து மன்னிப்புக்கேட்டாள். விவசாயி நண்பனுக்கு நன்றியுடையவனாக இருந்தான்."

● ● ●

இந்த வாய்வழிக் கதை உதவி, மன்னிக்கும் மனப்பாங்கு, நன்றிமறவாமை என்ற மனிதப் பண்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. இருந்தும் இதன் பின்னணியில் இருக்கின்ற, இதே போன்ற சில கதைகளின் பின்னணியில் இருக்கின்ற வெளிப்பாடுகள் பெண் அறியாமை என்ற கருவில் பேசுகின்றன

அடுத்து மிக முக்கியமாகக் கதைகளில் இருக்கின்ற பண்பு பாசம். அம்மா - மகன், அண்ணன் - தங்கை, கணவன் - மனைவி என்ற பாசப்பிணைப்புக்கள் போன்றவை கதைகளில் இழையோடி இருக்கிறன. எந்தச் சந்தர்ப்பத்திலும் மகனை விட்டுக்கொடுக்காத அம்மா, ஐந்து அண்ணன்களை தனது சாகசத்தால் மீட்ட தம்பி, தங்கையின் பாசத்துக்காக மனைவியை துறந்த அண்ணன் என்று கதைகள் ஒவ்வொன்றும் விதவிதமான பாசப்பிணைப்புகளைக் காட்டுவதாகவே அமைகின்றன.

● ● ●

**கதை 6**

"....அண்ணா! அண்ணி செய்யும் கொடுமைகளை பார் என்று கேட்பது போல அவனுக்கு அவன் நான்கு தம்பியரின் பார்வைகள் இருந்தன, அவன் மனைவியை துரத்திவிடவில்லை. பக்குவமாய் பல மொழிகள் சொன்னான். அவளும் வெகு விரைவில் திருந்தி அண்ணனும் தம்பிமார்களும் அண்ணியும் மருமகளும் மிகச் சந்தோசமாக வாழ்ந்தார்கள்....."

● ● ●

**கதை 7**

"......புலி மரத்தின் மேலே நின்றதைப்பார்த்த அண்ணன் அது தாவும் முன்னர் தங்கச்சியைக் காப்பாற்றப் புலி மீது பாய்கிறான்......"

● ● ●

அரசாட்சிக்குள் நடக்கின்ற பிரச்சினைகளையும், அதில் ஏற்படுகின்ற கவனக்குறைவால் உண்டாகின்ற பிழைகளையும் மந்திரி ஊழியர் அரசர் உறவுகளையும் இளவரசியின் காதல், உதவுகின்ற மனப்பாங்குகளையும் போர்யுக்தி அரச பரஸ்பர உறவுமேம்பாட்டையும் அதிலே உண்டாகின்ற உன்னத மனித பண்புகள் பற்றியும் சில கதைகள் விவரிக்கின்றன.

மனிதப்பண்பு என்ற வகையோடு பேய்க்கதைகள் மந்திரக்கதைகள் என அமானுஷ்யங்களை பற்றிய கதைகள் வெகு சிலவும் காணப்படுகின்றன.

இந்தப் பேச்சு வழிக் கதைகள் எல்லாம் எந்தக்குறையும் இன்றி கடத்தப்படுகின்றனவே ஒழிய பயன்படுத்தப்படுகின்றனவா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். இதிலிருந்து முடிவுகளையும் அனுபவங்களயும் எடுத்துக்கொள்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. மிக உன்னத பண்பாடு நாகரீகம் என்று வெறும் புறவய நிலுவைகளை கொண்டாடுகின்றோமே ஒழிய அகவயமாக நாம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. இதுதான் நிதர்சனம். (18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டி

பாத்திரங்கள் வைப்பதற்காக தடிகளால் வரியப்பட்டு அமைக்கப்படுவதே தட்டி. தமிழர்களின் பாரம்பரிய வீடுகளில் முக்கியமாக தட்டி இடம்பெற்றிருக்கும். வீட்டின் உள்ளே சமையலறையிலும், வீட்டின் வெளியே கிணற்றுக்கு கிட்டவாகவும் தட்டிகள் அமைக்கப்பட்டன.

சமையலுக்குத் தேவையான பாத்திரங்களை அடுக்கி வைப்பதற்கு சமையலறையில் தட்டி அமைக்கப்பட்டது. இதேபோல கழுவிய பாத்திரங்களை காய வைக்கவும், விரத மற்றும் முக்கிய நாள்களில் சமையலறைக்குள் பயன்படுத்தாத மச்சம் புழங்கிய பாத்திரங்களை வைக்கவும் வீட்டின் வெளியே அமைக்கப்பட்ட தட்டி பயன்படுத்தப்பட்டது.

நகர மயமாகி விட்ட இன்றைய உலகில் தமிழர்களின் வீட்டுப் பாரம்பரியம் மட்டுமல்ல, கிராமங்களே அழிந்து கொண்டிருக்கின்றன. இதனால் தட்டிக்குப் பதிலாக சிமெந்து கட்டுக்கள் வந்துவிட்டன. எனினும் வன்னி, தீவகம், யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களில் வீட்டின் வெளியே இன்றும் தட்டிகள் உயிர்ப்புடன் இருக்கின்றன.



# மானிப்பாய்

யாழ். நகரிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது மானிப்பாய். நகரமும் கிராமமும் இணைந்ததாக உள்ள மானிப்பாயைச் சூழ சண்டிலிப்பாய், நவாலி, சுதுமலை, உடுவில், ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளன. மானியம் பெற்ற ஊர் என்பதன் அடிப்படையில் மானிப்பாய் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். முன்னர் பிராமணர்கள் - மடப்பள்ளி சமையலாளர்களை மானி என்று அழைத்தனர். அவர்கள் குடியிருந்த நிலம் என்பதால் மானிப்பாய் ஆகியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் முதல் ஆங்கில மருத்துவமனையை சாமுவேல் பிஸ்க் கிறீன் 1864 இல் மானிப்பாயில் நிறுவினார். இங்கு மாணவர்களுக்கு மருத்துவமும் கற்பிக்கப்பட்டது. இன்றும் இந்த மருத்துவமனை டாக்டர் கிறீன் நினைவு மருத்துவமனை என்ற பெயருடன் இயங்கி வருகின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, மானிப்பாய் நூலகம் என்பன கல்வித்துறைக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றன. ஈழத்தின் முதல் அகராதியான மானிப்பாய் அகராதி அல்லது யாழ்ப்பாண அகராதி 1842 இல் இங்கேயே தோற்றம் பெற்றது.

ஈழத்தின் முதல் தமிழ் இதழியலாளராகக் கருதப்படும் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை மானிப்பாயைச் சேர்ந்தவர். இவர் எழுதிய 'பாவலர் சரித்திர தீபம்' புகழ்பெற்றது. முதலியார் நமசிவாயம், சேர். அருணாசலம் மகாதேவன், ஏ.மாணிக்கவாசகர் ஆகியோர் புகழ்பெற்றவர்கள்.

தமிழரின் போராட்ட வரலாற்றில் மானிப்பாய் பெரு முக்கியத்துவம் பெற்றது. அப்பையா அண்ணை என புலிகளால் அழைக்கப்பட்ட லெப். கேணல் அப்பையா (ஐயாத்துரை இராசதுரை) இந்த இடத்தை சேர்ந்தவரே.

மருதடி விநாயகர் ஆலயம், புனித பேதுரு பவுல் தேவாலயம் என்பனவுடன் பல இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளன. இங்குள்ள செல்லமுத்து விளையாட்டு மைதானம் பிரசித்தி பெற்றது.



# மூக்குப்பேணி



வடக்கு மக்களின் நாளாந்த பாவனையில் இருந்து வழக்கொழிந்து போன பொருள்களில் மூக்குப்பேணியும் ஒன்று. தேநீர், தண்ணீர், மோர் முதலான நீராகாரங்களைப் பருக இந்தப் பேணியைப் பயன்படுத்தினர். விருந்தினர்களை உபசரிக்கும்போது மூக்குப் பேணிகளுக்கு தனியான இடத்தை முன்னர் வடக்கு மக்கள் வழங்கினர்.

வாய்ச் சுகாதாரத்தை பேணுவதில் மூக்குப்பேணிக்கு சிறப்பான இடமுண்டு. நீராகாரத்தை சிந்தாமல் குடிப்பதற்கு இலகுவானது. இதன் வடிவத்தின் காரணமாக பானங்களை அருந்தும்போது புரையேறாது. பொதுவாக மூக்குப் பேணிகள் செப்பு, பித்தளையிலேயே வடிவமைக்கப்படுகின்றன. இதனால் சூடான, குளிரான பானங்களின் தன்மையை அதிக நேரம் கெடாது தக்க வைத்திருக்கும். தவிர அதன் சுவையும் மாறுபடாது என்பதுடன் பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தாது.

1990களில் அருகத் தொடங்கிய மூக்குப் பேணி பாவனை இன்று முற்றாக இல்லாது போய்விட்டது. இன்று சிலர் இதன் முக்கியத்துவத்தை உணராது கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருப்பது வேதனைக்குரியது.

# தட்டை வடை



உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற ஈழத்து உணவில் (பருத்தித்துறை வடை) தட்டை வடைக்கு தனியான இடம் உண்டு. யாழ்ப்பாணம் - வடமராட்சியின் பருத்தித்துறை மக்களே இந்த தட்டை வடையை அறிமுகப்படுத்தினர். இதனால் அந்த இடத்தின் பெயராலேயே 'பருத்தித்துறை வடை' எனவும் அழைக்கப்படுகின்றது.

முன்னர் யாழ்ப்பாணம் - வடக்கு - ஈழத்தில் பிரபல நொறுக்குத் தீனியாக இருந்த இந்த வடை புலம்பெயர் மக்களால் உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றுள்ளது.

**செய்முறை**

உழுந்து - 1/2 சுண்டு,
அவிக்காத வெள்ளை மா - 1 சுண்டு
செத்தல் மிளகாய் பொடி - 2 தே. க.
பெருஞ்சீரகம் - 1 மே.க.
உப்பு - தே.அளவு
கறிவேப்பிலை - சிறிது ( பொடியாக வெட்டியது)
எண்ணெய் - தே.அளவு

செய்முறை :-

- உழுந்தை 2 மணி நேரம் ஊற வைக்கவும்.
- உழுந்து ஊறியதும் அத்துடன் மற்றைய பொருட்களை சேர்த்து 3 மே.கரண்டி எண்ணெய் விட்டு நன்றாகக் குழைக்கவும்.
- சிறிய பாக்களவு உருண்டைகளாக உருட்டி, பூரிக் கட்டையால் அழுத்தி வட்டமாக்கி ( மெல்லியதாக) கொள்ளவும்.
- அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் விட்டு ,கொதித்ததும் தட்டி வைத்துள்ள வடைகளை போட்டு பொன்னிறமானதும் எடுக்கவும். (அடுப்பு மிதமான சூட்டில் இருப்பது அவசியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிந்த நினைவுகள்

■ நோக்கன்



**1977** ஆம் ஆண்டு நடைபெற்ற வன் செயலைத் தொடர்ந்து ஆயுதரீதியிலான அடக்குமுறையுடன் அறிவு ரீதியான ஒடுக்குமுறையும் சமாந்தரமாகத் தொடங்கி விட்டது எனலாம். ஓர் இன ஒழிப்பு நடவடிக்கை என்பது தொலை தூர நோக்கோடு எதிரிதரப்பில் பார்க்கப்பட்டது. சிந்திக்கவிடாத சூழ்நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட வேண்டும் என்ற திட்டத்தின்படி, தமிழினம் அறிவு ரீதியாக ஒரு மந்தநிலையை அடைய வேண்டும் என்று எண்ணி அதற்கென எதிரி குண்டர்படை ஒன்றையும் தயார் செய்து கொண்டான். அதில் கோடரிக் காம்புகள் சிலவும் இடம்பிடித்திருந்தன.

யாழ்.பொது நூலகம் அப்படித்தான் எரிக்கப்பட்டது. யாழ்.நூலகம் எரிக்கப்பட்டு முப்பத்தி ஆறாண்டுகள் கழிந்த நிலையிலும் அந்த எரிப்பின் நினைவுகள் மக்கள் மனதில் இன்னும் மாறா வடுவாய் மனதைக் குடைந்து கொண்டிருக்கின்றது. உலகளவில் இருக்கின்ற புத்திஜீவி என்ற கூட்டத்துக்குள் இருப்பவர் எவரும் இந்தக் கொடூரச் செயலை மன்னிக்க மாட்டார்கள். இனிவருங்காலத்தே அந்த நூலகத்தை ஒரு தங்கமுலாம் பூசப்பட்ட கட்டடமாகக் கட்டியெழுப்பினாலும் இந்த எரிப்புச் சம்பவமானது ஓர் இனப்படுகொலையைவிட மோசமாகவே கருதப்படுகிறது. உயிர்க் கொலைகள் கூட காலவோட்டத்தில் மறக்கப்பட்டுவிடும். ஆனால் ஒரு சமூகத்துக்கு ஏற்படுத்தப்பட்ட அறிவுச் சிதைவை மக்கள் மறந்துவிடுவதற்குத் தயாரில்லை என்ற மனப்பாங்கே அதிகம் காணப்படுகிறது. ஆயுதம் ஏந்திப் போராடத் திராணியற்ற அரக்கர் கூட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட இந்த அறிவுக் கொலையின் பின்னணியில் அன்று பேரினவாத எண்ணம் கொண்ட புத்திஜீவிகளே அதிகம் இருந்தனர். பின்னர் அவர்கள் கொலை செய்யப் பட்டாலும் தமிழினத்துக்கு ஏற்பட்ட அந்தப் பெரும் இழப்பு இன்றுவரை ஈடுசெய்யப்படவில்லை என்பதைவிட எரிந்துபோன 97 ஆயிரம் நூல்களை மீட்பது என்றுமே ஈடுசெய்யமுடியாததே.

யாழ். நூலகம் என்பது ஒரு ஜீவனுள்ள நிறுவனம் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. கே.எம்.செல்லப்பா என்னும் நூல் ஆர்வலரொருவர் தனது வீட்டு அறையொன்றினுள் தன்னுயிரினிலும் மேலாகப் போற்றிப் பாதுகாத்து வந்த நூல்களும், சுவடிகளுமே யாழ்.நூலகத்தின் ஆரம்ப அடிகள் எனலாம். 1933 ஆம் ஆண்டில் தனது வீட்டில் சில நூல்களுடன் அவர் நடத்திவந்த நூல் நிலையத்தைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில் செல்லப்பா அவர்களும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து செயற்பட்டு இந்த நூல் நிலையத்தை யாழ்.நகரின் மத்தியில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு சிறிய அறையொன்றுக்கு மாற்றினார்கள். அக்காலத்தில் சில நூறு நூல்களே அங்கிருந்தன.

1936இற்குப் பின்னர் நூலகம் யாழ்.நகரசபையிடம் கையளிக்கப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகே புதிதாகக் கட்டப்பட்ட நகர மண்டபத்துக்கு அண்மையிலுள்ள இடமொன்றுக்கு மாற்றப்பட்டது. நிறுவனத்துக்கான அடிப்படைகளைத் தீர்மானித்து வழிநடத்தும் நோக்கில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பல் கல்வியியலாளர்களையும் பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று 1953 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்குழு இது தொடர்பில் இந்திய நிபுணர்களினதும் உதவிகளைப் பெற்றுக்கொண்டது. கட்டடத்தை இரண்டு கட்டங்களில் கட்டமுடிக்கத் தீர்மானித்து முதற்கட்டமாக கட்டடத்தின் முன்பகுதிக்கான அடிக்கல் 1953 மார்ச் மாதத்தில் நடப்பட்டது. இதற்கான கட்டடத்தை வடிமைக்கும் பணி இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டடக்கலைஞர் நரசிம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது திராவிடக் கட்டடக் கலைப் பாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டடமொன்றை இவர் வடிவமைத்தார். கட்டட வேலைகள் தாமதமாகவே நடைபெற்றன. 1959 இல் கட்டட வேலைகள் முற்றாக முடிய முன்னரே அப்போது யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தின் திறப்புவிழாவை நடத்தினார். அங்கே நூற்றுக் கணக்கான புத்தகங்கள் வைப்பிலிடப்பட்டன. கல்வி அழகுள்ள சமூகமாக எமது தமிழ் சமூகத்தைக் காணவிளைந்ததன் விளைவு பலர் புத்தகங்களைக் கொடுத்துதவினர். தமிழர்களின் கலாசாரக் குறியீடுகளில் ஒன்றாகவும், ஆசியாவின் மிகச்சிறந்த நூலகமாகவும் இது கருதப்பட்டது. ஈழத் தமிழர்களின் பெருமை தருகின்ற விடயங்களில் ஒன்றாக யாழ்.நூலகத்தைச் சொல்லலாம்.

யாழ்ப்பாணத்தில் மாவட்ட சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. பிரசாரம் உச்சத்தில் இருந்தது. தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிங்களக் காவலர்கள் வந்திருந்தனர். 31 மே 1981 அன்று தமிழர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் சிங்களக் காவலர் ஒருவர் மரணம் அடைந்தார். கொத்துக் கொத்தாக வந்த சிங்களக் காவலர்கள், இராணுவத்தினர், இனவெறியர்கள், வன்முறையாளர்கள் என்று அத்தனை பேரும் தமிழர்கள் மீது ஆவேசத் தாக்குதலில் ஈடுபட்டனர். முதலில் புத்தகக் கடைகளைக் குறிவைத்தனர். அடுத்தது, பத்திரிகை அலுவலகம். இலங்கையில் முதல் தமிழ்ப் பத்திரிகை என்ற பெருமைக்குரிய ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தீக்கிரையானது. யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலுக்குத் தீவைத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டது. வாகனமும் எரிக்கப்பட்டது. அக்கம்பக்கத்தில் தென்பட்ட தமிழர்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

பின்பு நீண்டகாலமாகத் திருத்தப்படாமலிருந்த பொது நூலகக் கட்டடம் "தீக்கிரையாக்கப்பட்ட வடிவத்திலேயே பாதுகாக்கப்பட வேண்டும்" என்பது பலரின் விருப்பமாக இருந்தது. அதை ஓர் இன ஒழிப்பின் அடையாளமாக வைத்திருக்க விரும்பியவர்கள் எண்ணத்தில் மண்ணைத்தூவப் புறப்பட்டவனும் ஒரு தமிழனே. அது சிங்கள பேரினவாதிகளின் ஆசீர்வாதத்துடன் நடந்தேறியது. கட்டடம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டாலும், முன்னைய கனதியை இங்கு காண முடிவதில்லை. போரும், போருக்குப்பின்னால் ஏற்பட்ட சமூகமாற்றங்களிலும் நூலகமும், நூலகத்தின் தேவையும் குறைந்து போய்விட்டன. உலகமயமாதல் என்ற கோஷத்தில் மேலெழுந்திருக்கின்ற தொழில்நுட்ப வளர்ச்சியும் நூலகத்தின் தேவையைக் குறைத்துவிட்டதாக மக்கள் நம்புகின்றனர். இருந்தும் எமது சமூகப் பண்பாட்டின் அடையாளமாகக் கருதி வளர்க்கப்பட்ட யாழ். பொது நூலகம். எமது மண்ணின் அடையாளமாகப் போற்றப்பட்ட நூலகம். காலாகாலமாய் பல தமிழ் புத்திஜீவிகளையும், தமிழ் ஆய்வாளர்களையும் உருவாக்கிய நூல் நிலையம். அறிவுப் பசியோடு வந்த பொருளாதாரமற்ற பலருக்கு பசியைப் போக்கி அவர்களை மானமுள்ளவர்களாகச் சமுதாயத்தில் தலை நிமிர ஊன்றுகோலாயிருந்த நூலகம். பழம்பெரும் சுவடிகளின் காப்பகமாகவிருந்த நூல்நிலையம் தீய உள் நோக்கம் கொண்டு தீக்கிரையாக்கப்பட்டு தீரா வலியை உண்டாக்கி இன்றுடன் ஏறத்தாழப் பன்னிரண்டாயிரம் நாள்கள் பறந்துவிட்டாலும் நாவினால் சுட்ட வடுவிலும் விட இந்தத் தீயினால் சுட்ட வடு மிகவும் மோசமானது. தலைமுறைகளாக உணரப்படுகின்ற வலி இது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பும் புலிகளும்

# புலிகளும் ஈ.பி.ஆர்.எவ்வும்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கோட்டைப் பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்பு!**

ஐந்தாவது முரண்பாடு யாழ். கோட்டைக்கு வெளியேயான காவலரண் பகுதியில் நடைபெற்றது. இரவு நேரம் காவலில் இருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப் பதுங்கிப் பதுங்கிச் சென்ற ஈ.பி. ஆர்.எல்.எவ்.வினர் புலிகளின் பக்கமாக வந்து விட்டனர். படையினரின் சீருடையை ஒத்ததாக அவர்களின் உடையும் காணப்பட்டது. இதனால் காவலரணில் இருந்த புலிகள் உறுப்பினர் ஒருவர் இவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார். இதில் அமீன் என்ற ஈ.பி.ஆர். எல்.எவ். உறுப்பினர் உயிரிழந்தார். ஒரு களத்தில் கட்டளையிடும் தரப்பு ஒன்றாகவே இருக்க வேண்டும் அல்லது தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்து அடுத்த தரப்பினருக்குத் தெரிவிக்க வேண்டும். ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் எவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதற்கு இது ஓர் உதாரணம். ஏனெனில் கள நிலைமை அவ்வாறு இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் பின்னாளில் இதே காவலரணில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். இதிலிருந்தே சூழ்நிலையின் விபரீதத்தைப் புரியலாம்.

**தலை குனிந்தபடி துண்டுப் பிரசுரம் வாங்கிய இயக்கங்கள் !**

அமீனின் உயிரிழப்பைத் தொடர்ந்து டக்ளஸ் தலைமை தாங்கிய ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் மக்கள் விடுதலைப் படை தட்டா தெருச் சந்தியில் புலிகளின் முகாமுக்குக் காவலாக நின்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. 21.02.1986 அன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் சுரேன் ( திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - அம்பாள் வீதி நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்) என்ற புலி உறுப்பினர் உயிரிழந்தார். அடுத்த நாள் தட்டாதெருச் சந்தி வழியாக சுரேனின் சடலத்தைத் தாங்கிய வாகன அணி புறப்பட்டது. அதே சமயம் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினரின் வாகன அணியும் மானிப்பாய் வீதியிலிருந்து தட்டாதெருச் சந்திக்கு வந்தது. அதில் அமீனின் சடலம் இருந்திருக்க வேண்டும் போல இருக்கிறது. இரு வாகன அணிகளும் ஒன்றையொன்று விலத்திச் சென்றன. அச்சமயம் அப்பகுதி மக்கள் “போராளிகளே உங்களுக்குள் முரண்படாதீர்கள். அது எமக்கு வேதனையளிக்கிறது” என்ற கருத்துப்பட உள்ள வாசகங்களைத் தாங்கிய துண்டுப் பிரசுரங்களை இரு பகுதியினருக்கும் வழங்கினர். இரு பகுதியினரும் தலையைக் குனிந்தபடி அதனை வாங்கினர்.

ரெலோவுடனான மோதலின் பின் புலிகள் கிராமம் கிராமமாகக் கருத்தரங்குகளை நடத்தி வந்தனர். அச்சமயம் மலரவன் தலைமையில் உரும்பிராய் வைரவர் கோவிலடியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அமீனின் மீதான துப்பாக்கிப் பிரயோகம் குறித்து ஒருவர் வினாவெழுப்பினார். “வவுனியாவில் நீங்கள் சுட்ட ரீகனும் பலஸ்தீனப் பயிற்சி பெற்றவர். கோட்டையில் உயிரிழந்த அமீனும் அவ்வாறானவரே. அத்தனை பேர் வந்துகொண்டிருந்த போது அமீனுக்கு மட்டும் எப்படி சூடுபட்டது?”

இக்கேள்விக்கு புலிகள் உறுப்பினர் ஒருவர். “அமீனைச் சுட்டதே பிழையெனக் கருதுகிறோம் நாங்கள். உங்களது கவலை ஏனையவர்களுக்கும் ஏன் சூடுபடவில்லை என்பது” எனப் பதிலளித்தார். வாயடைத்து நின்றார் வினாவெழுப்பியவர்.

● ● ●

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைத் தடைசெய்தது. ஏன் என்பது பற்றி கிட்டு கூறிய விளக்கம்

வடக்கில் பெருமளவு இரத்தம் சிந்தப்படவில்லை. கிழக்கின் நிலை மாறுபட்டிருந்தது.

இந்திய இராணுவத்தின் வருகையைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர் களமிறக்கப்பட்டனர். மண்டூர் போன்ற இடங்களில் இந்திய இராணுவத்தினர் இருக்கும் தைரியத்தில் புலிகளின் பணிமனைகளைத் தேடி வந்து முரண் பட்டுக்கொண்டனர். இதனால் பதிலடி கொடுக்க நிர்பந்திக்கப்பட்டனர் புலிகள்.

சண்டை தொடங்கி இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தினமும் கொலைக்களம் தான். இந்தியப் படையினரால் கைதாகி தடுப்பில் இருந்த இருவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது கடத்திச் செல்லப்பட்டு (இரு வெவ்வேறு சம்பவங்களில்) படுகொலை செய்யப்பட்டனர். கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த குலசேகரம் நாகேந்திரன் (கண்ணன்), யாழ்.ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த ராசா (பாலசுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன்) ஆகியோரே இவ்வாறு படுகொலையானோர். பிரபல பொருளியல் ஆசிரியர் கிருஷ்ணானந்தன் ( யாழ். கச்சேரியடி) இடைக்கால நிர்வாகசபைக்குப் புலிகளால் பெயரிடப்பட்ட சிவானந்தசுந்தரம் (வல்வெட்டித்துறை), அரசு புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தவரான தனபாலசிங்கம், (காங்கேசன்துறை) “தம்பி கொழும்பில்” பகும் நாடக இயக்குநரும் நடிகருமான குமார் தனபால் (அரியாலை) போன்றோர் ஈ.பி.ஆர்.எல். எவ்வினரால் கொல்லப்பட்டனர்.


பாஷையூரைச் சேர்ந்த லோங்கன் முதலானோர் இந்தப் படுகொலைகளை நிகழ்த்தினர். மண்டையன் குழு என இவர்கள் மக்களால் குறிப்பிடப்பட்டனர். ஏழாலை - குப்பிளான் பகுதியில் புலிகளின் உறுப்பினர் லோலோக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தது. இவர் இந்தியப் படையினர் மீது பல தாக்குதல்களை நடத்தி வந்தார். ஒரு வீட்டுக்குப் புலி உறுப்பினர் போலச்சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர் “லோலோ அண்ணை சாப்பாட்டுப் பார்சல் வாங்கிவரச் சொன்னார்” என்று அந்தக் குடும்பத் தலைவியிடம் கூறினர். அந்த வீட்டில் சமையல் முழுமையாக முடியவில்லை. வேலிக்குள்ளால் அடுத்த வீட்டுப் பெண்மணியிடம் சொன்னார் அவர். அந்த வீட்டிலும் அதே நிலைதான். அங்கே காய்ச்சி முடிந்த கறியைக் கொண்டுவந்து இரு வீட்டுச் சமையலும் சேர்ந்த உணவுப்பொதிகளைக் கட்டினர். ஒரு பையில் போட்டு இவர்களிடம் கொடுத்ததும் இரு பெண்களையும் சுட்டுக்கொன்று விட்டு உணவுப் பொதிகளுடன் சென்றனர் ஈ.பி.ஆர்.எல். எவ்வினர்.

**காணாமல்போன முஸ்லிம் யுவதி !**

மட்டக்களப்பில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. நகரின் காந்தி சிலைக்கு அண்மையில் சைக்கிள் வாங்கச் சென்றனர் காத்தான்குடியைச் சேர்ந்த ரிபாயா, அரசடியைச் சேர்ந்த சுகுணா ஆகியோர். அந்தக் கடை வாசலில் இவர்களைக் கண்ட (தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினர்) இரா.துரைரத்தினம் ஒரு விசாரணை இருப்பதாகவும் தங்களுடன் முகாமுக்கு காரில் வர வேண்டும் எனவும் சொன்னார். இவர்கள் “தாங்கள் நடந்து வருவதாகச் சொன்னார்கள்” இரா.துரைரத்தினமும் இன்னும் ஒருவரும் இவர்களுடன் சேர்ந்து நடந்து வாவிக்கரை வீதியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் முகாமுக்குச் சென்றனர். (இந்த முகாம் தற்போதும் ஈ.பி.ஆர். எல்.எவ் வினரின் பணிமனையாகப் விளங்குகிறது.) அங்கு போனவுடனேயே சுதந்திர பறவைகளில் ஒன்றைக் கொண்டுவந்துள்ளதாக தொலைபேசி மூலம் யாருக்கோ தகவல் அனுப்பப்பட்டது. இவர்கள் இருவரும் சித்திரவதைக்கு உள்ளானார்கள். இவர்களை ஈ.பி.ஆர். எல்.எவ் வினர் கொண்டு சென்ற விடயம் பிரஜைகள் குழுப் பிரமுகர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ அவர்களுக்குப் தெரிவிக்கப்பட்டது.

அவர் இந்தியப் படையின் அதிகாரிகளுடன் வந்து சேர்ந்த போது சுகுணா மயக்க நிலையில் காணப்பட்டார். ரிபாயாவைக் காணவில்லை. இன்று வரை அந்த மர்மம் துலங்கவில்லை. இவ் விட யத்தில் இந்தியப் படையினருடன் தொடர்பு கொண்ட வண . பிதா சந்திரா பெர்னாண்டோ 06.06.1988 அன்று மட்டக்களப்பு மத்திய வீதியில் அமைந்துள்ள மாதா தேவாலயத்தினுள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.


சந்திரா பெர்னாண்டோ


கப்டன் லோலோ

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சுகுணா என்பவர் கண்ணன்/மயூரன் (சீனித்தம்பி ஜீவராஜ்) என்பவரின் சகோதரி.14.11.1990 அன்று புலிகளின் பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்தில் கண்ணன் உயிரிழந்தார். இக் காலகட்டத்தில் சுகுணாவும் இயக்கத்தில் இணையும் சூழ்நிலை ஏற்பட்டது. ஈ.பி. ஆர்.எல்.எவ். மீண்டும் மட்டக்களப்பில் அரச படைகளுடன் இணைந்து இயங்கத் தொடக்கி விட்டதால் வேறு வழி இருக்கவில்லை. இவருக்கு வாஸந்தி எனப் பெயர் சூட்டப்பட்டது. பெண்கள் புனர்வாழ்வு நிறுவனப் பணிகளில் இவர் தீவிரமாக உழைத்தார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் செயலர் சௌந்தரராஜன் ஈரோஸ் சார்பாக 1989 பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். இவருக்கு ஆதரவாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் D.S. வணசிங்கா செயற்பட்டார். இவர் 31.03 .1989 அன்று வெயிலி வீதி, அரசடியில் உள்ள தனது வீட்டில் வைத்து ஈ. பி.ஆர்.எல் .எவ் வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் வை வழிநடத்திய இரா.துரைரத்தினமும், ஆசிரியர் சௌந்தரராஜனும் இணைந்து ஒரே கட்சியில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். 13.05.1988 அன்று பாடசாலை அதிபரும், மக்கள் குழுத் தலைவருமான மாசிலாமணி கனகரத்தினம் (ஆரையம்பதி) ஈ.பி.ஆர்.எல்.எவ் வினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன் பின் மக்கள் குழுத் தலைவராக விளங்கிய கணபதிப்பிள்ளை அதிபரும் (ஆரையம்பதி) ஈ.பி.ஆர்.எல்.எவ் வினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். கொம்மாந்துறையைச் சேர்ந்த தேவிசுதன் (கிராம அலுவலர்), சத்தியன் (மாணவன்) ஆகிய இருவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் சந்துருவினால் கடத் தப்பட்டுக் காணாமல் போனார்கள்.

ஏற்கெனவே களுதாவளையைச் சேர்ந்த முத்துலிங்கம் என்பவரும் ஈ.பி. ஆர்.எல்.எவ் வினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயணம்

ஐ.பி.எல் தொடரில் ஒவ்வொரு அணியும் சொந்த மைதானத்தில் 7 போட்டிகளையும் ஏனைய அணிகளின் மைதானங்களில் 7 போட்டிகளையும் விளையாடி வருகின்றமை வழமையான ஒன்றே. ஆனாலும் சொந்தமண்ணில் மட்டும் தொடர்ச்சியாக 7 போட்டிகளோ அல்லது ஏனைய மைதானங்களில் மட்டும் தொடர்ச்சியாக 7 போட்டிகளோ நடைபெறுவதில்லை. மாறாக இரண்டு மைதானங்களிலும் போட்டிகள் மாறி மாறி நடைபெறுவதனால் ஒவ்வொரு அணியும் பல கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில் இவ்வருட ஐ.பி.எல் தொடரில் ஒவ்வொரு அணியும் மேற்கொண்ட தூரவிபரங்கள் சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கொல்கத்தா நைற்றைடர்ஸ் | - 15,223 Km |
| சன்றைசர்ஸ் | - 12,815 15,223 Km |
| குஜராத் லயன்ஸ் | - 12,054 Km |
| கிங்ஸ்லெவன் பஞ்சாப் | - 11,558 Km |
| றோயல் சலஞ்சர்ஸ் | - 10,832 Km |
| றைசிங் புனே சுப்பர்கியன்ற் | - 9,024 Km |
| மும்பை இந்தியன்ஸ் | - 8,205 Km |
| டெல்லி டேர்டெவில்ஸ் | - 7,952 Km |

இதன் பிரகாரம் டெல்லி டேர்டெவில்ஸ் அணி பயணித்த தூரத்தின் இரண்டு மடங்கு தூரத்தை கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணி பயணித்துள்ளமை தெரியவந்துள்ளது. போட்டி நடைபெறும் நகரங்களின் புவியியல் ரீதியான அமைவிடங்களைக் குற்றஞ்சுமத்த முடியாது என்றாலும் வீரர்களுக்கு ஏற்படும் பிரயாணக்களைப்பு போட்டிகளின் முடிவில் தாக்கத்தைச் செலுத்தக்கூடும் என்ற சந்தேகம் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே இதற்குத் தீர்வாக வீரர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் போட்டிகளுக்கிடையிலான நாட்களின் இடைவெளியை அதிகரிக்க வேண்டும் என்ற யோசனையும் தோன்றி உள்ளது. ஆனாலும் ஏற்கனவே சுமார் 2 மாத காலப்பகுதியை ஐ.பி.எல் போட்டிகள் ஆக்கிரமித்துள்ள நிலையில் நாட்களின் இடைவெளியை அதிகரித்தால் தொடரின் காலப்பகுதி இன்னமும் நீண்டு செல்லும் அபாயமும் உள்ளது. எனவே இது ஒரு நுணுக்கமான பிரச்சினை என்பதனால் எதிர்வரும் ஐ.பி.எல் தொடர்களில் இது விவாதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு.



# சந்திப்பு

நடைபெற்று முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி வழமைபோன்று பிளே ஓவ்ஸ் சுற்றுக்கு இம்முறையும் முன்னேறவில்லை. குயின்ரன் டீ கொக், டுமினி போன்ற முக்கியமான வீரர்கள் காயம் காரணமாகவும் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் தொடரில் இருந்து விலகியதால் இளம்வீரர்களைக் கொண்டே விளையாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இரண்டு போட்டிகளில் அணி 100 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தாலும் சில போட்டிகளில் வெற்றிக்கு அருகில் வந்து தோல்வியடைந்திருக்கின்றார்கள். இளம் வீரர்களின் செயற்பாட்டில் பயிற்சியாளரான ராகுல் டிராவிட் திருப்தி அடைந்தாலும் அது பிளேஓவ்ஸ் சுற்றுக்கு எந்த வகையிலும் கைகொடுக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதே.

டெல்லி டேர்டெவில்ஸ் அணி இத்தகைய பின்னடைவைச் சந்தித்தாலும் அணிக்கு அனுசரணை வழங்கிய நிறுவனங்களில் ஒன்றான Mother Dairy நிறுவனம் ஒரு காரியத்தை செய்திருக்கின்றது. விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் இந்நிறுவனம் விவசாயிகளின் அர்ப்பணிப்பு, விடாமுயற்சி என்பவற்றுக்கு மதிப்புக்கொடுக்கும் வகையில் டெல்லி வீரர்களைச் சந்திப்பதற்கு விரும்பிய டெல்லியில் உள்ள விவசாயிகள் சிலருக்கு வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த நிகழ்வில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பில் அணித்தலைவர் சஹீர்கான், சஞ்சு சாம்ஸன், ஸ்ரேயாஸ் ஐயர், கருண் நாயர், கோரி அண்டர்சன் ஆகிய வீரர்கள் கலந்துகொண்டனர். விவசாயிகள் இந்தியப் பாரம்பரிய ஆடையுடன் நீல நிற தலைப்பாகை அணிந்து கம்பீரமான தோற்றத்தில் காட்சி அளித்திருந்தார்கள். முன்னதாக இந்த ஐ.பி. எல் தொடரில் டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளுக்கு தமது ஆதரவை டெல்லி வீரர்களுக்கு விவசாயிகள் வழங்கி வந்திருந்தார்கள். நிகழ்வில் துடுப்புமட்டை மற்றும் பந்து அடங்கலான மைதான வடிவ கேக் ஒன்று விவசாயிகளால் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. நிகழ்வில் சஹீர்கான் விவசாயிகளின் உன்னத பங்களிப்புக் குறித்து பேசியதோடு வீரர்கள் தமது கையொப்பமிட்ட சிறிய துடுப்பு மட்டைகளையும் பரிசாக அளித்திருந்தனர்.

இந்தியா ஒரு விவசாய நாடு. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் விவசாயத்திற்கு நீர் இல்லை ஆனால் ஐ.பி.எல். போட்டிகளின் மைதானப் பராமரிப்புக்காக அதிகளவு நீர் பயன்படுத்தப்படுகின்றது என்று விவசாயிகள் சிலர் போர்க்கொடி தூக்கி இருந்தார்கள். இறுதியில் இந்தப் பிரச்சினையில் நீதிமன்றம் தலையிட்டு தீர்ப்பு வழங்கும் அளவுக்குச் சென்றிருந்தது. ஆனால் இன்று அதே ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடிய வீரர்களைச் சந்தித்து விவசாயிகள் கலந்துரையாடியமையை நோக்கும் பொழுது ஒரு வகையில் இது அவல நகைச்சுவையாகவும் தோன்றுகிறது.

தொகுப்பு:
விமலன்



# ஆடிய அடங்கிய கால்கள்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் பாகிஸ்தான் அணியின் சிரேஷ்ர வீரர்களான மிஸ்பா உல் ஹக்கும் யுனிஸ்கானும் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெற்றிருந்தனர். விளையாட்டிலிருந்து வீரர்கள் ஓய்வு பெறுவது வழமையானது என்றாலும், இரண்டு வீரர்கள் ஒரே போட்டியில் ஓய்வு பெறுவது அபூர்வமானதே. என்றாலும், கிரிக்கெட் உலகிற்கு இது ஒன்றும் புதிதில்லை. 2014 ஆம் ஆண்டு பங்களாதேஸில் நடைபெற்ற உலகக் கிண்ண இருபது 20 இறுதிப்போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதும் மகேலவும் சங்ககாரவும் ஓய்வு பெற்றிருந்தமை நாம் அறிந்ததுதான்.

இதைவிட ஆச்சரியமாய் சென்றவாரம் ஒரே போட்டியிலேயே மூன்று வீரர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்கள். ஆனாலும் இது நடந்தது கிரிக்கெட்டில் அல்ல, உதைபந்தாட்டப் போட்டியில். ஜேர்மனியில் நடைபெறும் புன்டெலிஸ்கா உதைபந்தாட்ட லீக் தொடரில் பேயோர்ண் மூனிச் அணிசார்பில் விளையாடி வந்த பிலிப் லாம், சபி அலோன்ஷா மற்றும் ரொம் ஸ்ராக் ஆகிய மூன்று வீரர்களுமே ஒரே போட்டியில் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்கள். 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மன் அணிக்குத் தலைமை தாங்கிய 33 வயதான பிலிப் லாம் சென்ற பெப்ரவரி மாதமே இந்தப் பருவ காலத்துடன் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்தார்.

அதுபோல 2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் 2008 ஆம் அண்டு , 2012 ஆம் ஆண்டு யூரோ கிண்ணத் தொடர்களில் கிண்ணம் வென்ற ஸ்பெயின் அணியில் இடம்பெற்ற 35 வயதான சபி அலோன்ஷ ாவும் பேயோர்ண் மூனிச் அணியின் கோல் காப்பாளர்களில் ஒருவரான 36 வயது ரொம் ஸ்ராக்கும் இந்தத் தொடரின் இறுதிப்போட்டியோடு ஓய்வு பெறப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்கள். இவர்களில் அதிகபட்சமாக பிலிப் லாம் 517 போட்டிகளில் பேயோர்ண் மூனிச் அணிக்காக விளையாடி இருந்தார்.

அந்தவகையில் இவர்கள் மூவருக்கும் சென்ற வாரம் நடைபெற்ற பிறிபேக் அணிக்கெதிரான போட்டி இறுதிப்போட்டியாக அமைந்திருந்தது. இப்போட்டியில் பேயோர்ண் மூனிச் 4 : 1 என்ற கோல்கணக்கில் வென்றிருந்தாலும் இந்தத்தொடரில் ஏற்கனவே பேயோர்ண் மூனிச் சம்பியனாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. புன்டெலிஸ்கா லீக் தொடரில் பேயோர்ண் மூனிச் சம்பியன் பட்டம் வெல்வது இது 26 ஆவது தடவையாகும். இந்தப் போட்டியின் முடிவிலேயே மூன்று வீரர்களுக்கும் சிறப்பான முறையில் பிரியாவிடை நிகழ்வு நடாத்தப்பட்டது.




2014ஆம் ஆண்டு ஜனவரி WWE போட்டிகளில் இருந்து விலகிய முன்னாள் சுப்பர்ஸ்ரார் சி.எம்.பங்கை மறுபடியும் WWE போட்டிகளுக்கு கொண்டு வருவதற்காக அவரிடம் சில தினங்களுக்கு முன்னர் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பேரம் பேசப்பட்டுள்ளது. இதற்கு சி.எம்.பங் சம்மதித்தால் எதிர்வரும் ஜுன் 10 திகதி ஆரம்பமாகவுள்ள 5 Star Wrestling tour போட்டிகளில் அவரை மீளவும் ரசிகர்கள் கண்டு களிக்க முடியும்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 27.05.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org